'இந்த யுத்தமானது முஸ்லீம் யுத்தம்', 'பிரிடிஷ் வெற்றி முஸ்லீம் வெற்றி', 'பிரிடிஷார் அழிந்தால் முஸ்லீம்கள் அழிந்துவிடுவார்கள்.' 'இதாலியர்களின் கொடுங்கோலை 100 வருஷங்களனுபவிப்பதைவிட மழையில்லாத கஷ்டத்தை ஒரு யுகம் அனுபவிக்கலாம்' என்று பலவாராக முஸ்லீம்கள் சொல்லிக்கொள்ளுவது காதில் படுகிறது. இதாலியர்கள் செய்த மோசத்தாலும், பிரான்ஸ் கவிழ்ந்த துர்ப்பாக்கியத்தாலும் யுத்தமானது மத்திய தரைக்கடலுக்குப் பரவியதிலிருந்து மேற்சொன்ன வார்த்தைகள் அடிக்கடி காதில் படுகின்றன. இந்த வாரத்தில், ஸிதி-எல்-பரானியில் இதாலியர்கள் முறியடிக்கப்பட்டது உண்மையே. இருந்தாலும் ஆரம்பம் முதற்கொண்டு எகிப்தின் மேல்தான் இவர்களுக்குக் கண். ஜெர்மானியர் ருமேனியாவுக்குள் நுழைந்ததிலிருந்தும் ரஷ்யா மௌனம் சாதிப்பதிலிருந்தும் துருக்கி மனங்கலங்கி நிற்கிறது. துருக்கியிலிருக்கும் டார்டனல்லைத் தாண்டினால் அப்பால் இராக், இரான், பாலஸ்தினம், அரேபியா வாகிய முஸ்லீம் நாடுகளை எதிர்க்க முடியும். இவைகளைப்படையெடுக்கும் உத்தேசத்தோடு இவைகளுக்கு முகத்துவாரம்போல் நிற்கும் கிரீஸை இதர்காகவே இதாலி படையெடுத்திருக்கலாம். இந்த முஸ்லீம் நாடுகளை எதிர்ப்பதால் அச்சு நாடுகளுக்கு இரண்டு விதமான லாபமுண்டு. இங்கிருக்கும் பிரிடனுக்கு உயிர் நிலையான ஸூயஸ் கால்வாயைப் பிடித்து பிரிடிஷ் ஸாம்ராஜ்யத்தை அழிக்கப் பார்க்கலாம். இந்தத் தேசங்களில் எண்ணெய் முதலிய இயற்கை ஐச்வர்யங்கள் இருக்கின்றன. இவைகளை அபகரிக்கவும் படையெடுக்கலாம். இந்தப் பிர

தேசத்தைப் பிடித்தவர்களுக்கு, பெர்ஸியன் குடாக்கடலுக்குப்போக இப்பொழுதிருக்கும் செங்கடலைக்காட்டிலும் குறுக்கு வழி கிடைத்து விடும். ரஷியாவுக்கு ஏற்கனவே அநேக முகம்மதியப் பிரஜைகளிருக்கிறார்கள். இந்தப் பிரதேசங்களையும் பிடித்துவிட்டால் ரஷியா மத்திய-ஆசிய சக்கிரவர்த்தியாக ஆயிவிடலாம்; அல்லது மத்தியதரைக்கடலுக்கும், செங்கடலுக்கும் இதாலி அதிபதியாகலாம்; அல்லது ஜெர்மனியின் ஸாம்ராஜ்யம் கிழக்கே பரவி, ஜப்பானின் ஸாம்ராஜ்யம் மேற்கே பரவி இருவரும் முஸ்லீம் நாடுகளின் மத்திய பாகத்தில், திட்டம் போட்டிருக்கும் 'புதிய-உலகியல்' படி, கைகூடி ஆலிங்கனம் செய்து கொள்ளலாம். இம்மாதிரியாக ஹிட்லருக்கும் அவரைச்சேர்ந்த சூழ்ச்சிக்காரர்களுக்கும் பகல் கனவு பலவுண்டு. ஊன்றிப்பார்க்குமளவில் ஆரம்பத்தில் ஜெர்மனியின் அக்கிரமங்களுக்கு ரஷ்யா கண்ணை மூடிக்கொண்டதும், பிறகு மூவரசு உடன்படிக்கை ஏற்பட்டதும் மத்திய-கிழக்குப்-பிரதேசங்களிலிருக்கும் முஸ்லீம் நாடுகளின் தலையில் கையை வைப்பதற்கென்று தெளிவாகிறது.

## இஸ்லாம் என்னவென்பது.

ஆனால் இம்மாதிரியாக யுத்தமானது பரவும் பக்ஷத்தில் முஸ்லீம்கள் பலமாய் எதிர்ப்பார்களென்பது நிச்சயம். இங்கு வசிக்கும் அராபிய ஜாதிக்கு, பிறருக்குக் கீழ்படிவதென்பதே தெரியாது. முற்காலங்களில் அஸ்ஸீரியர்கள், மீட்ஸ், பாரஸீகர், கிரேக்கியர்கள், ரோமர்கள், மகத்தான சைன்யங்களோடு படையெடுத்தும் இவர்களை ஆக்ரமிக்க முடியவில்லை. மேலும், சமீபத்தில் முஸ்லீம்கள் ஒற்றுமைக்காகவும், அராபியர்கள் ஒற்றுமைக்காகவும் பல இயக்கங்களும், கிளர்ச்சிகளும் ஏற்பட்டிருக்கின்றன. பாலைவன வாசிகளான அராபியர்களுக்கு உணர்ச்சியொன்று இப்பொழுது கிளம்பியிருக்கிறது. ஆனால் இதைப் புது உணர்ச்சி என்று சொல்லக்கூடாது. ஏற்கனவே பாலைவன 'பெடுயின்' அராபியர்களுக்குள்ள பிறவிக்குணம் தான். ஒரே பிராந்தியத்தில் பிறந்தவர்கள் என்றாவது, அல்லது ஒரே நாட்டைச் சேர்ந்தவர்களென்றாவது, இல்லாது உலகத்தில் சிதறிக்கிடக்கும் எல்லா முஸ்லீம்களும் ஒன்று சேரவும், அமைதியாய் வசிக்கவும், வேண்டுமானால் அதற்கு யுத்தம் செய்து சமாதானத்தைச் சாதிக்கவும் இந்த உணர்ச்சி வளர்ந்துகொண்டு வருகிறது. முற்காலத்தில் முஸ்லீம்களுக்கிருந்த வீராவேசமெல்லாம் இப்பொழுது புது வழியில் திரும்பி, ஸ்வதந்திரத்தையடைந்து ஒன்றுபட்டு வாழவேண்டுமென்ற புது ஆவேசமாய் மாறியிருக்கிறது. அச்சு நாடுகள் உஷாராயிருக்கட்டும்.

மேலும், முஸ்லீம் நாடுகளுக்குள் பெரிய முஸ்லீம் ஸர்க்கார் பிரிட்டனென்றும் அச்சுநாடுகளறிந்துகொள்ளட்டும். ஆசியாவிலும், ஆபிரிக்காவிலும், பல முஸ்லீம் நாடுகள் பிரிட்டனுக்குச் சொந்தமானவை. பாலஸ்தீனத்திலும், ட்ரான்ஸ்-ஜோர்டனிலும் லீக்-உத்திரவுபெற்று பிரிடன் ஆக்ஷிபுரிகிறது. இராக், துருக்கி, எகிப்த், தேசங்களைப் பாதுகாப்பதாக பிரிட்ன் வாக்குக் கொடுத்திருக்கிறது. இரானோடும், ஆப்கானிஸ்தானோடும், பிரிடனுக்கு நல்ல சிநேகம். மத்தியதரைக்கடல், செங்கடல், இந்திய சமுத்திரம் இவைகளைச் சுற்றியே முஸ்லீம்



நாடுகளிருக்கின்றன. இந்த மூன்று கடல்களிலும் பிரிடிஷ் ஆதிக்கத்துக்குட்பட்டவை. தரையிலும், கடலிலும், ஆகாயத்திலும் இந்த நாடுகளைப் பாதுகாக்க பிரிடனுக்கு முடியும்.

இஸ்லாமியர்கள் ஆத்ம சுகத்தையும் உலகாதிபத்தியத்தையும் சேர்ந்து நாடும் சுபாவமுள்ளவர்கள். ஆகவே இவர்கள் உலகமெல்லாம் வியாபித்து நிற்கிறார்கள். அநேக நூற்றாண்டுகளுக்குமுன் முகமத்நபியானவர் அரேபியாவில் அவதரித்து, பெரியதோர் மதத்தை ஸ்தாபித்து, பலர்களைச் சேர்த்து அரேபிய தேசத்தையும் ஒன்றுபடுத்தினார். இவருடைய சிஷ்யர்கள், இவருடைய காலத்துக்குப்பின்னால், புகழ்பெற்ற காலிப்களின் தலைமையின்கீழ், பல தேசங்களைப்பிடித்து அலெக்ஸாண்டரும், ரோமாபுரியும் கண்டிராத பெரிய முஸ்லீம் ஸாம்ராஜ்யத்தை ஸ்தாபித்தார்கள். இந்த ஸாம்ராஜ்யம் மேற்கே, ஜிப்ரால்டர், பாரீஸ்வரையிலும், கிழக்கே சைனா, (மத்திய பாகம்கூட) தென்கடல்வரையிலும், ஆபிரிக்காவில் வட, கீழ், மேற்கு பாகங்களிலும், மத்தியதரைக்கடலின் நான்கு கரைகளிலும் பரவி நின்றது. இவர்களுக்குப் பின்வந்த முஸ்லீம்கள், மற்றும், போர் செய்து, மேலும் வியாபாரத்தாலும், உபதேச வழிகளாலும் முஸ்லீம் உலகத்தைப் பெரிதாக்கினார்கள். ஆகவே, இக்காலத்தில் முகமதியர்கள் உலகத்திலுள்ள மூன்று கண்டங்களிலும் பார்க்கலாம். வெகு அப்பாலிருக்கும் பிலிப்பைன் தீவுகளிலும், ஹாங்காங்கிலும், ஈஸ்ட்-இந்தியத்தீவுகளிலும் இவர்களைக் காணலாம். பிரிடிஷ் கேந்திரஸ்தானமான சிங்கப்பூர் கோட்டை ஸ்தாபனத்தைச் சுற்றி ஸ்ட்ரெய்ட்-ஸெட்டில்மெண்ட்ஸ் நாடுகளும், பெடெரேடட், அன் பெடரேடட் நாடுகளுமிருக்கின்றன. இங்கு ஜொஹோர் என்ற முஸ்லீம் ஸமஸ்தானமிருக்கிறது. இங்கெல்லாம் முஸ்லீம்கள் ஏராளமாக வசிக்கிறார்கள். போர்னியோவிலும், ஸரபாக்கிலும் முகம்மதியர்கள் அதிகம்.

## முஸ்லீம் இந்தியா.

இந்திய மந்திரி மிஸ்டர் எல். எஸ். ஏமரி சொல்லியபடி ஆயிரவருஷங்களாக, படையெடுத்தும், பிடித்தும், குடியேறியும், இந்தியாவில் இஸ்லாம் ஊடுருவிப் பரவியிருக்கிறது. இந்தியாவானது ஒரு சிறுகண்டம் போன்றது. இங்கே இந்துக்களும் முகமதியர்களும் கலந்து வசிக்கிறார்கள். ஷீயா, சுன்னி, போரா, கோஜா, அஹ்ராரென்று பல வகுப்புக்களடங்கிய 77,000,000 முஸ்லீம்கள் இந்தியாவில் வசிக்கிறார்கள். இவர்கள் ஜனத்தொகையில் இந்தியாவில் நாலில் ஒரு பங்கு. முஸ்லீம் கவிகளாலும், ஞானிகளாலும், தபஸிகளாலும் இந்திய ஞான, நாகரிகச் செல்வம் உயர்ந்திருக்கிறது. பளிங்குக் கல்லால் செய்த ஸ்வப்ன-பிம்பம் போன்ற டாஜ்மஹால் இவர்கள் கட்டியது. இங்குதான் பாபரின் வீரமும் ஆக்பரின் செங்கோலும் பிரகாசித்தன. இங்கே உலகத்திலேயே சிறந்த முஸ்லீம் ஸமஸ்தானங்களிருக்கின்றன. ஹைதராபாத்தானது இங்கிலாந்து, வேல்ஸ் சேர்ந்த விஸ்தீர்ணமுள்ளது. பஞ்சாப், பெங்கால், ஸிண்ட், அஸ்ஸாம், வடமேற்கு மாகாணம் என்ற ஐந்து மாகாணங்கள் முஸ்லீம் பிராந்தியங்கள். இந்திய முஸ்லீம்களில் அநேகர் புகழ் பெற்றவர்கள். ஹிஸ்-ஹைனஸ் ஆகாகான்

என்பவர், பெரிய பணக்காரர், ஆனால் அதோடு அவர் பெரிய மதகுருவுமாவர். மிஸ்டர் ஜின்னா முஸ்லீம் கக்ஷியை நிலைநாட்டும் மகாதீரர், பஞ்சாப் பிரதம மந்திரியான ஸர் ஸிகந்தர் ஹயாத்கான் ராணுவ வீரனும் அமைச்சருமாவார். பிரிடிஷ் ஸாம்ராஜ்ய கீழ்நாடுகளின் மகாசபையில் தலைமை வகித்து இந்திய முன்னேற்றத்தில் பெருமை வாய்ந்தவர் ஸர் ஸாப்ருல்லாகான்.

## வடமேற்கு மாகாணமும், ஆப்கானிஸ்தானமும்.

வடமேற்கு மகாணத்திலே, பட்டாணி, மக்மண்ட், டீரோ, வாஸர் ஆபிரிடி என்ற பல முகமதிய ஜாதியார்கள் வசிக்கிறார்கள். இவர்களை பிரிடன் அடக்கி ஆண்டு, சீர் திருத்தி வருகிறது. இதனுடைய எல்லை (ட்யூரண்டுலைன்)க் கப்பால் ஆப்கானிஸ்தானம் இருக்கிறது. இங்கேயிருக்கும் 120 லக்ஷ முஸ்லீம்கள் புது நாகரிக வழிகளைப் பின்பற்றி வருகிறார்கள். ரஷ்யர்கள் வெய்ப்புக்கும், ஜெர்மனியின் மோசச் சிரிப்புக்கும் உள்படாது, பிரிடனோடு நேய ஒப்பந்தங்கள் செய்து கொண்டு வாழ்கிறார்கள். 1937-ம் வருஷத்து ஸஅதபாத் ஒப்பந்தம் செய்து கொண்டு அயலார்களோடு நேயமாய் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

## இரான்.

ஆப்கானிஸ்தானத்துக்கு மேற்கே இரான் தேசம் இருககிறது. இதனுடைய பழைய பெயர் பெர்ஸியா. இங்கே ஆசியாவின் பழைய நாகரீகங்களைப் பார்க்கலாம். இங்குதான் உலகத்தையே வென்ற அலெக்ஸாண்டர் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டது. ஓமார்காயமென்ற மதுரகவி இங்கு அவதரித்தார். இது இந்தியாவிலிருக்கும் பிரிடிஷ்காரர்களுக்கும், ஆசியாவிலிருக்கும் ரஷ்யர்களுக்கும் நடுவே நின்று இவர்கள் ஒருவர்மேல் ஒருவர் படையெடுக்காமல் முட்டுக்கட்டைபோடுகிறது. இப்பொழுது அரசாளும் மன்னருக்கு ரீஸா ஷெயிக்பஹ்லவியென்று பெயர். இவர், இங்கிலாந்தில் இருந்த கிராம்வெல்லைப் போல ஒரு சிப்பாயாயிருந்து அரசனானவன், 40-வது வயது வரையில் இவரை ஒருவருக்கும் தெரியாது; ரஷ்ய (கோஸாக்) ராணுவத்தில் ஒரு சிறிய சிப்பாயாய் இருந்தார். 50-வது வயதில் ராஜாதி-ராஜன் (ஷா-இன்ஷா) ஆனார். சென்ற மகா யுத்தத்தில் பெர்ஸியாவானது பிரிடனுடைய பாதுகாப்பு நாடாக ஏற்பட்டது. கர்னல் ஸ்மித், ஜெனரல் ஸர் எட்மண்ட் ஐரண் ஸைட் என்ற இரண்டு பிரிடிஷ் ராணுவஸ்தர்களால் இவருக்கு இந்தப் பதவி கிடைத்தது.

இந்த அரசரால் பெர்ஸியாவுக்கு நன்மைகள் பல ஏற்பட்டிருக்கின்றன. துருக்கியிலிருந்த முஸ்டாபர் கேமல் பாஷாவை அனுசரித்து, பல சீர் திருத்தங்கள் செய்திருக்கிறார். கட்டாயச் சைன்ய மொன்றிருக்கிறது. ஒரு விமானப் படையும், சிறு கப்பல் படையுமிருக்கின்றன. ஆண்-பெண் கலந்து படிக்கும் பள்ளிக்கூடங்களும் ஏற்படுத்தியிருக்கிறார். அயலார்களின் அதிகாரங்களைக் குறைத்து ஜனநாயக சபையொன்றை அமைத்து மத்திய ஆசியாவைச் சேர்ந்த இராக், அரேபியா, ஆப்கானிஸ்தானோடு நேயத்தை அபிவிருத்தி செய்ய ஸஅதாபாத் ஒப்பந்தத்தை ஏற்படுத்தினார். தலைநகரான டெக்ரானை காஸ்பியன்



கடலோடும், பெர்ஸியன் குடாக்கடலோடும் சேர்த்து நீண்ட ரெயில்பாதையொன்றை உள்நாட்டு மூதலைக்கொண்டே போட்டது இவர் செய்த பெரிய காரியம். எண்ணெய் உற்பத்தியில் இரான் உலகத்தில் மூன்றாவது பெரிய பிராந்தியமாகும். இதில் ஐந்தில் நாலு பாகத்தில் எண்ணெய் எடுக்க பாத்தியத்தை தெரியாத் தனமாய் முதலில் கேவலம் 4000 பவுனுக்கு டி. ஆர்ஸிக்குக் கொடுத்து விட்டாலும் இப்பொழுது அதற்கு முதலாளிகளான ஆங்கிலோ-பெர்ஸியன் கம்பெனியிடமிருந்து பெருத்த லாபத்தைப் பெற்றுக்கொள்ளுகிறார்.

## அரேபியா.

அரேபியாவானது மனிதனுடைய உற்பத்தி ஸ்தானமென்றும், ஆதாம் ஏவ் வசித்த இடமென்றும் சொல்லப்படுகிறது. இது ஷீபா ராணி ஆண்ட பூமி. அராபியன்—நைட்ஸ் கதைகள் சொல்லப்பட்ட இடம். இஸ்லாம் பிறந்த இடம். இங்கு வசிக்கும் முஸ்லீம்கள் ஸிமைட் ஜாதியார்கள். இவர்களைப்பற்றி மிஸ்டர் டி. இ. லாரன் பின் வருமாறு வருணிக்கிறார்:—இவர்கள் களங்கமற்ற சந்தேக மற்ற மனிதர்கள். கறுப்பு வெளுப்பு என்ற இரண்டு வர்ணங்களைத் தவிர, கலந்த வேறு வர்ணங்கள் இவர்களுக்குத் தெரியாது. அதாவது வெட்டு ஒன்றும் துண்டு இரண்டும்தான். யுக்திகளும், குயுக்திகளும், தர்க்கங்களும் அவர்களுக்குக் கிடையாது. நடவடிக்கைகளிலும் மனோபாவத்திலும் கபடமற்றவர்கள். உண்டென்றால் உண்டு, இல்லை யென்றால் இல்லை யென்பதே அவர்கள் ஸ்வபாவம். எந்த விபரீதத்துக்கும் போகத் தயாராயிருப்பார்கள்.

இந்த குணமே இவர்கள் பெருமைக்குக் காரணம். இதனாலேயே பெரிய ராஜ்யங்களை ஸ்தாபித்து, இவர்கள் இதுவரையில் யுகம் யுகமாகத் தங்கள் ஸ்வதந்திரத்தைப் பாதுகாத்துக்கொண்டிருக்கிறார்கள்.

அரேபியாவுக்குள் யேமன் என்ற பாகம் செழிப்பானது. இங்குதான் மனிதன் உற்பத்தியானதாகச் சொல்லப்படுகிறது. கி. பி. 1000 வருஷங்களுக்கு முன் இங்கு மினோவா, ஸபீயவென்ற ராஜ்யங்கள் செழித்தோங்கின. இங்கு மொக்கா காப்பிக்கொட்டை விளைகிறது.

அரேபியாவிலுள்ள புண்ணியபூமிக்கு ஹெஜாஸ் என்று பெயர். இங்கே அபா வென்ற மூலஸ்தானமிருக்கிறது. முகமத் பிறந்து வசித்த மெக்கா, மெடினா நகரங்களிருக்கின்றன. இவைகளை நோக்கியே முஸ்லீம்கள் தினசரி தங்கள் ஜபத்தைச் செய்கிறார்கள். இவ்விடங்களுக்கு யாத்திரை போவதுதான் முஸ்லீம் களுக்குப் பெரிய புண்ணியம். இந்த அராபியநாட்டில், இஸ்லாமோடு, யூத, கிறிஸ்து மதங்களும் பிறந்தன. அராபிய பாலைவனங்களே முஸ்லீம்களுக்கு அல்லாவின் தோட்டமாகக் கருதப்படுகின்றன. முகமத் நபீக்கு பாலைவன வாஸத்திலிருந்து இறந்த பிறகு செல்லும் தேவலோகத்தை யடையும் வழியும், இப்பிறப்பில் அடையக்கூடிய ராஜ்யங்களைப் பிடிக்கும் வழியும் சேர்ந்து புலப் பட்டன. முகமது நபியின் காலத்துக்குப் பிறகு அவரைப் பின் பற்றியவர்கள்

ரோம ரஜ்யத்தை விடப் பெரிய ராஜ்யத்தை ஸ்தாபித்தார்கள். இந்த ராஜ்யம் க்ஷீண மடையும்போது துருக்கியானது இங்கு ஆக்ரமித்து 500 வருஷம் பேருக்கு ஆண்டது. சென்ற மகாயுத்தத்தில், துருக்கியானது பிரிட்டனைப் பகைத்துக் கொண்டதிலிருந்து, அராபியிலிருந்த முஸ்லீம்கள் ஒன்று கூடி துருக்கியின் மேல் பாய்ந்து தங்கள் ஸ்வதந்திரத்தை நிலைநிறுத்திக் கொண்டார்கள். கவியும் வேதாந்தியும், சிப்பாயுமான லாரன்ஸ் என்ற ஆங்கிலரின் உதவியால் துருக்கியை முறியடித்து ஜெர்மானியர் கிழக்கே ஸ்தாபிக்கப் பார்த்த ஆசையும் நசுக்கப் பட்டது.

இப்பொழுது ஆண்டுவரும் அராபி அரசருக்கு இபின் ஸஊத் என்று பெயர். இவர் 1926-லிருந்து ஆக்ஷிபுரிகிறார். இவரிலிருந்து அரேபியாவுக்குச் சஅவுதி அரேபியாவென்று பெயர். அரேபியாவை ஒன்றுபடுத்த, பெருமுயற்சிகளைச் செய்கிறார். கட்டாய-ராணுவமொன்றை அமைத்திருக்கிறார்.

## சமீபக் கிழக்குப் பிரதேசம்.

இது பலவித ஜாதிகளும் ஜனங்களும் அடங்கிய பூமி. எகிப்த், பாலஸ்தினம், ட்ரான்ஸ்-ஜார்டன், இராக், ஸிரியா என்ற தேசங்கள் இங்கு இருக்கின்றன. இவர்கள் ஜாதியில் ஸிமைட்கள், மதத்தில் இஸ்லாமியர்கள், இவர்கள் பேசுவது அராபி பாஷை. எகிப்தில் ஜனங்கள் அராபி பாஷை பேசுகிறார்கள், ஆனால் அவர்கள் அராபியர்களல்ல லெபனனில் கிறிஸ்துவர்களே அதிகம். அரசியலும் பலவிதமாயிருக்கிறது. லிபியாவென்பது இதாலியரின் குடியேற்றநாடு; பாலஸ்தீனமும், ட்ரான்ஸ்-ஜார்டனும் பிரிடிஷ் மாண்டேட்-நாடுகள்; ஸிரியா பிரெஞ்சு மாண்டெட் நாடு; எகிப்த், இராக், ஸ்வதந்திரத்தோடு பிரிடிஷ் ரக்ஷணைகுட்பட்டவை; ஏடன், ஹாதர்மாத் பிரிடிஷ் அரசாக்ஷிக்குட்பட்டவை.

இந்த பூமியானது ராணுவக்-கேந்திரஸ்தான மாயுமிருப்பதால் அநேக வல்லரசுகள் இதைப் பிடிக்கப்பார்க்கிறார்கள். வில்லியமென்ற கைஸர் பெர்லினுக்கும் பாக்தாத்துக்கும் ரெயில்பாதை போடப் பிரயத்தனித்த இடம், இதுதான். இங்கிருந்து அராபியர்களை வரவழைத்து நியூரம்பர்க்கில் ஹிட்லர் உபசரித்தார். இங்கிருக்கும் ஸூயஸ்கால்வாயைத்தான் எகிப்திலிருந்து இங்கிலிஷ் மந்திரி டிஸ்ரெயிலி விலைக்குவாங்கினார். இங்கிருக்கும் எகிப்தை குரோமர் பிரபு சீர்திருத்தினார். இங்கிருக்கும் அராபியர்களைத்தான் லாரன்ஸ் ஒன்றுசேர்த்தது, இங்குதான் அல்லென்பி துருக்கியை முறியடித்தது, இங்குதான் பிரான்ஸ் ஸிரியாவை அபகரித்தது, ரஷ்யா பர்ஸியக்குடாக்கடலுக்குப் போக வழி தேடுவது, இதாலி ஏதாவது அகப்படுமாவென்று தூண்டில் முள்போடுவது. இங்குதான் பிரிடன் ஸாம்ராஜ்யத்தின் உயிர்நிலைகளில் ஒன்றாய் இருக்கிறது.

இராக், இதற்கு மெஸொபொடோமியா வென்று பழைய பெயர். அதற்குமுன், பாபிலோனியாவென்ற ராஜ்யம் இங்கிருந்தது. 2,800,000 ஜனத்துத்தொகை உள்ளது. ஸிரியாவிலிருந்து பிரிக்கப்பட்டு பெயஸல் அரசருக்குப் பிரிடனால்



அளிக்கப்பட்டது. சிறிதுகாலம் பிரிடிஷ் பார்வையில் வைக்கப்பட்டு இப்பொழுது ஸ்வதந்திர நாடாக மாறியிருக்கிறது. இங்கு பிரிடிஷ் விமானப் படையொன்று உண்டு. ஸ்வாதீனம் பெற்றதிலிருந்து, முன்னைக்காட்டிலும் அதிக நட்பை இராக் பிரிடனிடத்தில் கொண்டிருக்கிறது.

ட்ரான்ஸ் ஜார்டன், என்பது துருக்கி பல பாகங்களாய் பிரிக்கப்பட்டபொழுது உண்டான மற்றொரு ராஜ்யம். ஸிரியாவைச் சேர்ந்ததென்று நினைத்து பிரிடன் முதலில் அதை காலிசெய்து விட்டது. மறுபடியும் அதில் குடியேறி கடைசியாய் பெயசல் மன்னரின் சகோதரர் அப்துல்லாவுக்குக் கொடுக்கப்பட்டது. பாலஸ்தீனத்திலுள்ள பிரிடிஷ் ஹைகமிஷனர், பெயருக்கு ஸ்வதந்திரம் வகிக்கும் இந்த அரசில் ஏராளமான செல்வாக்கைச் செலுத்துகிறார்.

ஸிரியா இது பிரஞ்சு 'மாண்டேட்' நாடு—இது ஐந்து பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது—உள் பாகத்தில் டமாஸ்கஸ் பிரதானப் பட்டினம். கரை ஓரபாகத்துக்கு லெபானன் என்று பெயர். இதன் தலைநகர் பெய்ரூட். அலெக் ஸாண்ட்ரெட்டாவில், துருக்கியும், பிரான்ஸும் சேர்ந்து அதிகாரம் செலுத்து கின்றன.

பாலஸ்தீனம், இதுதான் இஸ்ரேலின் புண்ணிய க்ஷேத்திரம். மோஸஸுக்குக் கடவுள் வாக்களித்த பூமி. இது ஒரு சிறு தேசம். 1918 வரையில் துருக்கிக் குள்ளிருந்து, பிறகு சென்ற மகாயுத்தத்தில் அல்லன்பியால் பிடிக்கப்பட்டு 'மாண்டேட்' நாடாக பிரிடனால் அதிகாரம் செலுத்தப்பட்டு வருகிறது.

இங்கு யூதர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் தீரா மனஸ்தாப மேற்பட்டிருக் கிறது. இவர்களுக்கும் இது புண்ணிய பூமி. கிறிஸ்துவர்களுக்கும் புண்ணிய பூமி டோம்-அப்தி-ராக் என்பது ஆப்ரஹாம் பாறையில் கட்டப்பட்டு ஸாலமன் கோவிலுக்கு நடுவேயிருக்கிறது. அக்ஸாமஸூதி கிறிஸ்துவக் கோவிலிலிருக்கிறது. ஸ்வர்க்கத்துக்குப் பறந்துபோவதற்கு முன் முகம்மத் நபீயின் குதிரையானது ஆக்ஸா மஸூதிக்குப் பக்கத்தில் கட்டப்பட்டிருந்ததாகப் புராணம். ஆனால் அதே இடத்தில் வெயிலிங்-வாலும், ஸாலமன்-கோவிலின் மனையும் இருப்ப தாலும் யூதர்களுக்கும் இந்த இடம் விசேஷம்.

சென்ற மகாயுத்தத்தில் துருக்கியானது ஸூயஸைப் பிடித்துக்கொள்ளுமோ வென்ற பயத்திலிருந்து 1916-ல் பிரான்ஸோடு ஸைக்ஸ்-பிகோ வென்ற உடன் படிக்கை செய்துகொண்டு வெற்றிபெற்றால் மத்திய தரைக்கடலுக்கும் பெர்ஷியன் குடாக் கடலுக்கும் மத்தியிலுள்ள பிரதேசத்தை பிரிடனும், பிரான்ஸும் பங்கு போட்டுக்கொள்ளுவதாக ஏற்பாடு செய்யப்பட்டது. 1915-ல் எகிப்தில் சேனை பதியாயிருந்த ஸர் ஹென்றிமாக் மஹான் மெக்கா அராபியர்களுக்கு அநேக அராபிய தேசங்களில் ஸ்வதந்திரத்தைக்கொடுப்பதாக வாக்களித்தார். ஆனால் அதில் பாலஸ்தீனம் சொல்லப்படவில்லை. 1917-ல் 'பால்பர் அறிக்கை' விடுக்கப் பட்டு பாலஸ்தீனத்தில் யூதர்களுக்கு இடம் கொடுக்கப்பட்டது. யுத்தத்தின் பிறகு கூடிய சமாதான-சபையில் அராபிய பிரதிநிதிகள் பாலஸ்தீனத்தை ஒதுக்கி வைக்கச் சம்மதித்தார்கள். யுத்தம் முடிந்தபிறகு அராபிய நாடுகளுக்கு ஸ்வதந்திரம் உடனே கொடுபடவில்லை. ஸிரியாவை பிரான்ஸ் மாண்டேட் நாடாக எடுத்துக்கொண்டது. பாலஸ்தீனம் இராக் முதலிய இடங்களை மாண்டேட் நாடாக பிரிடன் எடுத்துக்கொண்டது. இதிலிருந்து யூதர்கள் குடியேற்றச்

சிக்கல் ஏற்பட்டுவிட்டது. யூதர்கள் தடையொன்றுமில்லாமல் குடியேறுவோமென்கிறார்கள், அராபியர்கள் கூடாதென்கிறார்கள். அல்லது சிலர்களைத்தான் குடியேரலாமென்றார்கள். தீராத்தொல்லையாயிருக்கிறது. கலகங்கள் சில ஏற்பட்டன, பிரிடன் ராஜி பேசியதில் சற்று சமாதானமேற்பட்டிருக்கிறது. இங்குள்ள அராபியர்கள் நாஸித்வேஷிகள். ஆனால் பிரிடிஷ் அதிகாரமிருக்கும் வரையில் கலகமிராது.

சென்ற யுத்தத்திற்குப்பிறகு பாலஸ்தீனத்தின் ராணுவ விசேஷம் அதிகப்பட்டுவிட்டது. ஸூயஸ் கால்வாயின் கீழ்கரையைப் பாதுகாக்க, பாலஸ்தீனம் வேண்டும். இந்தியாவுக்கும், தூரக்-கீழ் தேசங்களுக்கும் விமானங்கள் இது வழியாய்ச் செல்லுகின்றன. பாக்டாட்டுக்குப்போகும் மோட்டார் பாதை பாலஸ்தீனம் வழியாய்ச் செல்லுகிறது. இராக் எண்ணெய்க் குழாய் பாலஸ்தீனத் துறைமுகமான ஹைபாவுக்கு வருகிறது. அதோடு ஹைபாவானது ஒரு பெரிய யுத்தக் கப்பல்களுக்கான நிலயம்.

**எகிப்து.**—1882ல் பிரிடனால் பிடிக்கப்பட்டு, 1914ல் பாதுகாப்பு நாடாகி, 1922ல் ஸ்வதந்திரம் பெற்று, எகிப்தானது இதன்பின் 1936ல் இதாலி அபிஸீனியாவைப் பிடித்துக்கொண்டதிலிருந்து பயந்து, பிரிடனுடைய ஆதரவை மறுபடியும் தேடிற்று. இதன் முடிவாக இப்பொழுது உடன்படிக்கை ஏற்பட்டு, எகிப்து ஸ்வதந்திரத்தையும் அனுபவித்துக்கொண்டு பிரிடிஷ் சைன்யத்தின் ரக்ஷணையையும் பெற்றுவருகிறது. எகிப்தைப்பற்றிய மற்ற விவரங்களை சென்றவாரத்துப் பிரஸங்கத்தில் பார்க்கலாம்.

**துருக்கி.**—பழயகாலத்தில் சாம்ராஜ்யமாயிருந்த பெருமை இப்போதில்லாவிட்டாலும், மத்தியதரைக்கடல் நாடுகளில் இதற்கு இப்பொழுதும் பிராதான்ய இங்கு வசிப்பவர்கள் ஒரே ஜாதியார்களானதாலும், அரசாங்கம் ஸ்திரப்பட்டிருப்பதாலும், முஸ்டாபா கமால் விவேகத்தோடும், தைர்யமாய் சீர்திருத்தங்களைச் செய்திருப்பதாலும், மற்ற முஸ்லீம் நாடுகளைவிட இதற்கு அதிக பலமுண்டு. சமீபத்தில் பிரிடனுக்கும், துருக்கிக்கும் அந்நியோன்யம் ஏற்பட்டு, ஜெர்மன் வியாபாரங்களுக்குப் பதிலாக பிரிடிஷ் வியாபாரம் நடக்கவும் ஏற்பாடாயிருக்கிறது. இதற்குக்காரணம் டாடிகானீஸிலும், அபிஸீனியாவிலும் இதாலி செய்த சூழ்ச்சிதான். கீழ் நாடுகளிலேயே ஒருவன் ஜயித்தால்தான் மரியாதை காட்டுவார்கள். உள்நாட்டு விஷயங்களிலும், வெளிநாட்டுக் காரியங்களிலும் துருக்கி வெற்றியடைந்ததிலிருந்து ஸஅதாபாத் ஒப்பந்த நாடுகளில் துருக்கிக்கு மதிப்பதிகம்.

எகிப்தைத்தவிர, ஆபிரிக்காவில் லக்ஷம் லக்ஷம் மூகம்மதியர்கள், இதாலிய, பிரஞ்சு, அரசாங்கங்களுக்குக் கீழ் வசிக்கிறார்கள். இந்த இடங்களில் நடப்பு யுத்தம் பரவாததினால் இவர்களைப்பற்றிச் சொல்லவில்லை. இரண்டொரு வார்த்தைகளைத்தவிர, அவர்களைப்பற்றி ஏதாவது சொல்லவும் காலம் இடங்கொடுக்காது. சமீபக் கீழ்பிரதேசமானது இஸ்லாமின் ஹிருதயம் போலாகும். துருக்கியின் நேயம் மாறாதென்று வைத்துக்கொள்ளலாம். இதர நாடுகள் அராபியர்கள் வசிக்கும் தேசம். இவர்கள் பிரிடனுக்கு சிநேகமாயும், ஜெர்மனிக்கு விரோதமாயிருக்கிறார்கள்.



இதாலியரிடத்தில் அராபியர்களுக்கு வாஞ்சையே கிடையாது. ஸென்னூஸி

யென்ற முஸ்லீம்களை ஸிரெனியகாவில் படுத்தியபாட்டை இவர்கள் இன்னும் மறக்கக்கூடவில்லை. 1937ல் லிபியாவில் முஸோலினி 'இஸ்லாம் ரக்ஷகர்' என்று சொல்லிக்கொண்டார். 'இஸ்லாம் வாள்' என்று ஒரு வாளை முஸ்லீம்கள் பரிசாய்க் கொடுத்ததாக அதைப்பார்த்துக் கையிலேந்தினார். முஸ்லீம்கள் சிரித்தார்கள். இஸ்லாமியர் வாள் வளைந்திருக்கும்; கிறிஸ்தவர்கள் வாள் வளைந்திராது. இதிலிருந்து முஸ்லீம்கள், இந்த வாளை இவருக்குப் பிறர் கொடுக்கவில்லை; முஸோலினி வாளைத் தானே செய்துகொண்டு, முஸ்லீம்கள் கொடுத்ததாகப் பாசாங்குசெய்வதாகச் சொன்னார்கள். மற்றொரு சமயத்தில், மற்றொரு முஸ்லீம் 'இஸ்லாம் ரக்ஷகரா? எத்தனையோ ரக்ஷகர்களைப் பார்த்தாய்விட்டது. நெபோலியன், கைஸர் ரக்ஷித்தாய்விட்டது. இப்பொழுது முஸோலினி கிளம்பியிருக்கிறார்' என்றார்.

ஆகவே அராபியர்கள் அச்சுக்கும், அதைச்சேர்ந்த இதாலிக்கும் விரோத புத்திகொண்டவர்களென்பது நிச்சயம்.

தற்சமயத்தில் கேட்கவேண்டிய கேள்விகளிரண்டுண்டு.

1. சமீபக்கிழக்குப்பிரதேசத்தை ஜெர்மானியர் படையெடுப்பார்களா?
2. படையெடுத்தால் ஜயிக்கமுடியுமா?

(1) ஸர்வாதிகாரத்தின் ஸ்வபாவம் ஆக்ரமித்துக்கொண்டேயிருக்க வேண்டும். ஆக்ரமிக்க ஆக்ரமிக்க ஆசையும் அதிகப்படும். அதற்குப் பிராணன் நிலைக்க 'அக்கிரமம் செய்துகொண்டேயிருக்கவேண்டும். அது மலையிலிருந்து உருட்டிவிட்ட கல்லைப்போன்றது: கீழே வரவர வேகமதிகப்படும். பிராணனைப் போலவே நாஸிக்குப் படையெடுப்பு அவசியமானது. இங்கிலாந்தைப்படையெடுக்க முடியாததிலிருந்து ஜெர்மனி மற்றொரு இடத்தில் ஆக்ரமிக்கப்பார்க்கலாம். ஜெர்மானிய 'பான்ஸர் கோர்' துருப்புகள் வேலையில்லாது துருப்பிடிக்கின்றன. அவைகளை எங்கேயாவது கொண்டுபோய் பீரங்கிக்கு இரையாக்கவேண்டும். ஸ்பெயினின் அதிகாரி இடம்கொடுத்திருந்தால் ஜிப்ரால்டரைத் தகர்த்திருக்கலாம். அங்கு போகாததால் கிழக்குத்திசையை நோக்கி ஏன் படையெடுக்கக்கூடாது?

(2) கிரீஸானது இதாலியைத் தோற்கடித்துவிட்டது மற்றொரு காரணமாகலாம். அச்சு நாடுகளின் வாலை ஒரு சிறு கிரீஸ் முறுக்கிவிட்டது. கோலியத் என்ற ராக்ஷஸனை டேவிட் என்ற சிறுவன் அடித்துவிட்டான். இதுவரையில் தோல்வியடையாத இதாலியர்கள் இப்பொழுது தோற்றுப்போய்விட்டார்கள். இதிலிருந்து அச்சுமுறிந்து ஜப்பானும், ரஷியாவும் விலகிக்கொண்டு, ருமேனியாவும் ஹங்கேரியும் சூழ்ச்சி செய்யலாம். ஏதாவது ஒன்றைச்செய்து கலசலை நிறுத்தவேண்டும். அதற்கு ஏதாவது ஆடம்பரம் செய்தாகவேண்டும். கிழக்கேதான் வடக்கேயும், மேற்கேயும், தெற்கேயும் செய்வதற்கொன்றுமில்லை. போய்ப்பார்க்கலாமே.

(3) மேற்குப் பாலைவனத்தில் ஒரு விந்தை நடக்கிறது. பிரிடிஷ் சாம்ராஜ்யத்தின் பல தேசங்களிலிருந்து பல ஜாதியார்கள் கூடி ஸிதி எல் பரானியைத்தாக்கிப் பிடித்துவிட்டார்கள். இந்தச் சைன்யங்கள் இன்னும்பலப் பட்டால் அதிக ஆபத்துக்கிடமாகும். இவர்களைக் கலைக்கும்பொருட்டு, சமீப கீழ்ப் பிரதேசங்களை ஏன் படையெடுக்கக்கூடாது?

(4) துருக்கியில் தாதுப்பொருள்களிருக்கின்றன. இராக், இரானில் எண்ணெய் உண்டு. பிரிடனோ வேறு இடத்தில் கவலையுற்றிருக்கிறது. இவைகளைக் கொள்ளையடிக்க இது நல்ல சமயமல்லாவா?

இம்மாதிரிக் காரணங்களாலும், ஜெர்மனிக்கு வேறு ஒரு காரியமும் இப்பொழுது இல்லாததாலும் கிழக்கே படையெடுக்கப்பார்க்கலாம்.

ஆனால், இது சுலபமல்ல. ஏனென்றால்:—

1. 1,322,000 சதுர மைல் விஸ்தீர்ணத்தில் வசிக்கும் 46,000,000 முஸ்லீம்களை எதிர்த்தாகவேண்டும்.

2. இவர்களை முன்போல பிரித்து வெல்லமுடியாது. ஸஅத்பாத் உடன்படிக்கையால் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

3. இவர்கள் முன் மாதிரி சக்தியற்றவர்களல்ல. நவீன முறையில் பழக்கப்பட்ட சைன்யங்கள், துருக்கி, இரான், ஆப்கானிஸ்தான் தேசங்களில் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

4. ஸூயஸைக்காக்கவும், எகிப்தையும், துருக்கியையும், உடன்படிக்கைப்படி உதவவும், பாலஸ்தீனத்தையும், ட்ரான்ஸ்-ஜார்டனையும் ரக்ஷிக்கவும் பிரிடன் உடனே முன்வரும். அதற்கு வேண்டிய பலம் தரையிலும், கடலிலும், ஆகாயத்திலும் பிரிடனுக்குண்டு.

5. ரஷிய ரெயில் பாதைகளை உபயோகப்படுத்திக்கொள்ள ரஷியாவுக்கு வேண்டியதைக்கொடுத்து ஜெர்மனி படையெடுத்து விடுமென்று சொல்லலாம். ஆனால் ரஷியா கரடியாயிருப்பதோடு நரியுமாகும். ரஷியா இவ்விதம் வழி விட்டால் ஜெர்மானியர் ரஷியாவுக்குத்தென்புறம் வந்து ரஷியாவை வளைத்துக் கொள்ளுவார்களென்று தெரியும்.

6. இதோடு இயற்கையாய் ஏற்பட்டிருக்கும் இடையூறுகள் சிலவுண்டு. ஜெர்மானியர் 500 மைல் மலைப்பிரதேசத்தைத் தாண்டித்தான் துருக்கியின் தலைநகராகிய அங்காராவுக்குப் போகவேண்டும். காகஸஸ் வழியாகவும் இவ்வளவு தூரம் வரவேண்டும்.

பெர்ஸியன் குடாக்கடலுக்குவர ஸிரியாவில் டாரஸ் பர்வதத்தையும், கூர்டிஸ்தானில் பாலைவனத்தையும் தாண்டி, இராக்கில் 600 மைலும், அதற்கு அப்பால் ஒரு பாலைவனத்தையும் தாண்டவேண்டும்: தண்ணீரில்லாத பாலைவனங்களில், ஒத்தைப் பாதைகளில் போகும்போது விமானங்கள் சைன்யங்களைச் சுலபமாய் தாக்கும்.



இராக்குக்குப் போகாது, இரான் மார்க்கம் போகப்பார்த்தால் மலையையும், பாலைவனத்தையும் 1,000 மைல் தாண்டி டெஹரானென்ற தலைநகர் சேர வேண்டும். அங்கிருந்து காபூலுக்குப்போய் இந்தியாவை எதிர்க்க மற்றுமொரு 1,000 மைல் பாலைவனம் போகவேண்டும். இதெல்லாம் பயித்தியக்கார யோசனையாய்த்தான் இருக்கிறது. ஆனால் ஹிட்லர் செய்யமாட்டார் என்பதற் கில்லை. அவர் ஒரு பெரும் பயித்தியம். இவர் இக்காலத்திய டைமூர் அல்லது டாமர்லேன்: எதையும் எத்தனிக்கக்கூடும்.

கடைசியாக முஸ்லீம்களுடைய ஆத்ம சக்தியை வென்றாகவேண்டும். சமீப காலத்தில் இந்த சக்தியானது புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. முகமத் நபியாரின் காம்பீர சித்தமும், தலைமை வகிக்கும் ரகஸ்யமும், பிறவிச் செல்வமாகிய வீரமும், பிறர்களை வசியம் செய்து, ஒன்று சேர்க்கும் குணமும், ஆயிரக் கணக்கானபேர்களை ஒருமைப் படுத்திக் கூட்டிச்செல்லும் சாமர்த்தியமும் முஸ்லீம்களை விட்டு இன்னும் அகலவில்லை. ஸீஸருடைய ஆவி எவ்விதம் பிலிப்பியில் புருடஸை எதிர்த்துக் கொன்றதோ அவ்விதமே நபியின் ஆவேசம் எதிரிகளைச் சம்காரம் செய்துவிடும்.

'ஆக்கிரமிப்பவர்களை தெய்வம் அபிமானிக்காது' என்று முகமத் சொல்லியிருக்கிறார். அப்பேர்ப்பட்டவர்களின் தலையை அறுத்து, சம்காரம் செய்ய வேண்டும் அல்லது விலங்குகள் போடவேண்டுமென்பது குரானின் வாக்கியம்.

## வார யுத்தச் செய்திகள்.

(12—12—40 லிருந்து 18—12—40 வரை).

### மேற்குப் பாலைவனத்தில் பிரிடிஷ் வெற்றி.

சென்ற மாதத்தில் மிஸ்டர் ஈடன் மத்திய கிழ் பிரதேசத்தைப் பார்வையிடப் போனபொழுதே எகிப்திலிருக்கும் இதாலியர்களை எதிர்க்கவேண்டிய ஏற்பாடுகளெல்லாம் வெகு ஜாக்கிரதையாய்ச் செய்து முடிக்கப்பட்டுவிட்டன. ஆனால் விமானப்படைகளில் ஒரு பாகத்தை கிரீஸுக்கனுப்பவேண்டிய அவசியமேற்பட்டதால் போரைத்துவக்கச் சற்றுத்தாமதமேற்பட்டது. பிரிடிஷ் துருப்புக்களையும், சாம்ராஜ்யத் துருப்புக்களையும், பிரெஞ்சு ஸ்வதந்திரத்துருப்புக்களையும் சேர்த்துக் கொண்டு ஸர் மெய்ட்லண்ட் வில்ஸன் டிஸம்பர் 7-ம் தேதி புறப்பட்டு, 75 மைல் தூரமுள்ள பாலைவனத்தை வெகு விரைவில் தாண்டி, பிரிடிஷ் ஆகாயப்படையும், கப்பற்படையும், தக்கவாறு, வேண்டிய பொழுது துணை செய்ய, ஸிடி எல் பரானியைப் பிடித்தார். இங்குதான் இதாலியர்கள் ஏற்கனவே முன்னேறி எகிப்தைப் படையெடுக்கச் சைன்யங்களைக் கூட்டிவைத்திருந்த இடம். உள்நாட்டிலிருக்கும் அநேக இதாலியப் படைகளுக்கு இதன் வழியாகத்தான் ஸப்ளைகள் போகவேண்டும். இதன் பிறகு, ஸிடி எல்பரானிக்கும் பக்பக்குக்கும் இடையே எதிரி சைன்யத்தைப் பிளந்துகொண்டு கடற்கரைக்கும் பிரிடிஷ் பட்டாளங்கள் வந்து விட்டன. கப்பூசா கோட்டையும், சொல்லூமும் பிடித்தாய் விட்டன. நிபீவாவில் வைத்திருந்த முதல்தரமான இதாலியத் துருப்புகள் இரண்டு மணி நேரத்தில் முறியடிக்கப்பட்டு அதன் சேனாபதி மாலெடியும் கொலை செய்யப்பட்டார். நீபாவைப் பிடித்ததில் இந்தியச் சிப்பாய்கள் வெகு திறமையோடு சண்டை செய்து புகழ் பெற்றனர். மொத்தத்தில் மூன்று இதாலிய பட்டாளங்கள் முறியடிக்கப்பட்டு, ஐந்து தளகர்த்தர்களும், 30,000 சிப்பாய்களும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஏராளமான யுத்த தளவாடங்கள் கைப்பற்றப்பட்டன. இன்னும் விடாது எதிரி துரத்தப்பட்டு வருகிறான். மேலிருந்து விமானங்களும் கடலிலிருந்து கப்பல்களும், நிலப்படைகளோடு சேர்ந்துகொண்டு தாக்குகின்றன. இனி எகிப்தை இதாலியர்கள் படையெடுக்கும் பயம் கிடையாது. சாமான்கள் வரும் வழி பிடிபட்டுப்போய் விட்டதால் இனி இதாலியக் கப்பற்படை சண்டைபோட வெளியே வரவேண்டும். இல்லாவிட்டால் வட ஆபிரிக்காவிலுள்ள இதாலியத் துருப்புகள் மடிய வேண்டியதுதான். இம்மாதிரியாக முதல்தரமான வெற்றியொன்று பிரிடனுக்குக் கிடைத்து விட்டது.

### இதாலிய கிரேக்க யுத்தம்.

குளிரும், பனியும் அதிகமாயிருந்தபோதிலும், மத்திய பாகத்தில் கிரேக்கர்கள் கெல்கிராவைப் பிடித்துக்கொண்டு, கிராவியால் தள்ளப்படும் ரோட் உருளை



யைப்போல மெள்ள, மெள்ள பலமாய் இதாலியர்களைக் கடற்கரைக்குத் துரத்திக் கொண்டு போகிறார்கள். கிரேக்கர்கள் ஷ்கும்பாநதிதீரத்தில் முன்னேறுவதிலிருந்து அல்பேனியாவிலிருக்கும் எண்ணெய் நிலயங்களுக்கு மோசம் வரும்போல் இருக்கிறது. இதில் இதாலியர்கள் ஏராளமான பணம்போட்டு, இந்த எண்ணெய் சமாதான காலத்தில் இதாலிக்குவேண்டிய எண்ணெயில் பாதி ஸப்ளை செய்கிறது. இதாலியில் பாஸிஸ்ட் கக்ஷிக்கும், சைன்யத்துக்கும் ஏற்பட்டிருக்கும் மனஸ்தாபத்திலிருந்து கொலைகள் பல ஏற்படும்போலிருக்கிறது.

### அமெரிக்கா.

யுனைடெட் ஸ்டேட்ஸில் பிரிடிஷ் அம்பாஸ்டராய் வெகு நாள் மதிப்போடு வேலைபார்த்துவந்த லோதியன் பிரபு வாஷிங்டனில் புதன்கிழமையன்று காலமானார். சரீர அசௌக்கியத்தை முன்னிட்டு, இறந்துபோவதற்கு முதல் நாள் மற்றொருவரைக்கொண்டு தன்னுடைய எழுதிவைத்திருந்த பிரசங்கத்தைப் படிக்கச்சொன்னார். அதில் ஏதாவது காரணத்தால் அட்லாண்டிக் சமுத்திரத்தில் பிரிடிஷ் பாதுகாப்புக் குறைந்துவிட்டால், அட்லாண்டிக்கிலும், பஸிபிக்கிலும் எதிரிகள் சமகாலத்தில் அமெரிக்காவையும், பிரிடனையும் படையெடுப்பது நிச்சயமென்றும், ஆனால் அமெரிக்கா போதுமானவரையில் பிரிடனுக்கு யுத்தத்தளவாடங்கள் கொடுத்து உதவினால், 1942-க்கு மேற்படாமல் யுத்தத்தை வெற்றியோடு முடித்துவிடலாமென்றும் அமெரிக்கர்களுக்கு எச்சரிக்கைசெய்து எடுத்துக் காட்டினார்.

பிரிடன் அமெரிக்காவைப் பொருளுதவி கேட்டிருக்கிறது. கடன் கொடுப்பதைத்தடைசெய்யும் ஜான்ஸன் சட்டத்தை ரத்து செய்யப் பிரைவேட் மசோதாவொன்று காங்கிரஸுக்குக் கொண்டுவரப்படும். அமெரிக்க யுத்தக்கப்பல்கள் துணையில் அமெரிக்க வியாபாரக்கப்பல்களில் வேண்டிய சாமான்களை ஸப்ளை செய்யலாமாவென்றும், அமெரிக்கா கையிலிருக்கும் 143 அயல்நாட்டுக் கப்பல்களை பிரிடனுக்கு விற்றுவிடலாமாவென்றும் ஆலோசனை செய்யப்பட்டுவருகிறது. கடைசியாகவந்த செய்திகளின்படி பிரஸிடெண்டு ரூஸ்வெல்டே, ரொக்கமாய்க் கொடுத்துவாங்க பிரிடனுக்கு டாலர்களில்லாமல் போனாலும் அமெரிக்கா தான் செய்யும் உதவியை நிறுத்திவிடாதென்றும், இனி அமெரிக்க கவர்ன்மெண்டு துவாராக ஆர்டர்கள் கொடுத்து விமானங்கள் முதலியவைகள் செய்யப்பட்டு, குத்தகைக்கோ, ஈடாகவோ பிரிடனுக்குக் கொடுக்கப்பட்டு யுத்தம் முடிந்தவுடன் இவைகள் கெடாமலிருந்தால் வாபஸ் பெற்றுக்கொள்ளுவதென்றும், இல்லாவிட்டால் பிரிடன் பிரதியாகச் சாமான்களைத் தயாரித்துக்கொடுக்கவேண்டும் என்றும் ஏற்பாடு செய்யப்போவதாகச் சொன்னார்.

### பிரான்ஸ்.

உதவி பிரதம மந்திரியாயிருந்த எம். லவால் திடீரென்று வேலையிலிருந்து தள்ளப்பட்டுவிட்டார். இவர் பிடேனுக்குப்பின் தலைமை வகிக்க அதிகாரம் கொடுத்த சட்டமும் ரத்து செய்யப்பட்டது. இதற்குக் காரணம் தெரியவில்லை.

சிலகாலமாக பிடேனை அவமதித்து, சர்வாதிகாரத்தையும் தன் கைவசப்படுத்திக் கொள்ள லவால் முயன்றதாகத்தெரிகிறது. ஜெர்மனி சார்பாக அரசியலை மாற்றிவிட பிடேனைப் பலாத்காரமாய்த் திருப்ப எண்ணம் கொண்டதாகவும் தெரிகிறது.

வேலையைவிட்டு நிறுத்தியதின் பின் இவர் கைது செய்யப்பட்டு, அவர் கிரஹமும் சோதனை போடப்பட்டது. பிறகு ஹிட்லர் கோரிக்கைக்கு பிடேன் இணங்கி விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்.

எம். லவால் வேலையிலிருந்து நீக்கப்பட்டதில் பிரெஞ்சு மக்கள் அனைவருக்கும், அயல் நாட்டார்களுக்கும் சந்தோஷம்.

## ஜெர்மனி.

டிஸம்பர் 10-ம் தேதி பெர்லினில் யுத்த தளவாடங்கள் உற்பத்தி செய்யும் வேலைக்காரர்களுக்கு ஹிட்லர் ஒரு பிரஸங்கம் செய்தார். வழக்கம்போல் ஜெர்மனிக்கு வேண்டிய பூமி உலகத்திலில்லாது தடுக்கப்பட்டிருக்கிறதென்றும், 10 வருஷங்களாய்ச் சண்டைக்கு மிஸ்டர் சர்ச்சில் அடிப்போட்டுக்கொண்டிருந்தபடி இப்பொழுது அவர் யுத்தத்திலகப்பட்டுக்கொண்டாரென்றும், யுத்தம் முடிந்தால்தான் பீரங்கிகள் செய்வது நிற்குமென்றும், முடிவான சண்டைப் படும் காலத்தை தானே நிர்ணயிக்கப்போவதாயும் பலவாருகப் பேசிக் கொண்டார். இது நிற்க, இவர் பிரசங்கத்தில் கவனிக்கவேண்டிய அம்சமொன்றுண்டு. இவர் பேச்சிலிருந்து எங்கே பிரிடன் தன் பிரதேசங்களைப் படையெடுத்து ஜயித்துவிடுமோவென்ற பயம் ஹிட்லருக்கு வந்து எப்போதும் போல் பேச்சு இடமாயில்லை. கீர்த்திக்காகமட்டும் வெற்றியை நாடக்கூடாது, அவசியத்துக்குத்தக்கபடிதான் சண்டையிலிறங்கவேண்டும், ஜாக்கிரதையாயிருக்க வேண்டும், சண்டையில் தோற்றுவிட்டால் நாஸி அரசியலும், ஜெர்மானியர்களும் அடியோடு அழிந்துவிடுவார்களென்று பயந்து பேசினார். கிரீஸ், ரஷியா, ஜப்பான் மூவரசு ஒப்பந்தம் இவைகளைப்பற்றிப் பேசவேயில்லை.

## பால்கன்ஸ்.

ஹங்கேரியும், யுகோஸ்லாவியாவும் தங்களுக்குள் சாச்வதமாகச் சிநேகமும், அமைதியுமிருப்பதற்காக உடன்படிக்கையொன்று செய்துகொண்டிருக்கின்றன. இதை அச்சு நாடுகள் தங்களுக்குச், சாதகமென்று சொல்லிக்கொண்டாலும். இது வெறும் பேச்சாயிருக்கலாம். அல்லது அச்சு நாடுகளின் ஏய்ப்பைத்தடுக்க தங்களுக்குள் செய்துகொண்ட ஏற்பாடாயுமிருக்கலாம்.

## தூரக்-கிழக்குப்-பிரதேசம்.

நிங்போவிலும், ஹாங்சாவ்-பேயிலும் சீனத்துருப்புகள் எதிர்க்கப்பட்டன. சூஸான் தீவுக்கப்பாலுள்ள சீன ராணுவ நிலையங்கள் விமானங்களால் தாக்கப்பட்டன. நிங்போவுக்குக் கிழக்கேயுள்ள சை-கியோ யுத்தக்கப்பல்களால் எதிர்க்கப்பட்டது



சைனாவுக்கு 100-லக்ஷம் பவுன் கடன்கொடுக்க பிரிடன் சம்மதித்திருக்கிறது. அதில் 50-லக்ஷம் செல்வ நிலையை ஸ்திரப்படுத்த உபயோகிக்கப்படும், மற்ற 50-லக்ஷம், பவுன் செலாவணியுள்ள இடங்களில் சைனா வாங்கும் சாமான்களுக்கு விலை கொடுக்க உபயோகப்படும்.

## பிரெஞ்சு-இந்து-சைனா.

கம்யூனிஸ்ட் கக்ஷியார் ஸைகானில் செய்த கலகம் சைன்யங்களைக்கொண்டு அடக்கப்பட்டதாகவும், பழிக்குப்பழி வாங்கும்பொருட்டு பிரெஞ்சு விமானங்கள் தாய்லாந்தைத் தாக்கியதாகவும் தாய்லாந்துக்குள் ஆக்கிரமித்த 100 பிரெஞ்சு சிப்பாய்கள் விரட்டப்பட்டார்களென்றும் செய்திகள் வந்திருக்கின்றன.

## விமானப்-போர்.

இந்த வாரத்தில் பெர்லினும் நேபிள்ஸூம் விசேஷமாய் பிரிடனால் எதிர்க்கப்பட்டன. எதிரி பர்மிங்ஹாமையும் ஷெப்பீல்டையும் எதிர்த்தான். பெயர்போன ஈடன் பள்ளிக்கூடம் சேதப்பட்டது. மற்ற விமானப்போர் விபரங்களைக் கீழே காணலாம்.

## இந்தியா.

இந்தியக் கப்பற்படைக்கு ஒரு புதுக்கப்பல் கட்டப்பட்டு டிஸம்பர் 15-ல் முதல்முதலாக ஓட்டப்பட்டது. அதற்கு மிஸ்ஸஸ் எஸ். இ. ரங்கனாதன் நாமகரணம் செய்தாள். இவள் இப்பொழுது இந்தியா மந்திரிக்கு ஆலோசகராய் நியமிக்கப்பட்டிருக்கும் திவான் பகதூர் எஸ். இ. ரங்கநாதனுடைய மனைவி. நாமகரண கொண்டாட்டத்துக்குப்பின் நடந்த பிற்பகல் போஜனத்தில், கப்பல் கட்டும் கம்பெனியின் சேர்மன் பிரிடிஷ் கப்பற்படைக்கிருக்கும் குணங்களே இந்தியக் கப்பற்படையிலும் காணப்படுவதாகச் சொன்னார். அப்பொழுது அங்கு பிரஸன்னமாயிருந்த ஸர் பிரோஸ்கான் கிழக்குப் பிரதேசங்களில் இந்தியாவின் பொறுப்பு அதிகப்பட்டுவருவதற்குத் தக்கபடி இந்திய கப்பற்படை விருத்தியாக வேண்டுமென்றும், பிரிடிஷ் கப்பல்-கட்டும் தொழிலாளிகளின் உதவியாலும், பிரிடிஷார் கொடுக்கும் பயிற்சியாலும், ஜப்பானைக்காட்டிலும் பலமான கப்பற்படை இந்தியாவுக்கு விரைவில் ஏற்பட்டுவிடுமென்றும் நம்புவதாகச் சொன்னார். திவான் பகதூர் ரங்கனாதன் இந்தியா யுத்தத்துக்குச் செய்திருக்கும் பொருளுதவியைக் காட்டிலும் இளம் இந்தியர்கள் ராணுவங்களில் உற்சாகத்தோடு சேர்ந்திருப்பதே பெரிதென்றும், ஸாம்ராஜ்ய சேவையில் இனி அதிகப் பங்கு எடுத்துக்கொள்ள இந்தியச் சைன்யமும், கப்பற்படையும் சீக்கிரத்தில் பலப்படுத்தப்படுமென்று நினைப்பதாயும் பேசினார்.

கல்கத்தாவில் டிஸம்பர் 17-ல் வியாபாரச் சங்கங்களின் பிரதிநிதிகளின் சங்கத்தின் வருஷாந்திரக் கொண்டாட்டத்தின்போது வைஸிராயவர்கள் யுத்த சகாயத்துக்காக இந்தியக் கைத்தொழில்கள் செய்திருப்பதையும் அதனால்

கைத்தொழில்கள் அபிவிருத்தி யடைவதையும் பற்றிப் பேசிய பிரசங்கத்திலிருந்து கீழ்க்கண்ட சமாசாரங்கள் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன :—

## தொழில் கற்றுக்கொடுக்க உபாத்தியாயர்கள்.

யுத்த சாமான்களைத் தயாரிக்க எவ்விதம் உதவி செய்யலாமென்பது அடிக்கடி கவனிக்கப்படுகிறது. 'நாஷனல் ஸர்விஸ்' சட்டத்தின்படி இந்தியாவிலிருக்கும பழக்கப்பட்ட தொழிலாளிகளை நன்முய் வேலைசெய்யப் பழக்கப்படுத்த 10-லக்ஷ ரூபாய் சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. இதிலிருந்து புதிதாக 15,000 வேலைக்காரர்கள் ஒருவருஷத்தில் கிடைக்கலாம்.

பொதுஜன தேவைகளுக்கான தொழில்களுக்குப் பாதகமில்லாதபடி இவர்கள் பொறுக்கப்பட்டு யுத்த-சகாய வேலைக்குப் பழக்கப்படுகிறுர்கள்.

பிரிடிஷ் தொழில் இலாகா மந்திரி கற்பனைசெய்து, உதவியும் கொடுத்து சில இந்தியத் தொழிலாளிகள் இங்கிலாந்துக்கு அனுப்பி அங்கே பழக்கப்படுவார்கள். இதிலிருந்து விசேஷ நன்மையேற்படுமென்று நினைக்கிறேன்.

இவர்கள் வேலையைக் கற்றுக்கொண்டு திரும்பிவந்து யுத்த உதவிக்கான காரியங்களையும் பொது வேலைகளையும் செய்து தேசத்தொழிலபிவிருத்திக்கு உபயோகப்படுவார்கள்.

## ஏற்றுமதி செய்ய நாடுகள்.

யுத்தத்தால் ஏற்றுமதிகள் செய்ய நாடுகள் குறைந்துவிட்டதாகச் சொல்லுகிறுர்கள். பிரிடிஷ் சாம்ராஜ்ய நாடுகளுக்கெல்லாம் இந்தக் கஷ்டமுண்டு. இதிலிருந்து வியாபாரிகளுக்கு நஷ்டமேற்படும். ஆனுல் நாமெல்லாம் சம்மதிக்க வேண்டியதுதான். பொருளாதார-யுத்தத்தால் யுத்தம் சீக்கிரம் முடிவுக்குவரும். ஆகவே பிரிடிஷ் கவர்ன்மெண்டோடு ஒத்துழைத்து மேற்சொன்ன பொருளாதாரப் போரை நடத்திவருவதில் கூடியவரையில் வியாபாரத்துக்கும் கஷ்டங்களைக் குறைக்க வழிகள் தேடப்பட்டு வருகின்றன.

இக்காரியங்களுக்காக எக்ஸ்போர்ட்-அட்வைஸரி கவுன்ஸில் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இதன் அமைப்பு உங்களுக்குத் திருப்தியைக் கொடுத்ததில் எனக்குச் சந்தோஷம். இதிலிருந்து அநேக சிக்கல்கள் நிவர்த்தியாகுமென்று நினைக்கிறேன்.

இந்தியச் சரக்குகளை விற்க வேறு இடங்களும், இப்பொழுது ஏற்றுமதியாகும் இடங்களில் வியாபாரத்தை அதிகப்படுத்த யோசனைகளும் செய்யப்பட்டு வருகின்றன.

இதற்காக, ஆஸ்திரேலியாவிலும், நியூஸிலாந்திலும் ஒரு ட்ரேட்-கமிஷனர் நியமிக்கப்பட்டிருக்கிறுர். இந்த நியமனத்திலிருந்து, யுத்த காலத்திலும் பிறகும் வியாபாரம் அபிவிருத்தியாகுமென்று நினைக்கிறேன்.



இதர நாடுகளிலும் கமிஷனர்கள் நியமிக்கும் உத்தேசமிருக்கிறது.
அதோடு, வேலைசெய்த, செய்யப்படாத சரக்குகளின் வியாபாரம் அதிகப்பட
ட்ரேட்-மிஷன்களை அனுப்பப்போகிறேும்.

யுத்த நெருக்கடியின் பயனுகச் சில புதுத் தொழில்கள் உற்பத்தி செய்யப்
பட்டிருக்கின்றன. மேலும் மற்ற சில இம்மாதிரியான புதுத் தொழில்கள் இனி
ஏற்படுமென்று நினைக்கிறேன்.

இவைகளின் விபரங்களை இப்போது சொல்லுவதற்கில்லை. ஆனுல் கேந்திரத்
தொழிலாகிய அலுமினியக் கைத் தொழிலைப்பற்றி இப்பொழுது சிறிது
சொல்லுகிறேன்.

அலுமினிய உற்பத்திக்குவேண்டிய தாதுப்பொருள் இந்தியாவில் ஏராள
மாய்க் கிடைக்கின்றது. இப்பொழுது கவர்ன்மெண்டு கொடுக்கும் சௌகூர்யங்
களிலிருந்து இந்தச்சரக்கு சீக்கிரம் தயாரிக்கப்பட்டு இப்பொழுது யுத்த காரியத்
துக்கும், உதவி பிறகு சமாதான காலத்தில் மற்ற காரியங்களுக்கும் உபயோகப்படு
மென்று நினைக்கிறேன். இதேமாதிரி வேறு தொழில்களும் ஏற்படலாம்.

## அக்கரை வியாபாரம்.

ஸப்ளை டிபார்ட்மெண்டுக்குப் பல தடைகளிருந்தும் அது ஏராளமான வியா
பாரத்தைச் சாதித்திருக்கிறது. அதனுடைய ஒரு பாகமாகிய இரண்டு கொள்
முதல் இலாகாக்கள் ஒரு வருஷத்தில் 56½ கோடி பெறுமான வியாபாரத்தை
நடத்தியிருக்கின்றன. 1940-ம் வருஷம் முடிவதற்குள் யுத்தத்துக்காக 273 லக்ஷ
ரூபாய் பெறுமான 280,000 டன் மரமும் 270 லக்ஷ ரூபாய் கான்வாசும்,
500 லக்ஷ ரூபாய் கூடாரங்களும் விற்றிருக்கும்.

உதாரணமாகச் சொல்லுமிடத்து, சைன்யங்களுக்கு உடுப்புத்தைக்கும்
வேலையில் இதற்குமுன் 750 பேர்களும் இப்பொழுது 18,000 பேர்களும் வேலை
செய்கிறுர்கள்.

இப்பொழுது சொன்னது பொது ஸ்டோர்களைப்பற்றியது. ராணுவ
சாமான்களில் 1,200 லக்ஷம் சிறு துப்பாக்கி வெடிகளும், 400,000 மருந்த
டைத்த குண்டுகளும், இதர வெடிகளும், இன்ஜினியரிங் சாமான்களும் செய்யப்
பட்டிருக்கின்றன.

74 லக்ஷ ரூபாய்க்கு யுத்தக்கப்பலும் வாங்கப்படுகிறது.

---

| தேதி. | பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **9—12—40** (திங்கட்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | விமான உற்பத்திச்சாலை.—ப்ரமன் (Bremen). | ...... | தீப்பிடித்தது. |
| | கடற்படை நிலயம்.-லோரியான் (Lorient) | ...... | பலமாகத் தாக்கப்பட்டது. |
| | கப்பல் நிற்கும் இடங்கள்.—புலாயின் (Boulogne). | ...... | சேதமாயின. |
| | படையெடுக்க உபயோகப்படும் துறைமுகங்கள்.—பிரஞ்சுக் கடற்கரை. | 1-விமானம். | ஒரே தீமயம். 1-விமானம். |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | எதிரிவிமான நிலயங்கள்.—டெர்ணவி (Derna)லிருந்து ஸிடி எல் பரானி (Sidi El Barrani) வரையில். | ...... | எல்லா விடங்களிலும் தீப்பிடித்தது. |
| | விரோதி சைன்யங்கள், மோட்டார் வண்டிகள்.—மேற்கு பாலைவனத் (Western Desert)தில் சண்டை நடக்கும் இடங்களிலெல்லாம். | ...... | உயிருக்கும், சாமான்களுக்கும் அதிகச் சேதம். |
| | | நஷ்டமில்லை. | 22-விமானங்கள். |
| | க்ஸாலா.—(Kassala). | | |
| | ரயில்பாதை.—அடிஸ் அபாபா (Addis Abbaba)விற்கும் ஜிபுடி (Jibuti)க்கும் மத்தியில். | | |
| **10—12—40.** (செவ்வாய்க்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | ரயில்வே ஜங்ஷன்கள், மின்சார உற்பத்தி ஆலைகள், விமான நிலயங்கள், உள்நாட்டில் நதிகளிலுள்ள சிறிய கப்பல் துறைகள்.—மேற்கு ஜெர்மனி (Germany), ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் நாடுகள். | ...... | பலத்த சேதம். |
| | துறைமுகங்கள்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel) துறைமுகங்கள். | 2-விமானங்கள். | ...... |



| தேதி. | பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ் கிரேக்க விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **10—12—40.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | விரோதி சைன்யங்கள் தங்குமிடங்கள், விரோதி சைன்யங்கள் குழுமியிருக்கும் இடங்கள், மோட்டார் வண்டிகள்.—பார்டியா (Bardia), ஸோலம் (Sollum) பிரதேசம். | ...... | பலமாகத் தாக்கப்பட்டன. |
| | விமான நிலயம்.—எல் ஆடம் (El Adem) | ...... | சேதமாயிற்று. |
| | சைன்யங்கள் வசிக்குமிடங்கள்.—பார்டியா (Bardia). | ...... | ...... |
| | மேட்டின்மேல் ரோட்.-ஸோலம் (Sollum). | ...... | ...... |
| | தரையிலிருக்கும் விமானங்கள்.—கஸாலா (Gazala). | நஷ்டமில்லை. | 10 விமானங்கள். |
| | **அல்பேனியா (Albania).** | | |
| | துறைமுகம் கட்டடங்கள், வெடிமருந்து கிட்டங்கிகள், மோட்டார் வண்டி நிறுத்தும் இடம்.—வலோண (Valona). | ...... நஷ்டமில்லை. | ஒரு கப்பல்மேல் குண்டு வீழ்ந்தது. பலத்த சேதம். |
| **11—12—40.** (புதன்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | ஒரு மின்சார உற்பத்திச்சாலை, ரயில் வண்டிகள் நிற்கும் இடங்கள்.—மான்ஹீம் (Mannheim). | ...... | ...... |
| | மின்சார உற்பத்தி ஆலைகள், உள்நாட்டுத் துறைமுகங்கள், ரயில் வண்டிகள் நிற்குமிடங்கள்.—மேற்கு ஜெர்மனி (Germany). | ...... | ...... சேதமாயின. |
| | இங்கிலாந்தைப் படையெடுக்க உபயோகப்படும் துறைமுகங்கள்.—கலே (Calais), புலாயின் (Boulogne) முதலிய பல துறைமுகங்கள். | ...... | தீயும் வெடிகளும் கிளம்பின. |
| | விமான நிலயங்கள்.—ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் நாடுகள். | ...... | ...... |

| தேதி. | பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **11—12—40.** (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | விமான நிலயங்கள்.–காம்புட் (Gambut), அஸீஸ் (Azeiz), மொனஸ்டீர் (Monastir), எல் ஆடம் (El Adem), எல் குப்பி (El Gubbi), டெர்ண (Derna), மிமி (Tmimi), எல் கஸாலா (El Gazala). | ...... | தரையிலிருக்கும் பல விமானங்கள் நாசமாயின. |
| | பின்வாங்கும் கருப்புச் சட்டை துருப்புகள்.—ஸோலம் (Sollum). | ...... | பலருக்குக் காயம். |
| | பாதுகார்த்தல்.—பிரிடிஷ் அணிகள், யாவெல்லோ (Yavello). | ...... | 8 விமானங்கள். 3 விமானங்கள். |
| | **இதாலி (Italy).** | | |
| | கப்பல் நிற்குமிடங்கள்.–நேபிள்ஸ்(Naples). | ...... | பலத்த சேதம். |
| **12—12—40.** (வியாழக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | இன்று காலநிலை சரியாயில்லாததால் படையெடுப்பில்லை. | | |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | பட்டணம், துறைமுகம்.–டொப்ருக் (Tobruk). | ...... | தீப்பிடித்தது. |
| | பெட்ரோல் கிடங்குகள்.–ஸோலம்(Sollum) | ...... | தீப்பிடித்தன. |
| | விமான நிலயங்கள்—எல் ஆடம் (El-Adem), பார்டியா (Bardia), எல் மிமி (El Tmimi). | 2 விமானங்கள் | தரையிலிருக்கும் பல விமானங்கள் நாசமாயின. |
| | மோட்டார் வண்டிகள், சைன்யங்கள்.—முன்னணியில். | ...... | பலத்தசேதம். |
| | விரோதி சைன்யங்கள் தங்குமிடம்.–குப்பா (Gubba). | ...... | பல குடிசைகள் நாசம். |
| | மோட்டார் வண்டிகள் ரிபேர் செய்யுமிடம்.—டிரிடாவா (Diredawa)விலுள்ள லகாரே (Lagarre) | ...... | திக்கிரையாயிற்று. |



| தேதி. | பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **12—12—40.** (வியாழக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **அல்பேனியா (Albania).** | | |
| | சாமான்கள் சேமித்து வைத்திருக்குமிடங்கள்.–இதாலிய அணிகளுக்குப் பின்னால். | ...... | ...... |
| **13—12—40.** (வெள்ளிக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | கப்பல் கட்டும் துறைகள்.—கீல் (Kiel) | ...... | பலத்தசேதம். |
| | தொழிற் சாலைகள், இன்னும் மற்ற முக்யமான இடங்கள்.—ப்ரமன் (Bremen). | ...... | பல இடங்களில் பெருந்தீ பிடித்தது. |
| | கப்பல் கட்டுமிடங்கள், விமான நிலயங்கள்.—ஹாலந்து (Holland). | ...... | சேதமாயின. |
| | ஸப்மரைன் (Submarine) நிலயம்.—போர்டோ (Bordeaux). | நஷ்டமில்லை. | கடற்கரையில் ஒரு கட்டடம் இடிந்தது. |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | சைன்யங்கள் வசிக்குமிடம், கம்பியில்லாத் தந்தி ஆபீஸ், ராணுவ கட்டடங்கள்.—டெர்ண (Derna). | ...... | கடுந்தீ பரவியது. |
| | விமான நிலயங்கள், சாமான் கிடங்குகள், எண்ணெய்த் தொட்டிகள்.—பார்டியா (Bardia), குப்பி (Gubbi). காம்புட் (Gambut), டெர்ண (Derna), மிமி (Tmimi), பொம்பா (Bomba), கஸாலா (Gazala). | 4 விமானங்கள். 3 விமானிகள் பத்திரம். | சேதமாயின. 15 விமானங்கள். |
| | விரோதி சைன்யங்கள்.—டொப்ருக்—பார்டியா (Tobruk-Bardia) ரோடு. | ...... | பலருக்குக்காயம். |
| | விமான நிலயங்கள்.—கூரா (Gura), அஸ்மாரா (Asmara). | ...... | ...... |
| | எண்ணெய்க் கிழாய்கள்.—டிரிடாவா (Diredawa). | ...... | தீப்பிடித்தன. |
| | காப்ரோனி (Caproni) தொழிற்சாலை.—மாய் அடாகா (Mai Adaga). | ...... | சேதமாயிற்று. |

| தேதி. | பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|

**13—12—40.** (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி.

அல்பேனியா (Albania).

*இன்று காலநிலை சரியாயில்லாததால் படையெடுப்பில்லை.*

**14—12—40.** (சனிக்கிழமை).

ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | | |
|---|---|---|---|
| | விரோதித் துறைமுகங்கள்.—ப்ரெஸ்ட் (Brest), லோரியான் (Lorient). | நஷ்டமில்லை. | ...... |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | | |
|---|---|---|---|
| | சைன்யங்கள் வசிக்குமிடங்கள், சாமான் கிட்டங்கிகள்.—பார்டியா (Bardia). | ...... | கட்டடங்கள் இடிந்தன, பெருந் தீ பிடித்தது. |
| | துறைமுகங்கள், கப்பல்கள்.—டொப்ருக் (Tobruk), ட்ரிபோலி (Tripoli). | ...... | ...... |
| | சைன்யங்கள் வசிக்குமிடங்கள், ராணுவ முக்கியமான இடங்கள்.—ஸோலம் (Sollum), டெர்ணு (Derna), அஸ்மாரா (Asmara), ஸீலா (Zula), கூரா (Gura), டாங்கிலா (Dangila). | ...... 2 விமானங்கள். | ...... பலத்தசேதம். 26 விமானங்கள். |

அல்பேனியா (Albania).

| | | | |
|---|---|---|---|
| | விமான நிலயம், மோட்டார் வண்டிகள் நிறுத்துமிடம், சைன்யங்கள் வசிக்குமிடங்கள்.—வலோணு (Valona). | நஷ்டமில்லை. | ...... |

**15—12—40** (ஞாயிற்றுக்கிழமை).

ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | | |
|---|---|---|---|
| | மின்சார உற்பத்தி ஆலைகள், ரயில்வே ஜங்ஷன்கள், சாமான் கிட்டங்கிகள், வெடிமருந்து தொழிற்சாலைகள், ஜனங்களுக்கு உபயோகப்படும் அநேக ஸாதனங்கள்—பெர்லின் (Berlin) பிரதேசம். | | கடுமையாகத் தாக்கப்பட்டன; பெருந் தீ எங்கும் கிளம்பியது. பலத்தசேதம். |



| தேதி. | பிரிடிஷ், கிரேக்க விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|

**15—12—40.** (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி.

ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்—தொடர்ச்சி.

| | | | |
|---|---|---|---|
| | சாமான் கிடங்குகள், தொழிற்சாலைகள், எண்ணெய் ஆலைகள்.—உள்நாட்டுத் துறைமுகமான பிராங்பர்ட் (Frankfurt). | | |
| | கப்பல்கட்டுமிடங்கள்.-கீல் (Kiel), ப்ரமன் (Bremen). | ...... | சேதமாயின. |
| | விரோதி வியாபாரக்கப்பல்கள்.-பிரஞ்சுக் கடற்கரை (French coast). | ...... | இரண்டு கப்பல்களின் மேல் குண்டு வீழ்ந்தது. |

இதாலி (Italy).

| | | | |
|---|---|---|---|
| | குருயிஸர்கள் (Cruisers), நாசகாரிகள் (Destroyers), விமானநிலயம், ரயில்வே ஸ்டேஷன்கள்.—நேபிள்ஸ் (Naples). | ...... | பல கப்பல்களின் வெகு சமீபத்தில் குண்டுகள் வீழ்ந்தன. |

இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | | |
|---|---|---|---|
| | பாதுகாத்தல்.—பிரிடிஷ் படையின் முன்னணி. | | |
| | விரோதிகளைத் தாக்குதல்.—ஒரு பெரிய விஸ்தீர்ணத்தில், பார்டியா (Bardia), மிமி (Tmimi), கஸாலா (Gazala), டொப்ருக் (Tobruk), எரிடிரியா (Eritrea)விலுள்ள குப்பி (Gubbi), எல் ஆடம் (El Adem), போம்பா (Bomba), டெர்ணு (Derna), அப்போலோனியா (Appollonia), பெனினு (Benina), கூரா (Gura), கோண்டார் (Gondar), அஸாப் (Assab), பஹதார் (Bahadar). | ... ... | பலத்த சேதம். |

---

| தேதி. | விரோதி விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | விரோதியின் விமான நஷ்டம். | பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **10—12—40.** (செவ்வாய்க்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | **பகலில்.**—கிழக்கு கெண்ட் (Kent) | ...... | சேதமில்லை, ஒருவருக்கும் காயமில்லை. |
| | **இரவில்.**—கிழக்கு ஆங்கிலியா (Anglia) | .... | சேதமே இல்லை. |
| **11—12—40** (புதன்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | **பகலில்.**—இங்கிலீஷ் கால்வாய்(Channel), இங்கிலாந்தி (England)ன் தென் கிழக்குக் கடற்கரையில் ஒரு பட்டணம். | 1 விமானம். | சிலருக்குக் காயம். நஷ்டமில்லை. |
| | **இரவில்.**—ஒரு மேற்கு மிட்லாண்ட்ஸ் (Midlands) பட்டணம், இன்னும் சில இடங்கள். | | சில இடங்களில் தீப்பிடித்தது, உடனே அணைக்கப் பட்டுவிட்டது. |
| **12—12—40** (வியாழக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | **பகலில்.**—லண்டன் (London) பிரதேசம். | ...... | சொற்பச் சேதம், சிலருக்குக் காயம். |
| | கெண்ட் (Kent) கடற்கரை, இங்கிலாந்தி (England)லும், வேல்ஸி (Wales)லும் சில இடங்கள். | 4 விமானங்கள். | நஷ்டமில்லை. |
| | **இரவில்.**—வடக்கு இங்கிலாந்து (England), இன்னும் சில இடங்கள். | 2 விமானங்கள். | சொற்பச் சேதம், நஷ்டமில்லை. |
| | **பிரிடிஷ் ஆபிரிக்கா (Africa).** | | |
| | போல் ரெக்ஷெட் (Polregshed). | 1 விமானம். | நஷ்டமில்லை. |
| **13—12—40.** (வெள்ளிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | **பகலில்.**—படையெடுப்பே இல்லை | ...... | ...... |
| | **இரவில்.**—ஷெப்பீல்டு (Sheffield) பிரதேசம். | 2 விமானங்கள். | பலருக்குக் காயம். |



| தேதி. | விரோதி விமானப் படையெடுப்புகளின் விவரங்கள். | விரோதியின் விமான நஷ்டம். | பிரிடிஷ், கிரேக்க விமான நஷ்டமும் படையெடுப்பால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **13—12—40.** (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **அல்பேனியா (Albania)வில் கிரேக்கத் துருப்புகள்.** | | |
| | **கிரேக்க அணிகள்.**—வடக்கு யுத்தப் பிரதேசம். | ...... | ...... |
| **14—12—40** (சனிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain)** | | |
| | **பகலில்.**—மேற்கு மிட்லண்ட்ஸி (Midlands)ல் ஒரு பட்டணம். | ...... | கடைகளும் வீடுகளும் சேதமாயின, சிலர் கொல்லப் பட்டனர். சிலருக்குக் காயம். |
| | **ஒரு பண்ணை.**—ஹோம் கவுண்டீஸ் (Home Counties). | ...... | நஷ்டமே இல்லை. |
| | **இரவில்.**—தேம்ஸ் (Thames) நதி முகத் துவாரம். | ...... | சிலருக்குக்காயம். |
| **15—12—40.** (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain)** | | |
| | லண்டன் (London) பிரதேசம், ஷெப்பீல்டு (Sheffield), வட இங்கிலாந்தி (England)ல் சில பட்டணங்கள். | ...... | சொற்பச்சேதம். சிலருக்குக்காயம். |
| | **கிரீஸ் (Greece)** | | |
| | **கிராமங்கள்.**—கிரீஸில் உள் நாட்டில். | ...... | சேதமில்லை. |
| | **மத்தியதரைக் கடலில் பிரிடிஷ் நாடுகள்.**—மால்டா (Malta). | ...... | விரட்டியடிக்கப் பட்டன. |
| **16—12—40** (திங்கட்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | **சில பிரதேசங்கள்.**—வடக்கு இங்கிலாந்து (England), மிட்லண்ட்ஸ் (Midlands), லண்டன் (London) பிரதேசம். | ...... | கடைகளும், வீடுகளும் சேதமாயின; சிலர் மாண்டனர். சொற்பச்சேதம். |
| | **மற்றும் சில இடங்கள்.**—இங்கிலாந்து (England). | ...... | ...... |

# யுத்தக் குறிப்புகள்.

## பற்று வரவு.

அமெரிக்காவிடமிருந்து யுத்த தளவாடங்களை வாங்குவதற்குப் போதிய பணத்தைச் சேகரிக்கும் வழிகளைப்பற்றிய நேர்மையான வியாபாரப்பிரச்னையைக் குறித்து, காலஞ்சென்ற லோதியன் பிரபு கூறிய சில அறிவுரைகளைப் பற்றிச் சிலர் மடத்தனமாக அபிப்பிராயப்படுகின்றார்கள்.

"இந்த வியாபாரம் மலையையே முழுங்கிவிடும் போலுள்ளது. செல்வத்தில் தலைசிறந்த இங்கிலாந்திற்கும் இதனால் பணமுட்டு ஏற்படும் போலிருக்கிறது" என்று அவர் கூறியதை, எங்கெங்கும் அறியாமையினால் தப்பர்த்தம் செய்து விட்டார்கள் சிலர். சில காலத்திற்குள் பிரிடனால் இந்தச் சாமான்களுக்குப் பணம் கொடுக்கமுடியாது என்றும், அம்மாதிரி மறுபடியும் பணம் கொடுத்து வாங்க சக்தி ஏற்படும் வரையில் அமெரிக்கா சாமான்கள் கொடுத்துதவாது என்றும் இவர்கள் பிதற்றினார்கள்.

இவ்வாறு பிதற்றுவது வெறும் முட்டாள்த்தனம் என்பதை ஸ்ரீ போனல்ட் டைமன் நவம்பர் 28-ம் தேதி ஒலிபரப்பிய ரேடியோ பிரசங்கத்தில் எடுத்துக் காட்டியிருப்பதில் சில பகுதிகளை நாம் கவனிப்போம். இதைக் கவனிக்கப்புகு முன், இந்நிலைமையைப்பற்றிய அமெரிக்காப் பொருளாதார சட்டங்கள் எவை என்று பார்ப்போம்.

(1) அமெரிக்கா நடுநிலைமைச் சட்டந்தான் மிகவும் முக்யமான தடையாகும். 1935-ல் இயற்றப்பட்டு 1937-ல் புதுப்பிக்கப்பட்ட இச்சட்டத்தை நீக்கி விட்டால் பிரிடனின் பணக் கஷ்டம் நிவர்த்தியாகும்.

இச்சட்டத்தின்படி, யுத்தத்தில் ஈடுபட்ட நாடுகளுக்கு ஆயுதங்கள் தரக் கூடாதென்றும், மற்ற சாமான்கள் கொடுப்பதை ரொக்க பேரமாகவே வைத்துக் கொள்ளவேண்டுமென்றும் கூறப்படுகிறது. அதாவது சாமான்கள் வாங்குகிறவர் அதன் விலையை உடனே கையில் கொடுத்துவிட்டு, அச்சாமான்களை எடுத்துப் போகக் கப்பல்களையும் தாங்களே ஏற்பாடு செய்யவேண்டும்.

(2) ஆயுதச் சாமான்களை ஏற்றுமதி செய்வதைப் பரிபூரணமாகத் தடுத்து இருந்ததை ரூஸ்வெல்ட் 1939-ல் நீக்கிவிட்டார். ஆனால் ஸெனட்டர்கள் ரொக்கம் கொடுத்துச் சாமான்கள் வாங்கிக்கொண்டுபோக வேண்டுமென்பதை வற்புறுத்தினார்கள்.

(3) தற்போதைய சட்டத்தின்படி அமெரிக்கா பிரிடனுக்குக் கடன் கொடுக்கமுடியாது. தன்னுடைய சொந்தக் கப்பல்களில் ஆயுதங்களையும் குண்டுகளையும் ஏற்றி வேறு நாட்டுக்கு அனுப்பக்கூடாது.



இந்த விதிகள் பிரிடனை எவ்வாறு பாதிக்கின்றன என்பதைப்பற்றி ஒரு நிபுணர் விளக்கிக்கூறுவதைக் கேளுங்கள்.

## ஒலிபரப்பியது.

"ஏற்கனவே வெகுகாலமாக எல்லாரும் நன்கு அறிந்திருந்த சில விஷயங்களைத் தான் லோதியன் பிரபு நமது கவனத்துக்குக் கொண்டு வந்தார். சமாதான காலத்தில், பல தேசங்களோடு வியாபாரம் செய்துவந்தால் நமக்கு இறக்குமதி லாபம் கிடைக்கும். விசேஷமாக அமெரிக்கா ஐக்கிய நாடுகளுடன் வர்த்தகம் செய்வதில் தான் இந்த லாபம் அதிகமாகக் கிடைத்தது. எப்படியென்றால், நாம் வாங்கும் சாமான்கள் நாம் விற்பவைகளைவிட அதிகமாயுள்ளன. இந்த அதிகப் படியான சாமான்களின் கிரயத்தை நாம் பலவழிகளில் செலுத்துகிறோம். இதர நாடுகளின் சாமான்களை நம்முடைய கப்பல்களில் ஏற்றிச்செல்கிறோம். அவர்களுக்காக நாணய மாற்றமும் லேவாதேவித் தொழிலும் இன்ஷூரன்ஸ் தொழிலும் செய்கிறோம். அன்னிய நாடுகளில் போட்டிருக்கும் பணத்திலிருந்து கிடைக்கும் வட்டியையும் லாபத்தையும் உபயோகப்படுத்திக்கொள்கிறோம். தங்கத்தையே அனுப்பிவைக்கிறோம் அல்லது கிரயம் செலுத்துவதற்குத் தேவையான அயல்நாட்டு நாணயங்களை, அயல்நாட்டுக் கடன் பத்திரங்களை விற்றுச் சம்பாதித்துக்கொள்ளுகிறோம்

யுத்தகாலத்தில் இந்த இறக்குமதி லாபமானது அதிகமாதல்வேண்டும். ஏனென்றால், நம்முடைய உணவுக்கும் உடைக்கும் மட்டுமின்றி, நம்முடைய தற்காப்புக்கும், படைகளைத் தயார் செய்யவெண்டிய சாமான்களுக்கும், நாம் இன்னும் அதிகமாக இறக்குமதி செய்யவேண்டும். அமெரிக்கா ஐக்ய நாடுகளிடமிருந்து நாம் ஏராளமாக ஆகாய விமான யுத்த கருவிகளை வாங்குவதை நீங்கள் அறிவீர்கள். அமெரிக்கர்கள் நமக்குச் சாமான்கள் கொடுத்துதவத் தீர்மானித்திருப்பது யாவருக்கும் தெரியும். இந்த வருஷத்தில் முதல் ஒன்பது மாதங்களில், அமெரிக்காவுடன் மட்டுமல்லாது மற்ற சாம்ராஜ்ய நாடுகளுடனும் நடத்திய வர்த்தக முழுவதிலுமிருந்து நமக்குக்கிடைத்த இறக்குமதி ஈவு, வருஷத்திற்குச் சுமார் 6,700 லக்ஷம் பவுன்கள் விகிதம் கிடைத்தன. அதாவது சண்டைக்கு முன்னால் கிடைத்ததைவிட இரண்டுமடங்கு அதிகம். அமெரிக்காவுடன் நடத்திய வர்த்தகத்தில் கானடாவுக்குமட்டும் முன்னிருந்ததைவிட இரண்டு மடங்கு இறக்குமதி மிச்சம்.

ஆனாலும் நமக்குப் பணம் செலுத்த வழிகள் அதிகம் கிடையாது. நமது கப்பல்கள் நம்முடைய உபயோகத்திற்கு வேண்டும். லேவாதேவி இன்ஷூரன்ஸ் தொழில்களில் நமது வருமானம் வெகுவாக விழுந்துவிட்டது. இந்த அதிகப் படியான இறக்குமதி சாமான்களுக்கு விலை கொடுக்க நமக்கு அயல் நாட்டு நாணயங்கள் அதிகமாக வேண்டும். இதற்காக நாம் அதிகமாக ஏற்றுமதி செய்து இறக்குமதி மிச்சத்தைக் குறைக்கவேண்டும். அல்லது நம்முடைய தங்கத்தையும்

அயல்நாட்டுப் பத்திரங்களையும் விற்றுவிடவேண்டும். யுத்த தொழிற்சாலைகளுக்காக தொழிலாளரும் தொழிற்கருவிகளும் அதிகமாக வேண்டியிருந்தும், நாம் நம்முடைய ஏற்றுமதி வர்த்தகத்தையும் நன்முக நடத்திக்கொண்டுவருகிறோம். ஆயினும் நாம் வாங்கவேண்டியவைகளுக்கும் விற்கக்கூடியவைகளுக்குமுள்ள பேதம் மிகப்பெரிதாயுள்ளது. ஆகையால் இந்த அதிகப்படியான பணத்திற்காக நாம் நமது யுத்த நிதியையும், தங்கத்தையும், கடன் பத்திரங்களையும் நாட வேண்டியிருக்கிறது".

## கப்பல்களின் கணக்கு.

நம்முடைய வர்த்தகப்புள்ளி விவரங்களுடன், நம்முடைய கப்பற்படை நிலைமை (பிரிட்டனுடைய மற்ற செல்வங்களைவிட இதைத்தான் மிகவும் ஊக்கத்துடன் தாக்குகிறான் ஹிட்லர்) யின் புள்ளி விவரங்களையும் சிறிது கவனிப்போம். பகைவர்களும் பயங்காளிகளும் சொல்வதை நம்புவதைக் காட்டிலும் இந்தப் புள்ளிகளைப் படித்தறிவதே மேல்.

(1) நவம்பர் 10-ம் தேதிவரையில் நேர்ந்த பிரிட்டிஷ் கப்பற்சேதம் மொத்தம் 23,67,869 டன்கள். ஆனால் யுத்தத்தில் கைகொண்டும், பணங் கொடுத்து வாங்கியும் புதிதாகக் கட்டியும், கப்பற்படையோடு சேர்க்கப்பட்ட கப்பல்களின் தொகை ஆகஸ்ட் மாதக்கடைசியில் 20 லக்ஷம் டன்கள்.

(2) பிரிட்டன், நேசதேசங்கள், நடுநிலைமை நாடுகள் நவம்பர் முதல் தேதிவரையில் இழந்தது 38,09,208 டன்கள். ஆனால் நேசதேசங்களின் கப்பற் படை எவ்வளவு சேர்க்கப்பட்டு பெருகிவிட்டது என்பதைக் கவனியுங்கள் :—

நார்வே ... ... 35 லிருந்து 40 லக்ஷம் டன்கள்.
நெதர்லண்டுகள் ... 20 லக்ஷம் டன்களுக்குமேல்.
கிரீஸ் ... ... 15 லக்ஷம் டன்கள்.
போலந்து & பெல்ஜியம் ... 5 லக்ஷம் டன்கள்.

("சேர்க்கபபட்டு" என்று கூறுவது, இதுவரையில் சிறுபான்மையாக உபயோகப்படுத்தப்பட்டுவந்து இப்பொழுது முழுமையும் உபயோகப்படுத்தப் பட்டுவரும் கப்பல்களின் தொகையையே நான்குறிப்பிடுகிறேன்).

சென்ற யுத்தத்தைவிட இந்தயுத்தத்தில் வர்த்தகக் கப்பற் படைக்கு ஏற்பட்டுள்ள அதிகவேலைகளையும் அபாயங்களையும் உணர்ந்தோமானால், மன்னரின் கப்பற்படையின் பொறுப்பையும் அறிந்தோமானால் உடனே நாமும் சர்ச்சிலுடன் சேர்ந்து "நாமும் ஏதோ கொஞ்சம் செய்திருக்கிறோம்" என்று கூறி திருப்தியடைவோம். இதோடு மட்டுமன்றி சென்ற நான்கு வருஷ யுத்தத்தில் பிரஞ்சு, இத்தாலி, ஜப்பான், அமெரிக்கா, அயர்லாந்து முதலியவைகளின் கப்பல்களும் துறைமுகங்களும் நமக்கு உபயோகப்பட்டன. ஆனால் இப்பொழுது நம்முடைய கடற்படையாளரை, ஜெர்மானியர்கள், கடலிலிருந்தும், ஆகாயத்திலிருந்தும்,



நார்வே வடக்குக்கோடிக்கரையிலிருந்து ஸ்பெயின் எல்லைவரையிலும், தாக்கலாம். நமக்கோ அயர்லாந்து கடற்கரைப்பிரதேசத்தையும் உபயோகிக்க அனுமதியில்லை. இவ்வளவு நெருக்கடிகளுக்கிடையில்...........! உண்மையில் நாமும் ஏதோ கொஞ்சம் செய்யத்தான் செய்திருக்கிறோம். சந்தேகமில்லை.

## வீரர்களின் கூட்டம்.

பெயர் பெற்ற இலக்கிய நாடக விமர்சகராகிய ஸ்ரீ ஹான்னன் ஸ்வாபர்...... ஏழை எளியவரின் விஷயத்தில் அதிகப்பற்றுள்ளவரும், துணிகரமான எழுத்தாளருமான ஸ்வாபரை எல்லாருக்குமே பிடிக்காதுதான். ஆயினும் அவர் சமீபத்தில், லண்டன் பிரஜைகளைப்பற்றித் தந்துள்ள ஓர் ரஸமான குறிப்பை யாவரும் விரும்புவார்கள். "ஒவ்வொரு இரவிலும் அந்தி வேளையிலிருந்து அருணோதயத்திற்குள் ஆயிரக்கணக்கான வீரச்செயல்கள் நிகழ்கின்றன. ஓர் புதிய பற்று எங்கும் பரவுகின்றது. ஓர் புதிய உறவு பிறக்கின்றது. இன்னும் கொஞ்ச காலத்தில் 'கிழக்கு கிழக்குதான், மேற்கு மேற்குதான்' என்ற வசனம் லண்டனில் பொய்யாகி விடும். எல்லா வகுப்பினரும் ஒன்றாக துக்கக்கடலில் மூழ்குகின்றனர். வேந்தனும், வேலையாளும், சீமாட்டிகளும், சாதாரணபெண்களும், உயர்ந்தவரும் தாழ்ந்தவரும் யாவரும் ஒன்றாயினர். நம் கையிலுள்ளது குறைந்தாலும் நாம் தலைதூக்கியே நடக்கிறோம். எங்கும் இரத்தம் பெருகினாலும் நாம் பணிந்துவிடவில்லை. ஒவ்வொரு பிரஜையும் ஓரளவு கீர்த்தி சம்பாதித்துவிட்டான். அவன் உயிரோடு நடமாடும் உலக சரித்திரமாய் விட்டான். அவனுடைய மனோதிடமும், அமைதியும் பொறுமையுமே மனிதசமூகத்தைக் காப்பாற்றுகின்றன."

## தற்செயலாகக்கண்ட உண்மை.

ஹாலந்திலுள்ள ஒரு ஜெர்மானிய ரேடியோ ஸ்தாபனத்திலிருந்து ஓர் ஆங்கில ஒலிபரப்பை நான் தற்செயலாகக்கேட்க நேரிட்டது. பெர்லினில் நடந்த ஒரு செஞ்சிலுவைக் கொண்டாட்டத்தின் அமைதியையும உற்சாகத்தையும் பற்றி சரமாரியாகப் பொழிந்தார் பிரசங்கி. ஊரிலுள்ளவர்களும், அயல் நாட்டு இராஜதந்திரிகளும், இராணுவப் பிரதிநிதிகளும், ஆடம்பரமான உடைகளை அணிந்து கொண்டு அங்கு நடந்த அரசாங்க லாட்டரியைப் பார்க்கக் குழுமினார்களாம். மேலும் அந்த பிரசங்கி கூறியதன் சாராம்சமாவது :—"எங்களுடைய தலைநகரத்திலல்லாது வேறு எங்கு இவ்வளவு ஆடம்பரமான கொண்டாட்டங்கள் நடத்த முடியும்? லண்டனில்தான் நடத்த முடியுமா? நிச்சயமாய் முடியாது. சாதாரணமாக ஜனங்கள் இவ்வளவு பெரிதாகக் கூட்டம்கூட அஞ்சுவார்கள். ஆனால் இங்கோ..........................அதோடல்லாமல் கடைசியில் லாட்டரிப் பரிசுகள் வாங்கிக்கொண்டு செல்லும்போது அவர்கள் முகங்களில் பிரகாசித்த சந்தோஷம் நமக்கு என்றும் ஞாபகமிருக்கும். அழகிய கண்ணாடி பேலா பெற்றவர் ஒருவர். விலையுயர்ந்த பவுண்டன் பேனா பெற்றவர் ஒருவர். என்ன,

ஆனந்தம்! ஆனால் எல்லாரையும்விட சந்தோஷமாயிருந்தபொழுதும் ஒரு பெண்மணி. தனக்குக் கிடைத்த ஒரு பவுண்டு உயர்தர காப்பிக்கொட்டையுடன் அவள் கம்பீரமாக நடந்து சென்றது..............."

பாருங்கள், இந்த அதனப்ரசங்கத்தில்........................இந்த அரசாங்க லாட்டரியின் உள் அந்தரங்கத்தை, அதிலுள்ள உண்மையை."

## குமிழிகள் ஊதாதே.

குமிழிகள் எல்லாம் அழகானவைதான். ஆனால் காற்றில்லாத போது தான் அவைகளைக் கண்டானந்திக்க முடியும். கிரேக்கர்களின் வெற்றிக் கதைகளெல்லாம் வெறுங் குமிழிதான் என்று நாம் சொல்லவரவில்லை. இருந்தாலும் அளவுக்கு மிஞ்சிய நம்பிக்கையுடனிருப்பது மிகவும் அறியாமைதான். ஏனென்றால் சுற்றுவட்டாரங்களில் கடுங்காற்று வீசுகிறது. ஜெர்மனி உட்பிரவேசித்தால், நிலைமையே மாறிவிடலாம். கிரேக்கர்கள் அல்பேனியாவில் வெகுதூரம் முன்னேறியிருப்பினும், அவர்களுடைய போக்கு வரவு சாதனங்கள் அவ்வளவு தூரம் முன்னேறவில்லை என்று செய்திகள் குறிப்பிடுகின்றன. மிகவும் கலவரத்துடனும் குழப்பத்துடனும் இத்தாலியர் பின்னடைந்தாலும், அவர்கள் முழுவதும் முறியடிக்கப்படவில்லை. கிரேக்கர்கள் தங்களுடைய மூலஸ்தானத்திலிருந்து வெகுதூரம் இக்கடினமான மலைப்பிரதேசத்தில் முன்னேறி வந்துகொண்டேயிருக்க, இத்தாலியர்கள் தென்னல்பேனியாவைத் துறந்து, எல்பாஸன்—பிராட்—வெலோனா வரிசைக்கு வந்துவிடலாம். ஏனென்றால் இந்த கரையோரச் சமவெளியில்தான் இத்தாலியர் தங்களுடைய பீரங்கி வண்டிகளையும் போக்கு வரவு சாதனங்களையும் திறமையாக நடத்தமுடியும்.

## ஆனால்...............

இதுவரையில் கூறியது அதைரியப்படுத்தவல்ல. அளவுக்கு மிஞ்சிய நம்பிக்கை கொள்ளாமலிருக்கத்தான். நமக்கு இரண்டு விஷயங்கள் சந்தோஷத்தையளிக்கின்றன. இத்தாலியர்களுக்கு நேற்படும் அநேகத் தடைகளும் கஷ்டங்களும்; முஸோலினியின் எரிகிற நெருப்பில் எண்ணெயை ஊற்றுவது போன்ற செய்கை ஹிட்லரை நெருக்கடியில் கொண்டு விடுவதுமே. கிரீஸின்மேல் படையெடுக்க இரண்டு அச்சுநாடுகளும் ஒப்பந்தம் செய்து கொள்ளவில்லை என்பதைப்பற்றியும், ஜெர்மனியின் கிழக்குப்படையெடுப்பு இந்தக் குளிர்காலத்திலில்லை, அடுத்த இளவேனிற்காலத்தில்தான் என்பதைப்பற்றியும் இனி எள்ளளவும் சந்தேகமில்லை.

முஸ்ஸோலினி இறுமாந்து எதிர்பார்த்து முறியடிப்போமென்ற நம்பிக்கையுடனிருந்த கடுகளவு தடைகள் மலையளவு கஷ்டங்களாய் மாறி விட்டதைப் பாருங்கள்.

(அ) பகைவரின் நாட்டில் இத்தாலியர்கள் மிகவம் ஆபத்தான யுத்தம் புரிகிறார்கள். எங்கும் அவர்களைச் சுற்றி அந்நியர்கள்.



(ஆ) மன்னர்கனப் படையினாலும், நேசதேச கடற்படையாலும் இத்தாலியின் போக்குவரவு சாதனங்கள் பாதிக்கப்படுகின்றன.

(இ) சத்துருவின் பூமியில், பால்கன் கடுங்குளிரில் அவர்கள் ஒரு பெரிய சேனைக்கு உணவும் உடையும் இடமும் கொடுத்துக் காப்பாற்றவேண்டும். பாவம், அவர்கள் எதிர்பார்த்தது இந்நிலைமையல்ல. ஆதென்ஸ் நகரில் கொட்டமடிக்கலாம் என்று தான் எதிர்பார்த்திருப்பார்கள்.

(ஈ) இப்பொழுது இத்தாலியில் அமக்களப்படுகின்ற பாஸிஸ்ட் கக்ஷி—அதிகாரவர்க்க சண்டைகளோடு, அவர்கள் இன்னொரு நெருக்கடியையும் எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. இந்த குழப்பத்திலிருந்து இத்தாலியை மீட்போம் என்ற சாக்குச் சொல்லி ஹிட்லர், பிரென்னர் கணவாய் தொடங்கி நாடெங்கும் தன் துருப்புகளை நிரப்பி விடலாம். இந்த முறையில்தான் ஜெர்மனி உதவி செய்யக் கூடும். ஆனால் ஏற்கனவே யாவரும் விரும்பாத இவர்கள் உறவு இதனால் மிகவும் வெறுக்கத்தக்கதாய் விடும்.

## ஆனால் பெரிய பாகஸ்தர் என்ன நினைக்கிறார்?

இவ்வாறு பிரென்னர் கணவாயில் சென்று இதாலியில் குழுமிக்கொள்ள எவ்வளவு ஜெர்மானியர் சந்தோஷமாகத் தயாராகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள்? சமாதான காலத்தில், ஜெர்மன் அரசாங்கமானது, தன்னுடைய தெற்குத் தோழனை எவ்வளவாக அலக்ஷியம் செய்தது என்பதை அடிக்கடி காட்டியது. கிரேக்க வெற்றிக்குப்பிறகும், ஸிதிபரானியில் இத்தாலியர் படுதோல்வியடைந்த பிறகும்...........ஒரு ஜெர்மானியன் அவர்களுடைய மீட்சிக்காக ப்ளாரென்ஸ் வழியாகவோ ரோம் வழியாகவோ செல்லும் போது அவன் முகத்தில் மிளிரும் அதிகார ஆணவத்தைச் சற்று கற்பனை செய்து பாருங்கள்..........................

அவர்கள் இதைத்தான் செய்தாலும் செய்யலாம். ஏனெனில் இதைத்தவிர வேறு இரண்டே வழிகள்தான் உள்ளன. ஹிட்லர் இத்தாலியை இந்நாசத்திலிருந்து மீட்க (இத்தாலியரால் இந்த குளிர்காலத்திற்குள் இவ்வாபத்தைப் போக்க முடியாவிடில்) முதல் வழியாவது யூகோஸ்லேவியா வழியாக உட்புகுவது. இரண்டாவது பல்கேரியா வழியாகத் தாக்குவது. ஆனால் ஆராய்ந்து பார்த்தால் இந்த இரண்டு வழிகளும் கோரிய பலனைத்தரமாட்டா. யூகோஸ்லேவிய-டர்க்கியின் உறவு நெருங்கி வருகின்றது. இதாலிய சேனையினால் பயமில்லாமையால் யூகோஸ்லாவிய மிகவும் பாதுகாப்பான நிலைமையில் உள்ளது. டர்க்கியோ, பல்கேரியா வழியாக சேனைகள் படையெடுத்தால்தான் உடனே பிரிடன் பக்கம் யுத்தத்தில் சேர்ந்துவிடுவதாகத் தெளிவாகக் கூறிவிட்டது.

## பழைய மாமா.

கற்சிலைபோல் நிற்கும் ருஷியாவிடமிருந்து ஜெர்மனி எதையும் நம்பி எதிர்பார்க்க முடியவில்லை. நம்முடைய துடுக்கான பாராட்டு ஸ்டேலின் மாமாவுக்கு நன்றாக வேண்டியதுதான்.

பெர்லினில் நடந்த மொலடவ் சம்பாஷணைகளுக்குப் பிறகு ருஷியா சற்று தூரத்திலேயே இருந்து வந்துள்ளது. தான் எதிர்பார்த்ததில் வெகு சிறிய அளவு தான் ஜெர்மனி பெற்றது என்பதைப்பற்றிச் சந்தேகமில்லை. இல்லாவிட்டால் ஏன் ஜெர்மனி மிகவும் கெஞ்சாத குறையாய் டர்க்கிக்குத்தான் பல்கேரியா வழியாக வருவதில்லை என்று உறுதிமொழிதரவேண்டும்? ஜப்பானும் ருஷியாவும் நெருங்கிய உறவு கொண்டாடும் என்று ஜெர்மனி கண்ட கனவு பலித்ததாகத் தெரியவில்லை. உண்மையில் பிரிடன் பர்மா சாலையைத் திறந்தவுடன் ருஷியாவானது சியாங்கே ஷேக்குக்குச் சாமான்கள் அனுப்பத் தொடங்கியது. ஹிட்லரின் ஜபம் சாயவே சாயாது. "வீடு நிறைய மன்னர்களை" நிரப்பி விடுவேனாக்கும், தேசங்களில் பங்கு தருவேனாக்கும் என்று ஹிட்லர் ஆசை காட்டினாலும், ஹிட்லருடைய மனோபாவனையையறிந்த ஸ்டேலின் மாமா ஹிட்லர் தனக்கு வேண்டியவைகளையெல்லாம் செய்து கொடுப்பதாக உறுதி கூறும் வரையில் அவனுடைய முகத்தை நிமிர்ந்து பார்க்கமாட்டார்.

## ஸ்ருதியும் ஸாஹித்யமும் பலங்குறைந்துகொண்டே......

பெர்லின் யுத்தத் தொழிற்சாலை ஆள்களுக்கு ஹிட்லர் கடைசியாக நிகழ்த்திய பிரசங்கத்தைப் படிப்பதில் யாரும் காலத்தை வீணாக்கமாட்டார்கள். முதலில் உச்சஸ்தாயில் அவன் பாடிய "இங்கிலாந்து பணியும்போது"..............என்பது இப்போது ஸ்ருதி குறைந்து "நாம் யுத்தத்தில் தோற்றால் ..........." என்றாகி விட்டது. "படையெடுப்பு" என்று அவன் கூறுவதெல்லாம் ஜெர்மனியின்மேல் ஆங்கிலேயரின் படையெடுப்புதான். உலகத்தில் எந்த தேசமும் ஜெர்மனியை வீழ்த்தமுடியாது என்று அவன் கூறினானென்பது உண்மைதான். ஆனால் அதை அவன் உரக்கக்கூறவேண்டியிருந்தது. "கடைசி முடிவிற்கான காலத்தையும் மணியையும்" பெர்லின் எவ்வளவுதரம் தீர்மானித்து எவ்வளவுதரம் ஒத்தி வைத்துக்கொண்டே வந்திருக்கிறது. அதை இன்னும் ஹிட்லர் நிச்சயம் பண்ணிக் கொண்டேதான் இருக்கிறான். போதாக்குறைக்கு, அவன் "ஆனால் நான் வெகு ஜாக்கிரதையாக இருக்கிறேன்" என்று கூறுகிறான். அடால்ப் ஹிட்லரா ஜாக்கிறதையாக இருக்கிறான். (இவ்வாறு அவன் கூறியதும் அங்கு குழுமியிருந்தவர்களில் இத்தாலிய பகுதியினர் "ஹா, ஹா" என்று கூச்சலிட்டது உங்கள் காதில் விழவில்லை?)



# ஒரு இந்தியர் இந்தியர்களுடன் பேசுகிறார்.

[1940௵ நவம்பர்௴ 18௳ டில்லியில் அஸெம்பளியில் கனம் M. ஜாபருல்லாகான் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் நடந்த நேர்த்தியான சம்பாஷணையை விரிவாக மன்னிப்பு கேட்காமலே பிரசுரிக்கப்படுகிறது. யுத்த ஆரம்பத்திலிருந்து இந்தியாவில் நிகழ்ந்த முக்கியமான விவரணங்களில், இது சாரத்திலும், உண்மையிலும், விஷயத்திலும் முதன்மையானது.]

ஐயா, இந்தச் சபை அனுமதிக்குமானால் இன்று சர்ச்சை செய்யப்பட்டிருக்கிற விஷயத்தைப்பற்றி, அதாவது, யுத்த சம்பந்தமாக நாம் ஒத்துழைப்பதா, இல்லையா என்ற விஷயத்தைப் பற்றிப் பேசுகிறேன்.

## ஒற்றுமை விஷயங்கள்.

நமக்குள் ஒற்றுமைபட்ட விஷயங்கள் இன்னவையென்று சொல்லுகிறேன். எந்நிலைமையிலும் நான் சம்பந்தப்பட்டவரை அவை ஒற்றுமைப்பட்ட விஷயங்கள் என்று நினைக்கிறேன்.

பின்வரும் விஷயங்கள் அவசியமென்று நாம் எல்லோரும் ஒத்துக்கொள்ளுகிறோம் என்று நினைக்கிறேன்; இந்தச் சபையிலுள்ள கக்ஷிகளைச் சேர்ந்தவர்கள் பேசினதிலிருந்து அவைகளை நான் தொகுத்திருக்கிறேன்.

## சுவதந்திரம்.

சுவதந்திரத்தைப்பற்றி நமக்குள் ஒற்றுமை இருக்கிறது; அதாவது ஒவ்வொரு தேசத்தாரும் தங்கள் காரியங்களைத் தங்கள் இஷ்டப்படி நடத்திக்கொள்ளும் சுவதந்திரம்—பிற தேசத்தார்கள் சுவதந்திரத்திற்கு இடஞ்சலில்லாத வண்ணமாக நமது காரியங்களை நாம் நமது இஷ்டப்படி பார்த்துக்கொள்ளும் சுவதந்திரம்—நமது தேசத்தில் பிறர்வந்து பொருள் அடித்துப்போகாமல் பார்த்துக்கொள்ளும் சுவதந்திரம்; ஒவ்வொரு தேசத்தாரும் கடவுள் கொடுத்திருக்கிற சௌகரியங்களைக்கொண்டு திருப்தியடைந்து அவைகளைக் கூடுமானமட்டும் பெருக்குவதில் கவனம் செலுத்திக்கொண்டு, கடவுள் மற்ற தேசத்தாருக்கு அளித்திருக்கும் நன்மைகளை கவர எத்தனிக்காமலிருக்கவேண்டியது.

## ஒப்பந்தங்களின் புனிதம்.

இரண்டாவதாக: உடன்படிக்கைகள்படி நடப்பது. உடன்படிக்கைகள் என்ன, தேசங்களுக்குள் ஒப்பந்தங்கள் என்ன, இவைகள் பயபக்தியுடன் ஆதரிக்கப்படவேண்டியதென்பதை நாம் எல்லோரும் அங்கீகரிக்கிறோம்.

## ஜனநாயக ஆட்சி.

மூன்றாவதாக: ஜனங்களில் எல்லா பகுதியார்களுடைய அபிப்பிராயங்கள் தாராளமாக வெளியிடப்பட்டு ஒழுங்காக அறிந்துகொள்ளப்பட்டு, அவைகளை அனுசரித்து நடத்தப்படும் அரசியல் முறையே உயர்ந்தமுறையென்று நாம்

ஒத்துக்கொள்ளுகிறோம்; அதாவது, அரசாங்கமென்பது நாட்டாருடைய நன்மைக்கென்றும், நாட்டாரைக்காட்டிலும் நாடு உயர்ந்த வஸ்துவாகப் பாவிக்கப்படக் கூடாதென்பது.

## நீதி.

**நான்காவதாக:** மனித வியவகாரங்களில் நியாயப்படி தீர்மானம்; அதாவது சட்டப்படி ஒவ்வொரு மனிதனுக்கும் சுயேச்சையும் சமத்துவமும் அளிக்கப்பட்டு, குடும்பம், ஜாதி, நிறம், வகுப்பு என்ற காரணங்களால் வித்தியாசமின்றி நடத்துவது.

## எளியாருக்கு உதவி.

**ஐந்தாவதாக:** எளியவர்களைக்கொண்டு லாபமடையாமல் எளியவர்களுக்குச் சக்தியுள்ளவர்கள் உதவிபுரியவேண்டியது. அதாவது, பணக்காரர்களிடமிருந்து ஒரு நியாயமான அளவிற்குப் பணம் வாங்கி, ஏழை மக்களுக்குக் கொடுப்பது.

## உலக சமாதானத்திற்காகச் சேருவது.

**ஆறுவதாக:** எல்லா தேசத்தாரும் ஒரு சங்கத்தில் சேர்ந்து, அவரவர்கள் சுவதந்திரத்தைக் காப்பாற்றிக்கொண்டு, மற்றவர்களுடன் சமத்துவமான அந்தஸ்துடன் ஒத்துழைத்து, போர் என்பதை நிறுத்தி, தேசங்களுக்குள் ஏற்படும் வியவகாரங்களைத் தீர்க்கத் தகுந்த ஏற்பாடுகள் செய்து உலகமே சமாதானமாக இருக்கும்படி செய்து, மனிதர்கள் படும் கஷ்டங்களை நிவாரணம் செய்யவும், அவர்களுக்கு, புத்தி விசாலமாக்கவும், சுகவாழ்வு விருத்தி செய்யவும், இப்போது மனித நாசத்திற்கு உபயோகிக்கப்படும் ரசாயன முறைகளை நல்ல விஷயங்களிற்குப் பிரயோஜனப் படும்படியாக விருத்தி செய்யவும் மனிதர் பாடுபட வேண்டும். அரசியலிலும் சமூக வாழ்விலும் இவைகள்மட்டும்தான் நமக்குள்ள நோக்கங்கள் என்றல்ல; இன்று நடந்த சர்ச்சையில் இவைகள் பிரஸ்தாபிக்கப் பட்டனவாகையால் இன்றைய விஷயத்திற்கு அவை போதுமானவை.

ஐயா, மேற்கண்ட விஷயங்கள் சம்பந்தமாக நமக்குள் அபிப்ராய ஒற்றுமை இருந்தால், இப்போது நடக்கும் யுத்தத்தில் நாம் ஜனநாயக ஆட்சி முறையைக் கையாளும் நாடுகள் பக்கமிருக்கிறோம் என்று ஒத்துக்கொள்ளவேண்டியதுதான்.

**ஸ்ரீமான் S. சத்தியமூர்த்தி:** ஒத்துக்கொள்ளுவானேன்?

## Mr. காந்தியின் அபிப்ராயங்கள்.

**Hon'ble Sir முகம்மது ஜாபருல்லாகான்:** சிலர் அதை ஒத்துக்கொள்ளுவதில் தயங்குவதால்தான். ஏனென்றால், அச்சு தேசத்தார் ஜயித்து நேச தேசத்தார் தோல்வியடைந்தால் நமது உயர்தர நோக்கங்களெல்லாம் அடியோடு அழிந்துபோகும்.

இந்நாட்டில் பல கட்சிகளின் தலைவர்களெல்லாம் மேற்கண்டபடி அழுத்தமாக அனுதாபம் காட்டியிருக்கிறார்கள்.



மனிதர் க்ஷேமத்தை உத்தேசித்தே பிரிடனிடமும் ப்ரான்ஸிடமும் தனக்கு அனுதாபமிருப்பதாக Mr. காந்தி சொல்லியிருக்கிறார். ஜெர்மானியர் உள்பட, பகுத்தறிவுள்ள எல்லா மனிதருடைய வேண்டுகோளிற்கிணங்கி, நியாயத்தை ஹிட்லர் கேட்கவேணுமென்று ஆசைப்படுகிறேன். மிருகபலமென்ற ஒரு தெய்வமன்றி வேறு தெய்வம் ஹிட்லர் அறியார்; Mr. சேம்பர்லெயின் சொன்னபடி மிருக பலமொன்றுதான் அவருக்கு உணர்ச்சி உண்டாக்கும்............இந்தப் போருக்கு ஹிட்லரே காரணபூதமென்ற முடிவிற்கு நான் வந்திருக்கிறேன்.

**ஸ்ரீமான் S. சத்தியமூர்த்தி:** இல்லை, இல்லை.

**Hon'ble Sir முகம்மது ஜாபருல்லாகான்:** அவை என் வார்த்தையல்ல, அவை Mr. காந்தியின் வார்த்தை. Mr. காந்தியின் பேச்சு காங்கிரஸில் இவ்வளவுதூரம் எடுபடுவதில்லையென்பது எனக்குத்தெரியாது.

"அவன் எண்ணம் நிறைவேறினால், அவன் கொண்டாடும் பாத்தியம் நியாயமென்றாகாது. மனிதர் நடவடிக்கையில் கானகத்து முறையே நடைபெருகிறதென்றுதான் ஏற்படும். மனிதராகிய நாம் வெளித்தோற்றத்தில் மட்டும் மாறியிருக்கிறோமென்றும், மிருக சுபாவத்திலிருந்து விலகவில்லையென்றும் இன்னுமொரு அத்தாட்சி யாகும்."...........:"என் அனுதாபம் முழுமையும் நேசதேசத்தார் பக்கமே இருக்கிறது. நாம் என்ன நினைத்தாலென்ன, இந்த யுத்தமானது மேனாட்டார் கற்பித்திருக்கிற ஜனநாயகமுறைக்கும், ஹிட்லர் சாதிக்கும் ஏகாதிபத்தியத்திற்கும் யுத்தம். ஹிட்லர் எப்படிப்பட்ட மனுஷனைக் கடைசியில் காணப்பட்டாலும், ஹிட்லர் தத்துவம் இன்னதென்று நாம் கண்டுகொண்டுவிட்டோம். அதாவது, கேவலம் நிர்தாக்ஷண்யமான பலப் பிரயோகத்தை ஒரு சாஸ்திரமாகப்பண்ணி, ரசாயன கணக்குடன் அணுமுந்திரிகூட பிசகாமல் உபயோகப்படுத்துவது. நடப்பில் அதை எதிர்ப்பது அசாத்தியமாகப் போய்விடுகிறது......... ." நேசதேசத்தார் தோல்வியடைந்தால், இந்தியா கந்தரகோளப்பட்டு சீர்குலைந்து திண்டாடி, தலைதூக்க வெகுநாள் செல்லும். அதற்குள் இந்தியா சின்ன பின்னமாகி, அயல் நாட்டார் படையெடுப்பிற்கு உள்ளாகும்.

நான் முழுமையும் ஒத்துக்கொள்ளும் இவ்வளவு வார்த்தைகளும் Mr. காந்தியுடையவை.

## "ஹிட்லரின் கொள்கை தோற்கடிக்கப்படவேண்டும்."

"மிருகபலம் தலைதூக்க நிற்கிறது. ஹிட்லரும், ஹிட்லர் தத்துவமும் அடக்கி ஒடுக்கப்படவேண்டும்.......ஹிட்லர் தோல்வியடைய வேணுமென்பது எல்லார் நோக்கமாகயிருக்கவேணும்"......"நேசதேசத்தார் ஜயமடைய வேணுமென்று நாமெல்லோரும் பிரார்த்தித்துக்கொள்ளவேணும்." இவை Mr. ராஜகோபாலாச்சாரியார் அபிப்ராயங்கள்.

## "அஹிம்சைக்கு விரோதமாக ஹிட்லர் சண்டை."

"ஹிட்லர் புரியும் போர் சிறியவர்களும் செயலற்றவர்களுமான தேசத்தாருடன் புரியும்போர்; ஜாதித்திமிர்கொண்டவர்கள் மனிதவர்க்கத்தின்பேரில் புரியும்

போர்; நாகரீகமுள்ள தேசத்தார் பேரிலும் தேசங்களுக்குள் இருக்கும் அந்நியோன்னியத்தின் பேரிலும் புரியும் போர்; நான் பக்தியுடன் வழிபடும் அஹிம்சையின்பேரில் புரியும் போர்; தர்மத்தை தாக்குகிற நாஸ்திகப் போர்.'' "மனிதரின் இயற்கை சுபாவத்தையே கண்டித்து மனிதரை நிர்த்தாக்ஷண்யமாகக் கட்டுப்பாட்டிற்குள்ளாக்கி, மனிதரின் தன்மையையே அழித்து விடுவது என்ற நோக்கமுள்ள ஒரு தத்துவத்தையும், கொள்ளைக்காரர்கள் ஆதிக்கத்தையும், ஒழிக்க நாம் போர் புரிகிறோம்.'' இவ்விதமாக Mr. முன்ஷி சொல்லுகிறார், அதை நான் மனமார ஆதரிக்கிறேன்.

## ஒழுங்கான இந்தியர்கள் நேசதேசத்தார் ஜயமடைய வேண்டுமென்கிறார்கள்.

"ஹிட்லர் கொள்கைகளையும் ஸ்டாலின் கொள்கைகளையும் அமுக்கி நேச தேசத்தார் ஜயிக்க வேண்டுமென்று எண்ணமில்லாத ஒழுங்கான இந்தியர் ஒருவரும் இல்லை.''.. ...எவ்வளவு குற்றங்குறைகளிருந்தபோதிலும் பிரிடன் ஒரு ஒழுங்கான தேசமென்பது என் அபிப்ராயம். இந்த யுத்தத்தில் இங்கிலாந்து வெற்றியடைய வேணுமென்பது மகாத்மா காந்தியுடைய ஆவல், காங்கிரஸினுடைய ஆவல், என்னுடைய ஆவல் (அதாவது, Mr. சத்தியமூர்த்தி) நாமெல்லோருமே இந்த ஆவலுள்ளவர்களாக விருக்கிறோம். இங்கிலாந்து இந்த யுத்தத்தில் ஜயமடையும்; போர் முடிந்தவுடன் தேசா தேசங்களுக்குள் சம்பந்தயானது நியாயத்தையும், சட்டத்தையும் அனுசரித்திருக்கும்.''......ஹிட்லர் தத்துவம் தொலையவேண்டும். பிரிடன் அபஜயமடைந்தால், இந்தியா மற்றதேசங்களின் அடிமையாகிவிடும். ஆகையால் இந்தப் போரில் பிரிடன் வெற்றியடைய வேண்டுமென்ற ஆவல் இந்தியர்களுக்கிருக்கிறது.'' இவை Mr. சத்தியமூர்த்தியின் அபிப்ராயங்கள்.

இச்சமயம் பிரிடனும் இந்தியாவும் ஒரே விரோதியை எதிர்க்கிறார்கள். இந்த அபிப்ராயத்தில் Mr. பிரகாசம் என்னுடன் கலந்து கொள்ளுகிறார்.

இங்கிலாந்து வெற்றியடைய வேணுமென்பது காங்கிரஸின் ஆவல். இங்கிலாந்து வெற்றியடைய வேண்டுமென்று நாங்கள் பிரார்த்திக்கிறோம்,'' என்றார் Mr. சங்கரராவ் தேவ்.

**சர்தார் வல்லபாய் படேல் சொன்னார்:** நாஜித்வம் உலகத்தையே பாழாக்கி விடுமென்ற காரணத்தால், இந்தியத் தலைவர்கள் எல்லோருடைய அனுதாபம் பிரிடனுக்கும் பிரான்ஸுக்கும் சார்பாக விருக்கிறது "ஜெர்மனி ஜயித்தால் இந்தியாவிற்கும் உலகத்திற்குமே அனர்த்தம்,'' என்று டாக்டர் புரொபுல்ல சந்திர கோஸ் சொல்லுகிறார்.

சரி. இந்த விஷயங்களில் நமக்குள் ஒரே அபிப்ராயம். என் பிரசங்கத்தின் துவக்கத்தில் நான் சொல்லிய அரசியல், சமூக, நோக்கங்கள் நிற்க, நாம் சில விஷயங்களில் ஒரே மனதுள்ளவர்களாக விருக்கிறோம். முதலாவதாக, இந்தப் போருக்கு ஹிட்லர் காரணபூதம் என்பது; இரண்டாவதாக, மனித வாழ்க்கையின் மேன்மைக்கு அடிப்படையானவைகளை ஒழிக்கும் தன்மையுள்ள



கொள்கைக்காக சர்வாதிகாரிகள் போர் புரிகிறார்கள்; மூன்றாவதாக, அவ்விதமான அழிவு ஏற்படாமல் காக்கக்கூடியவர்கள் பிரிடிஷார்; நான்காவதாக, பிரிடன் தோல்வியடைந்தால், இந்தியா உள்பட பூரா உலகமுமே அழிந்து விடும். ஐந்தாவதும் கடைசியுமாக, நமது அனுதாபமும் பிரார்த்தனையும் பிரிடன் சார்பாக இருக்கின்றன.

இப்போது, நமக்குள் அபிப்பிராய பேதமுள்ள விஷயங்களைப்பற்றி சொல்லுகிறேன். அதிலும் கூடுமானவரை எதிர்கட்சி மெம்பர்களின் ஆதரவை அடையும் விதமாக அவைகளைப்பற்றி சொல்லப் பார்க்கிறேன்.

நம்மால் முடிந்தமட்டும் பிரிடனுக்கு உதவிபுரியக்கூடாதென்று ஏன் சொல்லப்படுகிறது.

நம்மால் முடிந்தமட்டும் பிரிட்டனுக்கு உதவிபுரியக்கூடாதென்று ஏன் சொல்லப்படுகிறது?

அஹிம்சையென்ற கொள்கையாலா? இக்கொள்கையின் மர்மங்கள் முழுமையும் நான் அறியாதவனானபடியால், இதைப்பற்றி பேச நான் அருகனல்லவென்று நினைக்கிறேன். பிறர் என்னை ஹிம்சிக்காதவரை, நான் அஹிம்சையில் நம்பிக்கை கொண்டவன் தான். என்னை ஒருவன் எதிர்த்தானானால் அவன் எதிர்ப்பை அடக்கும் வரை நான் பலப்பிரயோகம் செய்யவேண்டியவன்தான். எதிரி வசப்படுத்தப் பட்டபின், அவனைக் கிரமப்படி, நியாயப்படி நடத்தவேண்டியது.

உலகத்தின் பெரும்பான்மையும் பாதிக்கப்பட்ட, இந்நேரத்தில், ஏன், உலகம் முழுவதுமே பாதிக்கப்பட்ட இந்நேரத்தில், எதிர்க்காதிருப்பதிலாவது, வலது கன்னத்தில் ஒருவன் அறைந்தால் இடது கன்னத்தையும் காட்டுவதிலாவது எனக்கு நம்பிக்கையில்லை.

ஆனால் இந்தப்போரே அஹிம்சையை எதிர்த்தப்போர் என்று உறுதிசொன்னார். இந்த சர்ச்சையிலும் அதற்கு முன்னும், நமக்கு பிரிடன் சுயராஜ்யம் கொடுத்துவிட்டால், இப்போது ஆக்ஷேபிக்கிறவர்களெல்லோருமே முன்வந்து இந்தப்போரில் பூர்ண உதவியும் புரிவார்களென்று உருதி சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால், யுத்தத்தில் சகாயம் செய்யவில்லையென்றால் அஹிம்சை கொள்கையைக் கைப்பிடிப்பவர்கள் என்ற காரணத்தாலில்லை யென்பது நிச்சயம்.

பயம், கொடுமை, முதலியவைகளைக் கையாடும் இந்தப்பேய்களை எதிர்த்துப் போராடாமல் ஒதுங்கி நிற்பதற்குக் காரணமென்ன!

கிளைவ் முதற்கொண்டு ஜவஹர்லால் நேரு வரை பலரால் பல காரணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

## பிரிடனுக்கு விரோதமான கட்சி.

இவைகளிலிருந்து, பிரிடன்பேரில்சுமத்தப்பட்ட பெரும் பழி யென்னவென்று கவனிப்போம். பிரிடன் சாம்ராஜ்யப்பற்றுள்ள தேசமென்றும் ஒவ்வொரு வழியிலும் நம்மை ஏமாற்றி லாபமடைந்திருந்ததென்றும் சொல்லப்படுகிறது.

**Mr. M. அசாப் ஆலி :** நாஜிகள் எந்த அளவிற்கு செய்யக்கூடுமோ, அதே அளவிற்கு!

**Hon'ble Sir. முகம்மது ஜாபருல்லாகான் :** பிரிடனைப்பற்றி ரொம்பவும் கோளாரான விஷயம் உங்களுக்குத் தெரியும், ஆனால் நாஜித்வத்தில் எது ஒழுங்கானதென்று இன்னமும் உங்களுக்குத் தெரியாதே.

**Mr. M. அசாப் ஆலி :** அதனால் தான் செய்யக் "கூடும்" என்றேன்.

**Hon'ble Sir முகம்மது ஜாபருல்லாகான் :** ஒவ்வொரு துறையிலும் இந்தியாவை பிரிடன் ஏமாற்றி லாபமடைந்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். இந்நாட்டின் பாதுகாப்பை அலட்சியம் செய்தார்கள் என்று சொல்லப்படுகிறது. இந்நாட்டிலுள்ள சமூகச் சண்டைகளுக்கு பிரிடன் காரணபூதமென்கிறார்கள். அடக்கியாளுகிறார்களென்றும், தாராளமாகப் பேசும் பாத்தியத்தைத் தடுக்கிறார்களென்றும் சொல்லப்படுகிறது. மேலும் இந்தியருக்கு சுயேச்சாதிகாரம் கொடுக்கவில்லை. இது சாம்ராஜ்யப்பற்றுள்ளவர்கள் சண்டை. இந்த யுத்தத்தில் கலந்து கொள்வதிலாவது, விலகியிருப்பதிலாவது நமக்கு உரிமையில்லை. அதனால் இது நமது சண்டையல்ல, ஆகையால் நாம் பிரிடனுக்கு உதவிபுரிய வேண்டியதில்லை என்கிறார்கள்.

இந்தியா சம்பந்தமாக இங்கிலாந்து முந்நாளில் செய்த அக்கிரமங்களைப் பற்றியும் தற்கால குற்றங்களைப்பற்றியும் இந்த சர்ச்சையில் பிரஸ்தாபிக்கப்பட்ட விஷயங்களின் சாராம்சத்தை தடஸ்தமாக மேலே சொல்லியிருக்கிறேன் என்று நம்புகிறேன்.

இந்த விஷயத்தை விஸ்தரித்தும் நகாசு செய்தும் வெகுநேரம் கழித்ததின் பயனாக இச்சபையில் நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயமானது கலக்கி குழப்பப்படுத்தப்பட்டிருக்கிறது.

சாட்டப்பட்ட குற்றங்களில் எவ்வளவு உண்மையாயிருந்த போதிலும், நாம் இப்போது கவனிக்கும் விஷயத்திற்கும் அவைகளுக்கும் சம்பந்தமில்லை. அது சுயசித்தமாகவே தெரியும்; மேலும் Mr. காந்தியினுடைய அபிப்ராயமும் அதை ஆதரிக்கிறது......வேறுவிதமாக இருக்கமுடியாது. உலகத்திற்கும் இந்தியாவிற்கும் வந்திருக்கும் ஆபத்து எத்தன்மையதென்று நமக்குத்தெரியும். மேற்கொண்டு இன்னுமொரு விஷயமும் தெரியும். சுயேச்சை, அமைதி முதலியவை அழியாமல் உலகத்தைக் கூடுமானவரை காக்கக்கூடியவர்கள், பிரிடனும், அதன் நேச தேசத்தாரும்தான் என்று நமக்குத்தெரியும்.

கிளைவ் பொய் கையெழுத்துச் செய்தார் என்ற காரணத்தாலாவது, காசி ராஜாவையும் அயோத்தி பீகம்களையும் வாரன் ஹேஸ்டிங்ஸ் கொள்ளையிட்டார் என்ற காரணத்தாலாவது, இந்தியாவில் அநீத லாபமடைந்தார்களென்ற காரணத்தாலாவது, இந்தியருக்கு விரோதமாக பாரபக்ஷம் பாராட்டப்பட்டிருக்கிறதென்ற காரணத்தாலாவது, பிரிடனுக்கு நம்மால் முடிந்தவரை சகாயம் செய்ய, மறுக்கலாமா?



## பிரிடனின் பூர்வகதை.

நாம் உதவி புரியாததால பிரிடன் தோல்வியடைவதாக வைத்துக்கொள்ளுவோம். அதனால் கிளைவ் செய்த குற்றமாவது, வாரன் ஹேஸ்டிங்ஸின் அக்ரமச் செயல்களாவது பழைய அநீத லாபமாவது பக்ஷபாதமாவது மாறிவிடுமா?

பிரிடனுக்குப் பாடம் படித்துக் கொடுக்கலாமென்று வாதிக்கப்படலாம்.

ஆனால் பாடத்தின் பிரயோஜனத்தையடைய பிரிடனே இல்லாமல் அழிந்து போனாலும், பாடத்தின் பிரயோஜனமாக பிரிடனின் மனோபாவம் மாறி அந்த மாறுதலின் பயனையடைய இந்தியாவுமில்லாமற்போனால், பாடம் படித்துக் கொடுத்ததின் பலனென்னவாகும்?

சென்ற இரண்டு நூற்றாண்டுகளில் பல சம்பவங்கள் நடந்திருக்கின்றன. அவைகள் சரியென்று யாரும் வாதிக்கமாட்டார்கள். இவ்வித சம்பவங்களுக்கு ஒருதிரப்பார்தான் காரணமென்று சொல்லமுடியாது. ஆகையால் பொது விரோதி ஒருவன் தலைப்பட்டிருக்கும் இத்தருவாயில், பழைய கதைகளைக் கிண்டியெடுக்கக்கூடாதென்று மெம்பர்களை நான் மன்றாடி கேட்டுக்கொள்ளுகிறேன். நெருங்கிவரும் ஆபத்தைத்தடுக்க அது வழியில்லை.

## சாம்ராஜ்யச்சண்டை.

ஒரு வேளை இது சாம்ராஜ்ய சம்பந்தமான சண்டையென்றும் அதனால் நாம் உதவி புரியக்கூடாதென்றும் வாதிக்கப்படுகிறதா? "சாம்ராஜ்யப்போர்" என்பது அர்த்தமில்லாமல் உபயோகிக்கப்பட்ட ஒரு பதம்; அதன் அர்த்தம் என்னவென்று எனக்குச் சரியாகத் தெரியுமென்று நான் நடிக்கவில்லை. ஆனால் அதை இங்கு மெம்பர்கள் துர் அர்த்தத்துடன் உபயோகித்தார்களென்று நான் சொல்லவில்லை. Mr. அப்துல் கய்யம் சொன்னபடி செயலில்லா தேசங்களிலிருந்து நாடுகள் கொள்ளையடித்து ஜனங்களின் சுயேச்சையையும் அடக்கி நாட்டையும் யுத்தமென்று வைத்துக்கொள்ளுவோம். இப்பதத்திற்கு இதுவே பொருளானால், காங்கிரஸ் தலைவர்கள் பிரசங்கங்களிலிருந்து நான் படித்த அபிப்ராயங்களே அதை ஆட்சேபித்ததாகும்.

இவ்விதமான போர் பிரிடன் புரிகிறதென்று மனதாரச்சொல்லப்படுகிறதா?

எந்தத் தேசத்தின் சுவதந்திரத்தையும் நாட்டையும் பிரிடன் பரிக்க எண்ணுகிறது? போலண்டா, டென்மார்க்கா, நார்வேயா, ஹாலந்தா, பெல்ஜியமா, லக்ஸம்போர்கா? அல்லது பிரான்ஸா, ருமேனியாவா, கிரீஸா? ஒரு வேளை ஹங்கேரியோ, அல்லது யூகோஸ்லாவியாவோ, பல்கேரியாவோ? அல்லது ரஷியா, பின்லண்டு, ஸ்வீடனோ? அல்லது ஸ்பெயின், போர்ச்சுகலாக விருக்குமோ? அல்லது எகிப்து, துருக்கி, பாரசீகம், ஆப்கானிஸ்தானமாக விருக்குமோ? அமெரிக்க ஐக்ய மாகாணங்கள், மெக்ஸிகோ, அல்லது மத்திய அமெரிக்க குடியரசு நாடுகளாக இருக்குமென்று சொல்லமாட்டார்கள்.

**Mr. S. சத்தியமூர்த்தி :**—ஒரே வார்த்தை அது-இந்தியா.

**Mr. M. அசாப் ஆலி** : நாஜிகள் எந்த அளவிற்கு செய்யக்கூடுமோ, அதே அளவிற்கு!

**Hon'ble Sir. முகம்மது ஜாபருல்லாகான்** : பிரிடனைப்பற்றி ரொம்பவும் கோளாறான விஷயம் உங்களுக்குத் தெரியும், ஆனால் நாஜித்வத்தில் எது ஒழுங்கானதென்று இன்னமும் உங்களுக்குத் தெரியாதே.

**Mr. M. அசாப் ஆலி** : அதனால் தான் செய்யக் "கூடும்" என்றேன்.

**Hon'ble Sir முகம்மது ஜாபருல்லாகான்** : ஒவ்வொரு துறையிலும் இந்தியாவை பிரிடன் ஏமாற்றி லாபமடைந்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். இந்நாட்டின் பாதுகாப்பை அலட்சியம் செய்தார்கள் என்று சொல்லப்படுகிறது. இந்நாட்டிலுள்ள சமூகச் சண்டைகளுக்கு பிரிடன் காரணபூதமென்கிறார்கள். அடக்கியாளுகிறார்களென்றும், தாராளமாகப் பேசும் பாத்தியத்தைத் தடுக்கிறார்களென்றும் சொல்லப்படுகிறது. மேலும் இந்தியருக்கு சுயேச்சாதிகாரம் கொடுக்கவில்லை. இது சாம்ராஜ்யப்பற்றுள்ளவர்கள் சண்டை. இந்த யுத்தத்தில் கலந்து கொள்வதிலாவது, விலகியிருப்பதிலாவது நமக்கு உரிமையில்லை. அதனால் இது நமது சண்டையல்ல, ஆகையால் நாம் பிரிடனுக்கு உதவிபுரிய வேண்டியதில்லை என்கிறார்கள்.

இந்தியா சம்பந்தமாக இங்கிலாந்து முந்நாளில் செய்த அக்கிரமங்களைப் பற்றியும் தற்கால குற்றங்களைப்பற்றியும் இந்த சர்ச்சையில் பிரஸ்தாபிக்கப்பட்ட விஷயங்களின் சாராம்சத்தை தடஸ்தமாக மேலே சொல்லியிருக்கிறேன் என்று நம்புகிறேன்.

இந்த விஷயத்தை விஸ்தரித்தும் நகாசு செய்தும் வெகுநேரம் கழித்ததின் பயனாக இச்சபையில் நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயமானது கலக்கி குழப்பப்படுத்தப்பட்டிருக்கிறது.

சாட்டப்பட்ட குற்றங்களில் எவ்வளவு உண்மையாயிருந்த போதிலும், நாம் இப்போது கவனிக்கும் விஷயத்திற்கும் அவைகளுக்கும் சம்பந்தமில்லை. அது சுயசித்தமாகவே தெரியும்; மேலும் Mr. காந்தியினுடைய அபிப்ராயமும் அதை ஆதரிக்கிறது......வேறுவிதமாக இருக்கமுடியாது. உலகத்திற்கும் இந்தியாவிற்கும் வந்திருக்கும் ஆபத்து எத்தன்மையதென்று நமக்குத்தெரியும். மேற்கொண்டு இன்னுமொரு விஷயமும் தெரியும். சுயேச்சை, அமைதி முதலியவை அழியாமல் உலகத்தைக் கூடுமானவரை காக்கக்கூடியவர்கள், பிரிடனும், அதன் நேச தேசத்தாரும்தான் என்று நமக்குத்தெரியும்.

கிளைவ் பொய் கையெழுத்துச் செய்தார் என்ற காரணத்தாலாவது, காசி ராஜாவையும் அயோத்தி பீகம்களையும் வாரன் ஹேஸ்டிங்ஸ் கொள்ளையிட்டார் என்ற காரணத்தாலாவது, இந்தியாவில் அநீத லாபமடைந்தார்களென்ற காரணத்தாலாவது, இந்தியருக்கு விரோதமாக பாரபக்ஷம் பாராட்டப்பட்டிருக்கிறதென்ற காரணத்தாலாவது, பிரிடனுக்கு நம்மால் முடிந்தவரை சகாயம் செய்ய மறுக்கலாமா?



## பிரிடனின் பூர்வகதை.

நாம் உதவி புரியாததால பிரிடன் தோல்வியடைவதாக வைத்துக்கொள்ளுவோம். அதனால் கிளைவ் செய்த குற்றமாவது, வாரன் ஹேஸ்டிங்ஸின் அக்ரமச் செயல்களாவது பழைய அநீத லாபமாவது பக்ஷபாதமாவது மாறிவிடுமா?

பிரிடனுக்குப் பாடம் படித்துக் கொடுக்கலாமென்று வாதிக்கப்படலாம்.

ஆனால் பாடத்தின் பிரயோஜனத்தையடைய பிரிடனே இல்லாமல் அழிந்து போனாலும், பாடத்தின் பிரயோஜனமாக பிரிடனின் மனோபாவம் மாறி அந்த மாறுதலின் பயனையடைய இந்தியாவுமில்லாமற்போனால், பாடம் படித்துக் கொடுத்ததின் பலனென்னவாகும்?

சென்ற இரண்டு நூற்றாண்டுகளில் பல சம்பவங்கள் நடந்திருக்கின்றன. அவைகள் சரியென்று யாரும் வாதிக்கமாட்டார்கள். இவ்வித சம்பவங்களுக்கு ஒருதிறப்பார்தான் காரணமென்று சொல்லமுடியாது. ஆகையால் பொது விரோதி ஒருவன் தலைப்பட்டிருக்கும் இத்தருவாயில், பழைய கதைகளைக் கிண்டியெடுக்கக்கூடாதென்று மெம்பர்களை நான் மன்றாடி கேட்டுக்கொள்ளுகிறேன். நெருங்கிவரும் ஆபத்தைத்தடுக்க அது வழியில்லை.

## சாம்ராஜ்யச்சண்டை.

ஒரு வேளை இது சாம்ராஜ்ய சம்பந்தமான சண்டையென்றும் அதனால் நாம் உதவி புரியக்கூடாதென்றும் வாதிக்கப்படுகிறதா? "சாம்ராஜ்யப்போர்" என்பது அர்த்தமில்லாமல் உபயோகிக்கப்பட்ட ஒரு பதம்; அதன் அர்த்தம் என்னவென்று எனக்குச் சரியாகத் தெரியுமென்று நான் நடிக்கவில்லை. ஆனால் அதை இங்கு மெம்பர்கள் துர் அர்த்தத்துடன் உபயோகித்தார்களென்று நான் சொல்லவில்லை. Mr. அப்துல் கய்யம் சொன்னபடி செயலில்லா தேசங்களிலிருந்து நாடுகள் கொள்ளையடித்து ஜனங்களின் சுயேச்சையையும் அடக்கி நாடடையும் யுத்தமென்று வைத்துக்கொள்ளுவோம். இப்பதத்திற்கு இதுவே பொருளானால், காங்கிரஸ் தலைவர்கள் பிரசங்கங்களிலிருந்து நான் படித்த அபிப்ராயங்களே அதை ஆட்சேபித்ததாகும்.

இவ்விதமான போர் பிரிடன் புரிகிறதென்று மனதாரச்சொல்லப்படுகிறதா?

எந்தத் தேசத்தின் சுவதந்திரத்தையும் நாட்டையும் பிரிடன் பறிக்க எண்ணுகிறது? போலண்டா, டென்மார்க்கா, நார்வேயா, ஹாலந்தா, பெல்ஜியமா, லக்ஸம்போர்கா? அல்லது பிரான்ஸா, ருமேனியாவா, கிரீஸா? ஒரு வேளை ஹங்கேரியோ, அல்லது யூகோஸ்லாவியாவோ, பல்கேரியாவோ? அல்லது ரஷியா, பின்லண்டு, ஸ்வீடனோ? அல்லது ஸ்பெயின், போர்ச்சுகலாக விருக்குமோ? அல்லது எகிப்து, துருக்கி, பாரசீகம், ஆப்கானிஸ்தானமாக விருக்குமோ? அமெரிக்க ஐக்ய மாகாணங்கள், மெக்ஸிகோ, அல்லது மத்திய அமெரிக்க குடியரசு நாடுகளாக இருக்குமென்று சொல்லமாட்டார்கள்.

**Mr. S. சத்தியமூர்த்தி** :—ஒரே வார்த்தை அது-இந்தியா.

Hon'ble Sir முகம்மது ஜாபருல்லாகான்: இந்தியா பிரிடனுக்கு சுவதந்திரத்தை இழந்துவிட்டதென்று வாதிக்கப்பட்டு வருவதில் இந்தியாவின் சுவதந்திரத்தையும் நாட்டையும் கொள்ளையடிக்க இந்தப் போர் புரியப்படுகிறதென்று சொல்லப்படுகிறது. யுத்தத்திற்கு வெகு வருஷங்களுக்கு முன் முதலே காபந்திற்குறிய அளவிற்கும் கீழாக குறைந்தும் பிரிடன் தன் யுத்த முஸ்தீபுகளைக் குறைக்கவில்லையா? இப்போதிருக்கும் பிரதம மந்திரி சென்ற ஐந்து வருஷகாலமாக, நாள் தவறாமல் பார்லிமெண்டிலும் வெளியிலும், தேசத்தைக் காப்பாற்றக்கூடிய சாதனங்களை, முக்கியமாக ஆகாயத்தில், தேடிக்கொள்ள வேணுமென்று போராடி வந்தார்; அவர் சொன்னதெல்லாம் செவிடன் காதில் சங்கு ஊதியதாயிருந்தது.

சாம்ராஜ்ய நோக்கத்துடன் சண்டை புரிவதானால் இப்படியா புரியப்படும்?

## மியூனிக்.

Mr. சேம்பர்லேயினைப் பற்றிச் சொல்லப்பட்டது. மியூனிக் சம்பவங்கள், பிரிடன் சாம்ராஜ்யச் சண்டையில் கவனமுள்ளதாகக் காட்டினவா? அல்லது எவ்வித சண்டையிலாவது கவனமிருந்ததாகக் காட்டினவா?

வசப்படுத்தவேண்டிய நாடில்லாமல், தாக்கலென்ற பேச்சேயில்லாமல், காபந்திற்குக் கொஞ்சமேனும் எத்தனம் செய்யாமல், உண்மையில் செயலற்ற தேசத்தாரை மிருகத்தனமாய் எதிர்த்துக் கொள்ளைக்காரனை அடக்குவதற்காகவே பிரிடன் புகுந்த இந்த யுத்தம் சாம்ராஜ்யத்திற்காகப் புரியப்படும் யுத்தமென்றால், விசித்திரந்தான்!

## இந்தியாவின் யுத்தமல்லவா?

இந்தப் போரில் புகுவதில் நமக்குச் சம்பந்தமில்லையென்றும், நமது உதவியைத் தேடுவானேன், இது நம் யுத்தமில்லையென்றும் சொல்லப்படுகிறது.

நாம் வலியக்க இழுத்தச் சண்டையில்லையென்பது உண்மை. அதுபோலவே இது இங்கிலாந்து வலியக்க இழுத்த சண்டையில்லை. Mr. காந்தி சொல்லியிருக்கிறார் "இந்த யுத்தத்திற்கு ஹிட்லர் காரணபூதம்" இந்த நெருப்பைக் கிளப்பி விட்டவன் ஹிட்லர். நான் முன்னே சொன்ன விஷயங்களில் அக்கரையுள்ள ஒவ்வொருவரும், நாம் மதிக்கும் விஷயமெல்லாம் தீப்பற்றி அழியாவண்ணம் நெருப்பை அணைக்க முயலவேணும்.

## இந்தியாவின் சம்மதம்.

இந்தியாவின் சம்மதமென்பது அதன் அரசியல் அந்தஸ்தைப் பொருத்தது. மற்றொருவருக்குட்பட்டிருக்கும் நிலைமையில் உள்ளடங்கியிருக்கிறது.

இதிலிருந்து அடுத்த விஷயம், நாம் சுயேச்சையுள்ளவர்களல்ல.

ஆகையால், இந்தப் போரில் நாம் உதவி செய்யமாட்டோம்; நமது உதவியாவது சகாயமாவது பிரிடனுக்கு வேண்டுமானால் நமக்கு சுதந்திரம் கொடுக்கட்டும். டொமினியன் அந்தஸ்து என்ன பூர்ண சுவதந்திரம் என்ன,



இவைகளைப் பற்றி நான் பேசப்போவதில்லை; இப்போது இன்னவை அளிக்கத் தயாராகவிருக்கிறோம் என்று கவர்ன்மெண்டார் சொன்னதைப்பற்றியும் பேசப் போவதில்லை. சமூக வியவகாரங்களைப்பற்றிப் பேசாமலிருப்பதும் சகஜமே.

இந்திய சுயேச்சை விஷயமாக நாம் எல்லோரும் ஒரே மனதாயிருக்கிறோம் என்று முன்னமேயே சொல்லியிருக்கிறேன்; இப்போது இந்தியா சம்பந்தமாக பிரிடிஷார் செலுத்தும் அரசியல் அதிகாரம் முழுமையும் அவர்கள் கையிலிருந்து இந்தியர்கள் கைகளுக்கு மாறவேண்டுமென்பதிலும் நாம் எல்லோரும் ஒரே மனதாயிருக்கிறோம்.

இவ்விஷயத்தில் பிரிடன் தவறுதலாக நடந்துவந்திருக்கிறதென்று வைத்துக் கொள்ளுவோம்.

போரில் நாம் உதவிபுரிந்தால் விரைவில் இந்தத் தவறுதல் நீங்க இடமிருக்கிறதா இல்லையா என்பதுதான் கேள்வி.

இந்த வியவகாரத்தில் இதுதான் உயிர்நிலையான பிரச்னை; அதற்குப் பதிலளிக்க இன்னுமொரு பிரச்னை; அதாவது, நாம் உதவிபுரிய மறுத்தால் பிரிடன் வெற்றியடைய முடியாதபடி பிரிடனுக்குப் பெரிய கைக்கட்டாயிருக்குமா? அல்லது நமது நடவடிக்கையால், நேரிலோ, மறைமுகமாகவோ, சரீரப் பிரயாசையிலோ மொத்தமாக தர்ம உணர்ச்சியிலோ ஏற்படக்கூடிய பயனின் அளவு வெகு அற்பமாகத்தானிருக்குமா? அற்பமாகத்தானிருக்கும் என்ற காரணத்தால் நாமெப்படியிருந்தாலென்னவென்றிருக்கலாமா?

## இரண்டு திருஷ்டாந்தங்கள்.

நாம் உதவி செய்யாதபோனாலென்ன, போரின் முடிவை இது எவ்விதத்திலும் மாற்றாது என்று வைத்துக்கொள்ளுவோம்.

அதன் பயனென்ன? அழும் குழந்தையின் கோபம் போலவும், ஒருவன் தன் முகத்தின் பேரில் கோபம்கொண்டு தன் மூக்கை அறுத்துக்கொண்டது போலவும் இருக்கும்; உலகத்தார் பார்த்து நகைப்பார்கள்.

நாம் ஒத்துழைக்கவில்லை என்ற காரணத்தால் பிரிடன் வெற்றிபெறுவதில் பெருத்த இடையூறு ஏற்படுமென்று வைத்துக்கொள்ளுவோம்.

அப்படி வைத்துக்கொண்டால், எவ்வளவு ஆபாஸமான ஹாஸ்யகரமான நிலைமை நமது முன் நிற்கிறது! "பிரிடன் வெற்றியடையவேணுமென்று மகாத்மா காந்தியும், காங்கிரஸும், நானும், நாம் எல்லோரும் ஆவலுள்ளவர்களாயிருக்கிறோம்; ஆனால் பிரிடன் தோல்வியடையக்கூடிய விதமானபடி நடந்துகொள்ளுவோமென்று ஒரு மெம்பர் சொல்லுகிறார். பிரிடனுக்கு இடையூறு செய்ய எங்களுக்கு நோக்கமில்லை, உண்மையில் பிரிடன் வெற்றியடைய வேணுமென்றுதான் எங்களுக்கு ஆசை, ஆயினும் பிரிடனை பெருஞ் சங்கடத்தில் மாட்டிவிடுவோம் என்கிறார்".

Mr. ராஜகோபாலாச்சாரியாரும் Mr. சங்கர் ராவ் தேவும் நாம் பிரிடன் ஜயிக்கவேண்டுமென்று பிரார்த்திக்க வேண்டுமென்கிறார்கள். பிரார்த்தனை பக்தி சிரத்தையுடன் மனப் பூர்வமாகச் செய்யவேண்டிய காரியம். "பிரிடன் ஜயிக்க வேண்டுமென்று நாம் பிரார்த்தனை செய்யவேணும்" என்றால், தாழ்மையுடனும், மனப் பூர்வமாகவும் பிரிடனுக்கு உதவிபுரியுமாறு கடவுளை வேண்டிக்கொள்ள வேணும். இச்சபை மெம்பர்களோ, பிரிடனுக்கு உதவி செய்யக் கடவுளை வேண்டிக்கொண்டு, இந்தியர்களை உதவி செய்யாதீர்களென்று வேண்டிக் கொள்ளுகிறார்கள். மனிதன் ஆத்மார்த்தமாகச் செய்யவேண்டிய இந்த உன்னதமான செய்கையை எவ்வளவு கேலிக்கூத்தாக இவர்கள் செய்துவிடுகிறார்கள்? நாம் ஒரு காரியத்தைக் குறித்துப் பிரார்த்தித்தால், அதற்கு அனுசரணையாக நாம் செய்யவேண்டியதையெல்லாம் செய்யக் கடமைப்பட்டவர்களல்லவா? இவ்விதம் நாடு பாடுபடாத போனால், நமது பிரார்த்தனையே கடவுளைப் புரளி செய்வது போலாகாதா?

ஆனால் சொல்லக்கூடும், நாம் இச்சமயம் உதவி செய்யாமலிருந்தால், சீக்கிரத்தில் நமக்கு சுவதந்திரம் கிடைக்கும் என்று சொல்லக்கூடும்.

இது எப்படியிருக்கிறதென்றால் பிரிடன் கஷ்டங்களை அதிகப்படுத்தி நாம் லாபமடைவோமென்பது போலிருக்கிறது. அது இருக்கட்டும்.

நான் அழுத்தமாகச் சொல்லும் விஷயம் இதுதான்: பிரிடன் நமக்கிணங்கி வரும்வரை நாம் இப்படியே நடந்துகொள்ளுவதா? இல்லையென்றால் பிரயோஜனமற்ற வழியில் நாம் செல்லுவானேன்? ஆம், என்றால், எந்த வெற்றியின் பயனாக சுயேச்சையும் அமைதியும் நாம் தேடுகிறோமோ, அந்த வெற்றி கிடைப்பதே அரிதாகாமலிருக்க நாம் எப்படி காபந்து செய்யப் போகிறோம்?

## காங்கிரஸின் மனோபாவம்.

எதிர்கட்சி மெம்பர்கள் வியவகார விவரங்களில் ஆட்சேபிக்கலாம், ஆனால் நான் கட்சியை தாடஸ்திகமாகச் சொன்னேன் என்று ஒத்துக்கொள்ளுவார்கள் அத்துடன் அவர்கள் மனோபாவத்தை வைத்துக் கொஞ்சம் ஆறுதலடையலாம். சென்ற வெயில் காலத்தில் அவர்கள் ரொம்பக் கலங்கி யிருந்தார்கள். பிரிடன் சாய்ந்துவிடுமோவென்று பயந்திருந்தார்களென்று நம்புகிறேன். பிரிடன் படுத்துப்போனால், இந்தியா அச்சு தேசத்தார்களில் ஒன்றின் அடிமையாய்ப் போய்விடுமென்று அவர்களுக்கு நன்றாய்த்தெரியும்—ஸ்பஷ்டமாக அவர்களே அப்படி சொல்லியிருக்கிறார்கள். இப்படி நேர்ந்துவிடக் கூடாதென்றே என்னைப் போலவே அவர்களும் நினைக்கிறார்கள். ஆகையால்தான், பிரிடன் ஜயிக்கவேண்டுமென்றும், அவர்களுக்குள்ள பயத்தைப்பற்றியும் சொல்லி பிரார்த்தனைகளும் செய்தார்கள்.

இப்போது உதவி செய்ய முடியாதென்று பறை சாத்துகிறார்களேயென்றால், அதற்கு இவைதான் காரணமாகவிருக்கும். ஒன்று, பிரிடன் சமாளித்துக் கொண்டிருக்கிறது, கடைசியில் ஜயித்துவிடும் என்ற நம்பிக்கை. இரண்டாவதாக, இந்தியர்கள் உதவி செய்யாததால் காரியம் கெட்டுப்போய்விடாது;



இந்தியாவின் காபந்தை பிரிடன் வேண்டிய அளவிற்கு பாதுகாத்துக்கொள்ளுவார்கள் என்ற நம்பிக்கை.

சென்ற வெயில் காலத்தில் காங்கிரஸ் தலைவர்கள் பேசின பேச்சையும் இப்பொழுது அவர்கள் நடந்துகொள்ளும் விதத்தையும் சமரசப்படுத்த வேறு வழியில்லை.

இது சரியானால், இந்தியா உதவி செய்யக்கூடாதென்று அவர்கள் போடும் கூச்சலே பிரிடனின் ஜய சூசகத்திற்கு அளவு; அவர்கள் ஆட்சேபணை ஜாஸ்தியாக ஆக, பிரிடனின் வெற்றி துரிதப்படும்.

இப்போது உண்மை நடப்பை கவனிப்போம். வந்திருக்கும் ஆபத்து எவ்வளவு மகத்தானது என்று பார்ப்போம்.

ஐரோப்பாவும் ஆபிரிக்காவில் பெரும்பான்மையும் இந்த யுத்த ஜுவாலையில் பாதிக்கப்படுகிறது. பெர்லின் அரசியல் இலாகாவில் என்ன ஏற்பாடுகள் நடக்கிறதென்று நமக்குத் தெரியாது.

இந்தத் தேசத்திற்கு அபாயமில்லையென்று நினையாதேயுங்கள்.

கீழ் பக்கம், மேல் பக்கம், வட் பக்கமிருந்து நமக்கு ஆபத்திருக்கிறது.

எகிப்து, துருக்கி, இராக், இரான், ஆப்கானிஸ்தானம், டச்சு கீழ் இந்தியத் தீவுகள், இவைகள் பேரில் எந்த நிமிஷமும் இடி முழக்கம் கிளம்பலாம், அடுத்தபடியாக இந்தியாவின் பேரிலும் கிளம்பும்.

சில மெம்பர்கள் சொன்னார்கள்: "அதனாலென்ன, இன்று ஆங்கிலத்தில் பேசுகிறோம், நாளை ஜெர்மனோ இதாலியனோ, ரஷியனோ, ஜப்பான் பாஷையோ, தேழ்வைக்குத் தக்கபடி கற்றுக்கொள்ளுவோமே" என்கிறார்கள். இங்கேயும் சரி, வேறு எங்கேயும் நம்மை பேசவே விடமாட்டார்கள் என்பது ஒரு புறமிருக்க, அதற்குள் நடக்கும் விபத்து, துக்கம் துயரம், இவைகளைத் தடுக்க நாம் என்ன செய்வது? "விரோதிகள் ஒரு நாட்டை படையெடுத்தால் அந்நாட்டை த்வம்ஸம் பண்ணி அந்நாட்டிலுள்ள கௌரவஸ்தர்களை மானபங்கம் செய்வார்கள்; எப்போதுமே அப்படிசெய்வது வழக்கம்" என்பதை மறவாதீர்கள்.

ஒரு அரசாங்கத்திலிருந்து மற்றொரு அரசாங்கத்திற்கு அமைதியாய் மாறுதல் ஏற்படும் என்று எண்ணாதீர்கள்.

நம்மைப்பற்றி ஹிட்லர் அபிப்பிராயம் இன்னதென்று ஞாபக மூட்டிக் கொள்ளுவோம். இந்திய சுவதந்திரத்தை ஆதரிப்பவர் கோமாளிகளென்றும், கரு நிற மனிதர்களுக்கு வித்தையின் பயனான உத்தியோகங்கள் கொடுப்பது கடவுளுக்கே பொருக்காது என்றும் விஸ்தரித்திருக்கிறார்.

"மனித வர்க்கத்தைப்பற்றி ஜாதியையே ஆதாரமாகவைத்து சர்ச்சை செய்யும் எனக்கு, நெருக்கப்பட்டு தேசத்தார் கீழ் மக்கள் என்றே நான் கருதுகிறேன்" என்று சொல்லியிருக்கிறார். அதிகாரம் செலுத்தும் தேசத்தார்களுக்குள் எப்படியிருந்தபோதிலும், கீழ்ப்படிந்த அந்நிய நாட்டாரென்று ஒரு வர்க்கம் எப்போதுமிருக்கும்.

இந்தியாவின் விதி பிரிடனுடன் பிணைக்கப்பட்டது. நல்லதற்கோ, கெடுதலுக்கோ, இந்தியாவின் விதி பிரிடனுடன் பிணைக்கப்பட்டிருக்கிறது. நாமென்ன சொன்னபோதிலும் விரோதி தேசத்தார் அப்படியே நினைக்கிறார்கள். ஆகையால் தெய்வ சம்பந்தமாக இந்தியாவின் க்ஷேமமானது பிரிடன் என்ன, எகிப்தென்ன, துருக்கியென்ன, இராக்கென்ன, இரான் என்ன, ஆப்கனிஸ்தானமென்ன, டச் கீழ் இந்தியத் தீவுகளென்ன, இவைகளுடைய க்ஷேமத்துடன் பின்னியிருக்கிறது. இதற்குப் பிரிடிஷ் கப்பற்படை, பிரிடிஷ் படை, பிரிடிஷ் தரைப்படை, இந்தியா உள்படவும் மேலே சொன்ன இதர தேசங்கள் உள்படவும், பிரிடிஷ் சாம்ராஜ்ய எல்லா தேசங்களின் போர்ப்படைகளே இதற்கு ஆதாரம்.

நமது காபந்தை நாம் நிலைநிறுத்த வேணுமானால், இப்படைகளை பலப்படுத்த நம்மாலானதையெல்லாம் நாம் செய்யவேணும். டாரன்டோ துறைமுகத்திலும், ஓட்ரான்டோ ஜல சந்தியிலும் முழுக்கப்பட்ட அல்லது சேதப்படுத்தப்பட்ட ஒவ்வொரு கப்பலும் இதாலி என்ன, ஜெர்மனி என்ன, இவைகள் மண்டையில் போடப்பட்ட ஒரு பலமான அடியாகும், மேலும் துருக்கி, எகிப்த், இரான், இராக், ஆப்கனிஸ்தானம், இந்தியா இவைகளைச் சுற்றின வேலியை எழுப்பினதாகும்.

**Mr. மோகன்லால் சாக்சேனா**: எகிப்த் உதவி புரிகிறதா?

**Hon'ble Sir முகம்மது ஜாபருல்லாகான்**: இந்த மெம்பருக்கு ஞானதாகம் ஜாஸ்தியாக இருக்கிறது; எகிப்து உதவி செய்கிறது என்று சொல்லுகிறேன். பெயரளவில் எகிப்து போரில் சம்பந்தப்படவில்லை. ஆயினும் உதவிபுரிந்து கொண்டுவருகிறது.

## பிரிடன் தோல்வியடைந்தால்

பிரிடன் ஒருவாறு தோல்வியடைந்தால் அந்த வேலி அழிந்துவிடும். சுயேச்சை, ஜனநாயக ஆட்சி, நியாயம் மனிதருக்குள்ளும் தேசங்களுக்குள்ளும், ஒழுங்குமுறை என்ற சொப்பனமேயிராது. தூங்கி எழுந்தவனுடைய சொப்பனங்கள்போல் அவை பறந்தோடிப்போகும். வித்தையின் வளர்ச்சி, நாகரீகம் என்ற விளக்கே அணைந்துவிடும். மனிதரின் குற்றம் குறைகள் எல்லாம் அடியோடரும்வரை புத்துயிர் வராது.

தன்னலமும் அறியாமல் மனித விஸ்வாசம் இல்லை என்றும் பெருந்தன்மையில்லையென்றும் இப்பெரும் ஆபத்தை விலக்க இந்தியா ஒன்றும் செய்யவில்லை என்ற அவச்சொல் வரலாமா?

கூடாது! ஏற்கனவே இந்தியர்கள் வெகு தாராளமாக உதவி செய்கிறார்கள்; இந்த உதவியும் நாளுக்குநாள் அதிகரிக்கும். இந்திய இளைஞர்களும் உணர்ச்சி வலுத்து வெகுமேன்மையாகத் தங்கள் கடமையைச் செய்ய முன்வந்திருக்கிறார்கள். ஆள் கொடுத்து, பணம் கொடுத்து, சாமான் கொடுத்து, யுத்ததளவாடம் கொடுத்து இந்தியா உதவி புரிகிறது. மேற்கொண்டும் கொடுத்து இன்னமும் உதவி செய்யும்.



ஒரு கேள்வி கேட்கிறேன், இப்படி முன் வந்திருக்கிறவர்கள் காங்கிரஸ்காரர்களா? ஆம் என்றால், காங்கிரஸே உதவிசெய்கிறது.

இல்லை என்றால்; இந்தியா முழுவதற்கும் காங்கிரஸ் பிரதிநிதி என்று சொல்லப்படும் கட்சி எவ்வளவு ஓட்டை என்பது இந்தியா ஒத்துழைப்பால் நிரூபிக்கப்படுகிறது.

பிரிடன் தோல்வியடைந்தால் இந்தியாவானது இதுவரை உலகத்தில் காணப்படாத அக்கிரமம் பெருத்த அடாத கொடுங்கோலாட்சிக்கு அடிமையாக்கி, வருக்கப்படுமென்பது சுயசித்தமாக விளங்கக்கூடியது. அதை வற்புறுத்திச் சொல்லவேண்டிய தேழ்வையில்லை. இது நான் சொல்லுவது மட்டுமல்ல, காங்கிரஸ் தலைவர்களும் அப்படியே சொல்லுகிறார்கள்.

Mr. சர்ச்சில் சொன்னதைத் தங்களுக்கு ஞாபகமூட்டுகிறேன் "வெற்றி இல்லாமற்போனால் நாம் தப்பமுடியாது; இன்னும் ஞாபகமிருக்கட்டும். மனிதர் நோக்கங்களையடைய வேண்டுமென்று ஆயிரக்கணக்கான வருஷங்களாக மனிதருக்கிருந்துவந்த அவாவிற்கும் முடிவு வந்துவிடும்."

பிரதம மந்திரி சொன்னதையும் ஞாபகமூட்டுகிறேன்: "எல்லாம் பிரிடிஷார் என்ன, அவர்களுடன் பிணைக்கப்பட்டுள்ள தேசத்தாரென்ன, இவர்களுடைய பலத்தையும், அவர்கள் ஒவ்வொரு நாளும் பாடுபட்டு, எல்லா தியாகமும் செய்து, தைரியமாய்ப் போராடி, எல்லாக் கஷ்டநிஷ்டூரங்களையும் சகித்து வேண்டியதைச் செய்வதைப்பொருத்திருக்கிறது. இந்தச் சண்டை அரசர்களுக்குள்ளாவது, நாட்டுத் தலைவர்களுக்குள்ளாவது சண்டையில்லை. ராஜவம்சச் சண்டையுமல்ல, தேசங்களின் ஆசையால் வந்த சண்டையுமல்ல; பொதுமக்கள் சண்டை, தர்மச் சண்டை." எந்த பக்கத்தில் இந்தியா சேரவேண்டுமென்று நாம் அறிவோம்.

இந்தியாவிற்குச் சுதந்திரமளித்து சுதந்திரமடைந்த இந்தியா பிரிடனுக்கு உதவிபுரியக்கூடாதென்று சொல்லக்கூடிய நிலையில் வைத்து, அதனால் பிரிடனின் தாராளத்துவத்தை உலகத்தார் மெச்சும்படி பிரிடன் இந்தியாவிற்குச் சுதந்திரம் அளித்து மேற்கொண்டும் கீர்த்தியடைவேணுமென்று மிஸ்டர் காந்தி சொல்லுகிறார்.

இப்பெரிய நாடானது மேற்கொண்டும் பெரிதாய் விளங்கவேண்டுமென்பது எனது ஆவல். பிரிடனின் பழைய பிசகுகளை மறந்து, பிரிடனின் அதீத லாபமென்ன, பாரபக்ஷமென்ன, மற்றுமுள்ள குற்றங்குறைகளென்ன இவைகளை எல்லாம் மறந்து, இந்தியாவுக்கு பிரிடன் சுதந்திரம் அளிக்காததையும் க்ஷமித்து மனித வர்க்கத்திற்கே இப்பொழுது வந்திருக்கிற மகத்தான ஆபத்தில் ஒரே மனதாய் நின்று தங்களால் முடிந்தவரை உதவிசெய்து ஒத்துழைக்கவேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

பிரிடிஷ் கௌரவஸ்தர்கள் என்று மிஸ்டர் சத்தியமூர்த்தி சொன்னதை நான் ஒத்துக்கொள்ளுகிறேன்; நமக்கிருக்கும் சுதந்திர தாகமும் சமனமாகும் காலம் கிட்டிவிட்டதென்பது எனது நம்பிக்கை.

சுதந்திரத்தின் சின்னங்களெல்லாம் தயாராகிவிட்டன. அவைகள் அணிந்துகொள்ளப்படத் தயாராகவிருக்கின்றன. மனிதன் சரித்திரத்திலேயே வெகு நெருக்கடியான இத்தறுவாயில் இந்தக் கீர்த்திவாய்ந்த தேசம் அதன் பெருந்தன்மைக்கொத்து நடந்துகொண்டு, அந்தச் சுதந்திரச் சின்னங்களை அணிந்துகொள்ள உரியதாகவேணுமென்று நாம் பிரார்த்திப்போமாக.

---

# விஷி கையாட்களும் லோரேன் மானபங்கமும்.

## ஒரு விரிவுரை.

(பீ. பீ. ஸி. யில் விக்ஹாம் ஸ்டீட் பேசியதிலிருந்து ஒரு பகுதி.)

### ஹிட்லரின் நிபந்தனைகள்.

விஷி ஸர்க்காருக்குள் ஒரு நெருக்கடி இருந்துவருவதாக, சுதந்திரப் பிரெஞ்சுப் படைகளின் தளகர்த்தரான ஜெனரல் டிகாலுக்கு நம்பத்தக்க தகவல் கிடைத்திருக்கிறது. மார்ஷல் பெடேன் என்ன, அவருடன் வேலை பார்ப்பவர்கள் என்ன, இவர்களுக்கு அறிவிக்காமலே ஹிட்லரைச் சந்திக்க லவால் என்னும் பிரெஞ்சு க்விஸ்லிங் (துரோகி) பாரிஸுக்குச் சென்றான்.

விஷிக்குத் திரும்பிவந்ததும் ஹிட்லரின் நிபந்தனைகளை மார்ஷல் பெடேனை கிட்டத்தட்ட ஒத்துக்கொள்ளும்படி லவால் செய்துவிட்டான். ஷரத்துக்கள் இவை: பிரான்ஸ் ஐரோப்பாவில் ஜெர்மனிக்கு தனக்குக் கிழக்கேயுள்ள அல்ஸாஸிலொரேனையும், வடக்கே பிளாண்டர்ஸையும் தவிர அதிக நாடுகளைக்கொடுக்கவேண்டாம்.

ஐரோப்பாவுக்கு வெளியில் பிரான்ஸ் இழக்கவேண்டியது அதன் சோமாலிலாண்டு. அதில்தான் அபிசீனியாவுக்கு ஏடன்குடாவிலிருக்கும் ஜிபூதியிலிருந்து ரயில்பாதை கிளம்புகிறது. ஜிபூதி இதாலிக்குக் கொடுக்கப்படும்.

பிரெஞ்சு யுத்தக்கைதிகளை நாளடைவில் விடுதலைசெய்யத் திட்டமும், பிரெஞ்சு பாங்கிகள் என்ன, கைத்தொழில்களென்ன இவைகளின் அபிவிருத்தியில் ஒரு பங்கு ஜெர்மனிக்கும் கொடுக்கிறதென்ற திட்டத்துக்கும் சிகரமாகப் பிரெஞ்சுக் கடற்படையை ஜெர்மனிக்குக் கொடுக்கவேண்டாம், ஆனால் ஐரோப்பாவிலும் தொலைகளிலுமுள்ள எல்லா பிரெஞ்சுத் துறைமுகங்களிலுமிருந்து ஜெர்மன் கப்பல்களுக்கு சாமான்கள் ஏற்றியிறக்க பாத்தியமுண்டு என்ற யோசனை கூறப்பட்டது.

### ஜெனரல் ஹண்ட்ஸீகர் ஆட்சேபிக்கிறார்.

மார்ஷல் பெடேனுக்கு இவைகளை அங்கீகரிக்கச் சம்மதம்தான். ஆயினும், அவைகளைத் தன் மந்திரி சபையாரிடம் யோசனைக்கு விடவேண்டிய தவசியமென்று உணர்ந்தார். அவருடைய மந்திரிகளில் ஒருவராகிய அல்ஸாஸில் பிறந்து வளர்ந்த ஜெனரல் ஹண்ட்ஸீகர் மேற்கண்ட ஷரத்துகளை ஆட்சேபித்தார். மேல்பார்வைக்கு அவைகள் நிதானமாகத் தோற்றலாம், அதிக நாடுகளை இழக்கவேண்டியதில்லை



போதும் என்றும் தோற்றலாம், ஆனால் ஜெர்மானியரின் அந்தரங்க எண்ணம் ஜெர்மன் கப்பல்கள் பிரெஞ்சுத் துறைமுகங்களை உபயோகித்தால் பிரிடிஷார் அத்துறைமுகங்களைத் தாக்கவேண்டி நேரிடும், அதனால் இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் யுத்தம் மூளவேண்டியதென்பதே—என்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

ஹிட்லருக்குக் கையாட்களான லவாலும், அட்மிரல் டார்லானும் ஜெனரல் ஹண்ட்ஸீகர்மீது சீறி விழுந்தனர். மந்திரி சபையில் குடுமிப்பிடி விவாதம். ஆனால் கடைசியில் அதில் பெரும்பாலோர் ஜெனரல் ஹண்ட்ஸீகரையே ஆதரித்தனர். இதன் முடிவு, அக்டோபர் 30௳ மார்ஷல் பெடேன் மேற்கண்ட நிபந்தனைகளுள் ஜெர்மனியுடன் பொருளாதாரக் கூட்டுறவை மட்டில் ஒத்துக்கொள்ளுவதாகச் சொல்லவேண்டிவந்தது. சொல்லாமலே மற்ற நிபந்தனைகள் மறுதளிக்கப்பட்டன.

உள்ளே நடந்தது என்னவென்று தெரியாத பிரெஞ்சு மகாஜனங்கள் மார்ஷல் பெடேன் புதிதாக ஹிட்லருக்கு இவ்விதம் சரணாகதி செய்தார் என்று நினைத்து அவர்மீது கோபங்கொண்டார்கள். இதன்பின்தான் ஹிட்லர் லொரேனிலிருக்கும் பிரெஞ்சுக்காரரை விரட்டித் தன் வஞ்சந்தீர்த்தான்.

இதனிடையே பிரெஞ்சுதேசங்களின் கொள்ளையில் தன் பங்கு ஜிபூதி துறைமுகம் மட்டில்தான் என்றும், தான் கோரிய நீஸ், கார்ஸிகா, ட்யூனிஸ் அல்லவென்றும் முஸோலினி கேள்விப்பட்டார். தானாகவே சில நாடுகளைச் சுரண்டுகிறதென்று தீர்மானித்து, என்று ஹிட்லரைப் பிளாரன்ஸில் சந்திக்கவேண்டுமோ அதற்கு விடியற்காலையிலேயே கிரீஸைப் பிடிக்கும்படி உத்தரவிட்டார்.

இதனால் ஏற்பட்ட முரண்கள் விசித்திரம். விஷியிலும், பெர்லினிலும் உத்தியோக அறிக்கைகள் இதாலி, பிரெஞ்சு நாடுகளில் ஆஸ்தையை விட்டுவிட்டதென்று கூறின. ரோமிலிருந்து பிறந்த உத்தியோக அறிக்கையோ இதாலி தன் ஆஸ்தை ஒன்றையும் விட்டுக்கொடுக்கவில்லை என்று கூறிற்று.

கிரீஸ் பிடிபட்டிருந்தால் முஸோலினி வெற்றிச்சிரிப்புப் பூத்துக் கொக்கரித்திருப்பார். ஆனால், விபரீதம்! கிரீஸ் அவரை எதிர்த்துநின்றது. விஷியில் முஸோலினியின் தோல்வியைக் கண்டு எக்களித்தனர். புன்னகை தவழா ஹிட்லரின் முகத்தில் எவ்வித சிரிப்பு இருந்திருக்கும் என்பதைக் கற்பனைதான் செய்துபார்க்கலாம். அது வேண்டா வெறுப்புச் சிரிப்பாக இருக்கும்.

### ஜெனரல் டிகாலின் ஒலிபரப்பு.

மேற்கு ஆபிரிக்காவிலிருந்து திரும்பிவந்த ஜெனரல் டிகால் என்னும் சுதந்திர பிரெஞ்சுப் படைகளின் தலைவர் ஒலிபரப்பின்மூலம் தன் மனதில் எழுந்த எண்ணங்களை உடனே பின்வருமாறு வெளியிட்டார்.

“பிரான்சின் நிஜ திருஷ்டிக்குத் திரையிடவேண்டி நமது சத்துருக்களாலும் விஷியிலிருந்துவரும் அவர்கள் பிடி ஆள்களாலும் பரப்பப்படும் பொய்களை யுத்தத்தின் நிகழ்ச்சிகள் அகற்றிக்கொண்டு வருகின்றன. இத்தாலியின் பாஸிஸ்டு ஸைன்யங்களின் பேடித்தனம் எகிப்தின் எல்லையிலும் அபிஸீனியாவிலும் வெட்டவெளிச்சமாகிறது. டாரண்டோவில் நமது நேச பிரிடிஷார் முஸோலினியின் கடற்படையை அழிக்கிறார்கள். நமது நேச கிரேக்க வீரப்படைகளுக்கு இதாலியப் படை

கள் நெடுகிலும் புறங்காட்டி ஓடுகின்றன. இப்பொழுதுதான் பிரெஞ்சுக்காரருக்கு ஆத்திரம் பொங்கும்படி விளங்குகிறது.—இந்த யுத்தத்தைப் பெரும்புகழுடன் நாம் முடிவுகட்டியிருக்கலாமே, அது நம்மிடமிருந்து அபகரிக்கப்பட்டுவிட்டதே—என்பது.

பொங்கியெழும் ஆத்திரத்துடன் பிரெஞ்சுக்காரர் உணருகிறார்கள்—ஆபிரிகா, ஸிரியா, பிரெஞ்சு சாம்ராஜயம் நெடுகிலுமிருக்கும் நமது கடற்படை, நமது துருப்புகள், நமது விமானங்கள் என்னதான் செய்திருக்க முடியாது? ஏனெனில் ராஜித்தேதியன்று நிலைகுலையாமலிருந்த இவ்வளவு படைகளும் துரோகத்தால் ஆயுதப் பரிகரணம் செய்யப்பட்டு, கட்டி தூக்கிக் கொடுக்கப்பட்டு, சிதறும்படி செய்யப்பட்டிருக்கின்றன. நாளுக்குநாள் கொழுந்துவிட்டெரியும் பிரெஞ்சுக்காரரின் ரோஸம் ஜெர்மானியர்களையும், விஷிப் பிடியாட்களையும் பயமுறுத்தி நடுங்கச் செய்கிறது. பிரெஞ்சுக்காரரின் இந்த ரோஸம்தான்—ஜோன் ஆப் ஆர்கின் ரோஸம், தாந்தன், க்ளெமாஞ்சோ இவர்கள் காட்டிய ரோஸம்—நமக்கு ஆசை பிறப்பித்து கையில் புதிதாக ஆயுதம் எடுக்கச்செய்கிறது. புனிதமான இக்கோபத்தைப்போற்றி வளர்ப்போமாக! இதுதான் நாம் நமது சத்துருக்களுக்கும் அவர்களுடைய விஷி கூட்டுக்காரர்களுக்கும் விசாரித்து நீதி வழங்கப்போகும் தேதியை துரிதப்படுத்தும்."

ஜெனரல் டிகால் குறிப்பிட்ட புனித ரோஸமானது பிரான்ஸில் பற்றி எரிகிறது. வேறு பிரதேசங்களில்—முக்கியமாக பால்கன்ஸிலும், சமீப கிழக்கிலும்—கிரேக்க வெற்றிகளைக் குறித்த மனோபாவங்கள் வேறு. அவைகள் ஒன்றொன்றுக்கும் ஒவ்வொரு விதத்தில் ஒரு கர்வமுண்டு. ஆனால் தற்போதிய கிரீஸ் யுத்த வீரத்தில் தன்னிலும் மிஞ்சியது என்று ஒன்றும் எண்ணவில்லை.

இவ்வளவு தேசத்து ஜனங்களும் என்ன எண்ணுகிறார்கள்,—கிரேக்கர்கள் செய்ததை நாமும் செய்யமுடியாதா, சத்துருவுக்குப் பணிவதைவிட அவனை எதிர்ப்பதில் குணமிருக்கிறது—என்று. இதாலியர்களோ கிரேக்கர்களைத் திருணமாக நினைத்து இழிவுசெய்துவந்தனர். இதாலிக்குத் தன் தோல்வியால் நேர்ந்திருக்கும் அவமானம் பொரையோடி யிருக்கிறது.

---



# "அயிரண் கார்ட்"

(ருமேனியாவில்).

---

சென்ற 1925-ம் வருஷத்தில் மேற்படி "அயிரண் கார்ட்" ஸங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. இவர்களுக்கு இஷ்ட தேவதை, மைகேல் என்பவர். மைகேல் தேவரின் வீரர்களாக இவர்கள் கருதப்பட்டார்கள். ருமேனியாவில் பொருள் ஆதார நெருக்கடி ஏற்பட்ட காலம்முதல் மேற்படி "கார்ட்டும்" கியாதிபெற்று, செல்வாக்குடன் வளர்ந்துவந்தது. இக்கூட்டத்தை அடக்க தீவிர முயற்சி எடுத்த, மந்திரி ட்யூகா என்பவரை சென்ற 1934-ம௵ ஜனவரி௴ மேற்படி "கார்ட்டு" கூட்டத்தார் கொலைசெய்து விட்டார்கள்.

ருமேனியாவில், 1926-ம் வருஷத்திய சட்டப்படி, மூன்றில் இரண்டு மெஜாரடி இருந்தால், ஒரு கவர்ன்மெண்டு நிர்வாஹம் செய்யு இயலும். அதற்கு வேண்டி, எந்தக் கக்ஷியார் நிர்வாஹம் செய்யத் தயாராக இருக்கிறார்களோ, அவர்களுக்கு பொதுத் தேர்தலில், (General Election) 100-க்கு 40 வாக்காளர்கள் வாக்களிக்க வேண்டும்.

இந்த "அயிரண் கார்ட்"டின் செய்கையால், மா. டாடரேஸ்கீயூ, என்ற லிபரல் கக்ஷித்தலைவருக்கு 1937-ம் வருஷம் எலக்ஷனில் மேற்படி 100-க்கு 40, வோட்டுகள் கிடைக்காமல் தோல்வி அடையப்பட்டார். ஆனதுபற்றி, அக்காலம் முதல் பார்லிமெண்டு மூலம் நிர்வாஹம் செய்வது என்பதே அற்றுப்போயிற்று. மா. டாடரேஸ்கீயூக்தும் 100-க்கு 38·5 வோட்டுத்தான் கிடைத்தது. அப்பால் சிறிதுகாலம் டாடரேஸ்கீயூவின் எதிர்கக்ஷிக்காரர்களான, கோகா, கீயூஸா, இவர்களுடைய "நாஷனல் கிரிஸ்டியன்" கக்ஷி என்பது நிர்வாஹம் செய்துவந்தது. இந்த நிர்வாஹமும் சரிவர நடக்கவில்லை. இதை அறிந்த கரோல் ராஜா அவர்கள் கவர்ன்மெண்டு நிர்வாஹம் சட்டத்தை சற்று நிறுத்தி வைத்துவிட்டு, "ருமேனியா குலபதி" என்ற கௌரவம்பெற்ற கிரீஸ்டியா என்பவரை ருமேனியா ஸர்வாதிகாரியாகத் தானாகவே நியமனம் செய்தார்.

"கோகா, கீயூஸா" கக்ஷிக்காரர்களும் "அயிரண் கார்டு" கூட்டத்தார்கள் போல் மிகவும் கொடுமையான செயல்கள் செய்துவந்தார்கள். ஆனால் "அயிரண் கார்ட்" டார்கள் போல் ஜெர்மானியர்கள் பேரில் ஜாஸ்தி அபிமானம் வைத்தவர்கள் அல்ல.

அரசர் கரோல் ஏற்படுத்திய ஸர்வாதிகாரத்வத்தை, குடிகள் தலைவர் மானின் என்பவர் நிராகரித்தார். ஆனால் அவரைக்காட்டிலும் பலமாக எதிர்த்தவர், "அயிரண் கார்ட்" தலைவர் காட்ரியானு என்பவர். அரசருக்கும் மேற்சொன்னவர்களுக்கும் ஏற்பட்ட, நிர்வாஹ முறைப்போரில், முக்கியமாக அந்நிய இலாகாக்கள் சம்பந்தமாக இருவர்களும்கொண்ட கொள்கையின் பேதம்தான்,

தூண்டுகோலாக இருந்தது. அதாவது, ருமேனியா ஜெர்மனி ஸர்வாதிகாரத்திற்குட்பட்டதாக இருக்கக் கூடாதென்பது அரசரின் நோக்கம்; "அயிரண் கார்ட்" தலைவரின் மனப்பான்மை மற்ரொரு விதம், அதாவது, ருமேனியாவும், ஜெர்மனியின் அதிகார எல்லைக்குள் சேர்ந்துவிட வேண்டுமென்பதே. காலகதியில், இந்த "அயிரண் கார்ட்" கூட்டத்தையும் அடக்கிவிட்டார்கள். ஆனால் மேற்படி சங்கத்தார்களே "அகில தந்தை நாட்டுக்கக்ஷி"க்காரர்கள் என்று பெயர் வகித்துக்கொண்டு புதிய ஓர் சங்கம் ஏற்படுத்திக்கொண்டார்கள். இப்புதிய கூட்டத்தார் சென்ற 1938-ம் ஹு ஏப்ரல் மாதம் கவர்ன்மெண்டை எதிர்த்துக் கிளர்ச்சிசெய்ய ஆரம்பித்ததைக் கவர்ன்மெண்டாரும் வெகு துரைவாகத் தடுக்கிவிட்டார்கள். அக்கக்ஷித்தலைவர் காட்ரியானுவையும் இதர சுமார் 1,000 மெம்பர்களையும் அரெஸ்டு செய்துவிட்டார்கள். "ருமேனியா குலபதி" கிரிஸ்டியாவிற்குப்பதிலாக நியமிக்கப்பட்ட "குலபதி" காலிநேஸ்க்யூ என்பவர் இங்கிலாந்துடன் நேசமாக இருக்கவேண்டும் என்ற கொள்கை உள்ளவர். அவரையும், புகாரேஸ்டின் ஒரு வீதியில், "அயிரண் கார்ட்"டார்கள் கொன்றுவிட்டார்கள். சில தினங்களுக்கப்பால், சிறையிலிருந்து ரகசியமாய் வெளிக்கிளம்ப முயன்ற காட்ரியானுவையும், மற்றும் சில "அயிரண் கார்ட்" தலைவர்களையும், கவர்ன்மெண்டார் சுட்டு வீழ்த்திவிட்டார்கள். காட்ரியானுவும் ரகசியமாய் ஜெர்மன் நாஸிகளுடன் ஒக்குமத்தாக இருந்துவந்தார். இப்பொழுதும் சிலதினங்களுக்கு முன், ருமேனியாவில் நடந்த கோரக் கொலைகளில் ஜெர்மனி தேசத்து "ஜெஸ்டாபோ"வின் சம்பந்தம் நன்கு வெளிவந்தது. காட்ரியானு சுடுபட்டு இறக்கும் காலத்தில், தலைவர் ஆர்ஜீஸியானு பிரதம மந்திரியாகவும், மாரிநேஸ்கோ உள்நாட்டு காபந்து மந்திரியாகவும் ருமேனியாவில் உத்யோகம் வஹித்து வந்தார்கள்.

இப்பொழுது ருமேனியா கவர்ன்மெண்டும், இராணுவக் கூட்டங்களின் ஒருமிப்பினால் நடக்கப்பட்டு வருகிறது. இந்த கவர்ன்மெண்டும், அரசர் கரோலையும் அப்பால் அவர் குமாரரையும் "அயிரண் கார்டை"யும் ஆதரித்துவருகிறது. ஜெனரல் அண்டநேஸ்க்யூ அரசர் கரோலின் மனப்பான்மையுடையவர். மைமா என்பவர் அரசருடைய குமாரர், "அயிரண் கார்ட்" இவர்களுடைய கொள்கைகளை ஆதரிப்பவர். ஜெர்மானிய நாஸிகள் முக்கியமாக "அயிரண் கார்டு"க்கு ஒத்தாசை செய்வதால், அவர்களுக்குப் பிரதிபந்தமாக இருக்கும் ஜெனரல் அண்டநேஸ்க்யூவைக் காலிசெய்துவிட வேண்டுமென்று தீவிரபுத்தி கொண்டார்கள். 1934-ம் வருஷத்தில் ஆஸ்திரியாவில் நடந்த நாஸி சம்பவங்கள் எவ்விதம் "டால்வஸ்" கொலைக்குக் காரணபூதமாக இருந்ததோ, அப்பேற்கொத்த நடவடிக்கைகளை இப்பொழுது நாம் ருமேனியாவில் காண்கிறோம்.

நாஸி சைன்யங்களுக்கு ஒரு பெரிய பயிற்சி ஸ்தானமாக ருமேனியா மாறிவிட்டது. ராஜகுமாரரும் அவர் பிரதம மந்திரியும் கேவலம் பொம்மைகளாக இருந்துகொண்டு, நாஸி சைன்யம் நடிக்கும் கோலாஹலங்களைப் பார்த்துக் கொண்டு திக்கற்றவர்களாக இருந்துவருகிறார்கள்,



# கதம்பம்.

1. "ஒன்று நிச்சயம். அடுத்த யுத்தத்தில் இதாலியைக் கூட்டாளியாக வைத்துக்கொள்பவர் தோல்வியடைவது நிச்சயம்."

(பீல்ட் மார்ஷல் வான் ப்ளாம்பர்க்).

2. "இப்பொழுது, யுத்தம் ஆரம்பிப்பதற்குமுன் இருந்ததைக்காட்டிலும் அளவிடமுடியாது பிரிடன் வலுவடைந்திருக்கிறது. இனிமேல் தற்காப்பு நிலை இல்லை."

(ஜெனரல் ஸ்மட்ஸ், வின்பர்க் O. F. S., டிஸம்பர் 11).

3. "இந்த யுத்தத்தில் புகுந்தபொழுது தனக்குக் கஷ்டப்படவேண்டிய நிலை வந்துவிடுமென்று இதாலிக்குத்தெரியும்."

(ரோமின் விசேஷ அறிக்கை, டிஸம்பர் 9).

4. "கிரீஸைத் தாக்கியது முன் யோசனையின்பேரிலல்ல."

(ரோம் ரேடியோ, நவம்பர் 5).

5. "நான் உஷாராக இருக்கிறேன்."

(அடால்ப் ஹிட்லர், பெர்லின், டிஸம்பர் 10).

6. "இம்மாதிரியான யுத்த எதிர்ப்புப் பிரசாரம், இந்த நாட்டின் உண்மையான உணர்ச்சிகளுக்குச் சிறிதும் பொருத்தமென்று நான் நம்பவில்லை."

(மேன்மை தங்கிய வைஸ்ராய், கல்கத்தா, டிஸம்பர் 16).

7. "நாம் அநேகம் செய்திருக்கிறோம். செய்யவேண்டியது இன்னுமிருக்கிறது. யுத்தத்தில் வெற்றிகரமான முடிவுக்கு வர நாம் எவ்வளவுதூரம் ஒத்தாசை செய்யவேண்டுமென்று ஆலோசிக்கவேண்டியது நம்முடைய பொறுப்பு."

(மேன்மை தங்கிய வைஸ்ராய், கல்கத்தா, டிஸம்பர் 16).

8. "ஜெர்மனி தோற்றுவிட்டால் நமக்குப் போதும்."

(மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில், லண்டன், டிஸம்பர் 17).

9. "இப்பொழுது நடக்கும் சண்டையானது பிரிடனுடைய தொழிலாளர் பலத்துக்கும் ஐரோப்பாவிலுள்ள ஜயித்தவும் ஜயிக்கப்பட்டவுமான நாடுகளின் பொருளாதாரங்களுக்கும், வலிமைக்கும்தான். நிச்சயமாக நம்முடைய முயற்சியினால் எதிரியை அழித்துவிடுவோம்."

(லார்ட் பீவர் ப்ரூக், லண்டன், டிஸம்பர் 17).

# ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

## A—ஆங்கிலத்தில் ஒலிபரப்பு.

### ஜெர்மனியின் திருட்டுத்தனம்; ஏய்ப்பு.

ஏதாவதொன்று நடந்து, அதைப்பற்றி பிரிடிஷ் அறிக்கை வெளியாகச் சற்றுத் தாமதப்பட்டால் முந்திக்கொண்டு பிரிடனுக்கு விரோதமாக உடனே பிரசாரம் செய்ய ஜெர்மனி ஆரம்பித்து விடுகிறது. ஏதாவது ஒரு கப்பல் முழுகி விட்டால் அதைக் காப்பாற்ற வந்த பிரிடிஷ் நாசகாரியின் இருப்பிடத்தைத் தெரிந்துகொள்ளப்பார்க்கிறது. ஒன்றும் நடக்காதபோதும்கூட நடந்ததாகக் கற்பிக்கிறது. இதை மறுத்து பிரிடன் அறிக்கைவிடுக்கும்போது ஏதாவது முக்கிய சமாசாரங்கள் வெளி வராதாவென்று பார்க்கிறார்கள்.

இதையொட்டி டிஸம்பர் 2-ல் துணையோடு சென்ற 15 பிரிடிஷ் கப்பல்கள் நஷ்டமானதாகச் சொல்லிக்கொண்டு அதைப்பற்றி பிரிடிஷ் ஒலிபரப்புப் பிரஸ்தாபிக்கவில்லையென்று சொல்லுகிறது. பிரிடிஷ் நஷ்டங்களைப்பற்றிய செய்தி வாரத்துக்கொருமுறைதான் வெளியிடப்படும்: ஜெர்மன் ரேடியோ கேட்கும்போதெல்லாம் செய்திகள் வெளி வரா. பிரிடிஷ் இதாலிய ஒலிபரப்புகளை ஒப்பிட்டுப்பார்த்தால் இதாலியின் திருட்டுத்தனமும் வெளிப்படும். தோற்றுப் போனால் இதாலியானது தான் ஒலிபரப்பாது சும்மாயிருந்துவிடும். மேற்குப் பாலைவனத்தில் பிரிடன் படையெடுத்து 4,000 இதாலிய சிப்பாய்களைக் கைது செய்துவிட்டது. ஒரு இதாலிய சேனாபதியும் கைது செய்யப்பட்டார். இதைப் பற்றிப் பிரஸ்தாபமே கிடையாது. இதை மறைப்பதற்குக் காரணத்தையும் காணோம்.

### ஜெர்மன் கடற்படைக்குப் பிரதம சிகிச்சை.

நார்வே யுத்தத்தில் ஜெர்மன் ஸப்ளை கப்பல்களைப் பத்திரமாய் நார்வேய்க்குக் கொண்டுபோய்ச் சேர்த்ததற்காக 'ஐரன் க்ராஸ்' என்ற பதக்கத்தை, கடற் சேனாபதி ஸ்டோபாஸுவுக்கு ஹிட்லர் அளித்ததாக டிஸம்பர் 6 ஒலிபரப்பு சொல்லுகிறது. நார்வே யுத்தம் நடந்து ஒரு வருஷமான பிறகு விழித்துக்கொண்டிருக்கிறார்கள். இச்சேனாபதி செய்த காரியம் ஒன்றுமில்லை. அந்தச் சமயத்தில் ஜெர்மன் துருப்புக்களை ஏற்றிப்போன 40 துருப்புக் கப்பல்களும், ஸப்ளைக் கப்பல்களும் மூழ்கப்பட்டு ஆயிரக்கணக்கான சிப்பாய்கள் மாண்டனர்.

### இதாலியக் கடற்படைக்கும் பிரதம சிகிச்சை.

டாரண்டோவில் இதாலி பெரிய நஷ்டத்தையும், தோல்வியையும் அடைந்தது. இதை ஒரு சிறு சம்பவமென்று சொல்லி இதாலி மறைக்கிறது. இதோடு



நில்லாமல் டாரண்டோ சண்டைக்குப் பிற்பாடு பிரிடிஷ் கப்பல்களில் 8 குரூஸர்களையும், ஒரு யுத்தக்கப்பலையும், ஒரு விமானமேற்றிச்செல்லும் கப்பலையும், வேறு 8 கப்பல்களையும், இரண்டு நீர் மூழ்கிகளையும், துணையோடு சென்ற இரண்டு வியாபாரக் கப்பல்களையும் நஷ்டப்படுத்தி விட்டதாக இதாலி சொல்லிக் கொள்ளுகிறது. பிறகு இந்தப் பெரும் புளுகை உலகம் நம்பாதென்று இவைகள் முழுகியிருக்கலாம் அல்லது பழுது பட்டிருக்கலாமென்று மாற்றிக்கொள்ளுகிறது. உண்மையில், டாரண்டோவில் நவம்பர் 11-ல் நடந்த சண்டைக்குப் பிறகு நவம்பர் 27-ல் ஸார்டீனியாவுக் கப்பால் நடந்த சண்டை தான் ஏற்பட்டது. அதில் பிரிடிஷ் நஷ்டம் ஒன்றும் கிடையாது. பெர்விக் என்ற ஒரு சண்டைக் கப்பல் மட்டும் பழுது பட்டது. இதாலிக்கோ ஒரு யுத்தக்கப்பலும், 3 குரூஸர்களும் இரண்டு நாசகாரிகளும் அடிபட்டன.

### ஜெர்மனி ஸ்தாபிக்கப்போகும் புது-உலகம் வெட்ட வெளிச்சமாயிற்று.

டிஸம்பர் 3 ஒலிபரப்பில் ஹங்கேரியின் பிரதம மந்திரி சிநேகபாவத்தோடு பேசியதைப்பற்றி ஜெர்மனி பிரமாதப்படுத்துகிறது. யுத்தக் காலத்தில் புது அமைப்புக்குத்தக்க படம் மாற்றி அமைத்துக்கொள்ளத் தயாராயிருப்பதாக பிரதம மந்திரி சொன்னதாகவும் ஜெர்மனி ஒலிபரப்புகிறது.

மாற்றி அமைத்துக்கொள்ளுவதென்றால் உள்ளூர் ஜனங்களின் வாயில் மண்ணைப்போட்டுவிட்டு உணவுகளை ஜெர்மனிக்கனுப்பப்போவதாக அர்த்தம். டிஸம்பர் 4-ல் பிரதம மந்திரி அசட்டுத்தனமாய் வெளியிட்டபடி ஹங்கேரி இனி தன்னுடைய உணவுகளைக் குறைத்துக் கொள்ளவேண்டுமென்றும், ஹங்கேரிக்கு ஏராளமாய் உணவு இருப்பதாயும், அச்சு நாட்டார்கள் வெகு கஷ்டப்படுவதாயும் சொன்னார்.

அச்சு நாடுகளுக்கு உணவுகள் அனுப்ப ஹங்கேரியில் இனி கோதுமை மாவோடு சோளமாவையும், உருளைக்கிழங்கு மாவையும் கலந்து விற்கப்போகிறார்கள். கொழுப்பானது யூதர்களிடமிருந்து பிடுங்கிப் பிறருக்கு விற்கப்படும்.

ஜெர்மனியில் கொழுப்பானது குறைந்துபோய் விட்டது. பொஹீமியாவிலிருந்தும், மொராவியாவிலிருந்தும் 'ருமேனியாவுக்' கென்று ஆடம்பரமாய்ப் பெரிய பெட்டிகளையொட்டிக் கொழுப்பு ரகஸ்யமாய் ஜெர்மனிக்கனுப்பப்படுகிறதென்று நம்பத்தகுந்த செய்தி ஒன்று கிடைத்திருக்கிறது. ருமேனியாவை முன்னேற்றப்போட்டிருக்கும் 10 வருஷ திட்டத்தின் முதற்காரியம் இதுவே.

### ப்ரஸீல் கொட்டைப்பாக்கைக் கடிப்பது கடினம்; ப்ரஸீல் ஜெர்மன் வலையில் சிக்காது.

"சண்டையிலிருந்து சமாதானம் வராது" என்று ப்ரஸீல் பிரஸிடெண்டு வர்காஸ் சொன்னதை ஜெர்மன் ரேடியோ ஒலிபரப்பியிருக்கிறது. ஜெர்மானியர்

களுக்கு சண்டைபோட மனமே ஒழிய சமாதானத்தைத் தேடமாட்டார்கள். ப்ரஸீல் ஜெர்மனியின் பக்கம் சேராது. நார்வே, ஹாலண்டு, போலண்டு தேசங்களுக்குத் தன் காரியஸ்தர்களை நியமித்து அவர்களை லண்டனில் தங்கியிருக்கும்படி ப்ரஸீல் அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது.

## ஹா-ஹா-பிரபுவின் புளுகு ரத்தினமாலை.

**பிரிடனுக்கு விற்கப்படும் அமெரிக்க விமானங்கள்:—**

இந்த விமானங்கள், ஜெர்மன், பிரிடிஷ் விமானங்களைக்காட்டிலும் மட்டமானதால், இவைகளைக்கொண்டுவந்தாலும் யுத்தத்துக்கு உபயோகப்படமாட்டா என்று ஹா-ஹா-சொல்லுகிறார்.

இது தப்பு. லாக்ஹீட்-ஹட்ஸன் என்ற அமெரிக்க விமானங்களைப் பிரிடன் கடற்கரைப் பாதுகாப்பு இலாகா உபயோகப்படுத்தினதில் இவை முதல்தரமான சண்டை விமானங்கள் என்று தெரிகிறது.

“விமானிகளைப் பழக்கவும், சமீப கீழ்நாட்டு யுத்தத்துக்கும்தான் அமெரிக்க விமானங்கள் உபயோகப்படுமெ”ன்றும் சொல்லுகிறார்.

சமீப கீழ் நாடுகளில் பிரிடன் இதாலியை எதிர்த்து நிற்கிறது. ஹா-ஹா-சொல்லுகிறதிலிருந்து இதாலிய விமானப்படையை ஜெர்மனி மதிக்கவில்லையென்று வெளியாகிறது.

**சாமான்கள் வாங்கப் பணம் :—**

பிரிடனுக்குப் பணமில்லையென்று ஹா-ஹா-சொல்லுகிறார்.

யுத்தம் ஆரம்பித்தபோது பிரிடன் முதலில் 100-க்கு இரண்டு பாகம்தான் ஜெர்மனிக்கு அயல்நாடுகளில் முதலுண்டு.

இப்பொழுது ஜெர்மன் வியாபாரங்களெல்லாம் தான் பிடித்த அல்லது அரட்டுகிற தேசங்களோடுதான். மற்ற வியாபாரங்கள் நின்றுபோயின. சரக்குகளை வாங்குவதற்கும், நோட்டுகளைத்தான் கொடுக்கிறார்களே ஒழிய பணம் கிடையாது. பிரிடனோ அமெரிக்காவில் வாங்கும் சாமான்களுக்கு டாலர்களை ரொக்கமாய்க் கொடுக்கிறது.

பிரிடனுக்குப் பணமில்லையென்று லோதியன் பிரபு சொன்னதின் தாத்பரியம் அமெரிக்காவோடு ரொக்க வியாபாரம்செய்ய டாலர் பணம் கையிலில்லையென்பதுதான்; செல்வத்துக்கொரு குறைவுமில்லை.

---

# B—ஆசியா பாஷைகளில் ஒலிபரப்பு.

---

## ஜெர்மனி ஒரு மஹாராஜாவை சிருஷ்டி செய்துவிட்டது.

ஜெர்மானியர் பொய் சொல்லுவது சகஜமானாலும் டிஸம்பர் 4-ம் தேதி புளுகு, மற்றவைகளைத் தோற்கடித்துவிட்டது. இந்தியாவில் நடக்கும் யுத்த ஏற்பாடுகளைப்பற்றிக் குற்றம்பேசியதற்காக மஹாராஜா ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்று ஒலிபரப்பியிருக்கிறது. இவர் கோபால்பூர் மஹாராஜாவாம்; இவருக்கு இரண்டு வருஷம்தான் சிறையாம். இந்தியாவில் கோபால்பூர் என்ற இடமும் கிடையாது; ஆகையால் கோபால்பூர் மஹாராஜாவும் கிடையாது. செவ்வாய்க்கிழமையன்றோ, மற்று எந்த நாளிலும் ஒரு மஹாராஜாவையும் கைது செய்யவில்லை. ஆனால் செவ்வாய்க்கிழமையன்று மிஸ்டர் ராஜகோபாலாச்சாரியார் கைது செய்யப்பட்டார். இவர் பெயரிலுள்ள ‘ராஜா’ கைதுசெய்யப்பட்டதாகச்' சொல்லிவிட்டார்கள். புளுகைப் பெரிதாக்கும் சுபாவமுள்ளவர்களாதலால் ‘ராஜா’வை ‘மஹாராஜாவா’க்கி, ஒரு வருஷ தண்டனையை இரண்டு வருஷங்களாக்கி, சாதாரணக்காவலைத் தனிக்காவலாக்கிவிட்டார்கள். இந்தியச் சட்டத்தில் இரண்டு வருஷங்களுக்குத் தனிக்காவலென்பதே கிடையாது.

## அராபிய நாடுகளை அபகரிக்க எண்ணம்.

டிஸம்பர் 6-ம் தேதி ஒலிபரப்பில் ஜெர்மனியும், இதாலியும் கவலையோடு வார்த்தைகளைத் தொடுத்து அராபியர்களைப்பற்றி அறிக்கை விடுத்திருக்கின்றன. இதில் அராபியர்களுடைய சுதந்தரத்தைப் பாதுகாப்பதாக ஒரு வார்த்தையும் கிடையாது. ஒருவிதமான வாக்கும் கொடுக்கவில்லை. ஊடுருவிப்பார்த்தால் அச்சுநாடுகள் ஏதோ வம்புசெய்ய உத்தேசித்திருப்பதாயும் தெரிகிறது.

“ஜெர்மனியானது அராபியர்களுக்கு நேசநாடு; அவர்கள் க்ஷேமத்தைக் கோருகிறது. சரித்திரத்தாலும், தேசியத்தாலும், அவர்களுக்கு ஏற்பட்ட அந்தஸ்தை அவர்கள் அடையவேண்டுமென்று விரும்புகிறது. அராபிய சுதந்தரத்தை ஜெர்மனி இதுவரையில் கவனித்துவந்திருக்கிறது. இனியும் அன்போடு கவனித்துவரும்” என்று சாரமில்லாப் பேச்செல்லாம் பேசியிருக்கிறது. ஆனால் வெளிப்படையாக அராபிய நாடுகளை அபகரிக்கப்போவதில்லையென்று வாக்குக் கொடுக்கவில்லை.

அராபியர்கள் க்ஷேமத்தைக் கோருகிறார்களாம்! நார்வே, போலண்டு முதலிய நாடுகளின் க்ஷேமத்தைக் கோரியதின் முடிவாக, அவைகளைப் பிடித்துக் கொண்டு இப்பொழுதுதான் இவைகளுக்கதிக க்ஷேமம் ஏற்பட்டதாகச் சொல்லுகிறார்கள். அராபியர்கள் உலகத்தில் க்ஷேமமாயிருக்கவேண்டுமென்பதற்கும், ஜெர்மானியர்கள்தான் உயர்ந்த ஜாதி; ஆசியர்கள் மூடர்களென்பதற்கும் விருத்தமாயிருக்கிறது,

## கண்டுபிடித்துவிட்டார்கள்.

பிரிடிஷ் ஆலயங்களைத் தகர்ப்பதற்கு ஜெர்மனி ஒரு காரணத்தைக்கண்டு பிடித்துவிட்டது. (டிஸம்பர் 3உ செய்தி) பிரிடிஷ் ஆலயங்களில் யுத்தத் தளவாடங்கள், ஆகாராதிகளைச் சேர்த்துவைக்கிறதாக ஒரு அனுமதேய அமெரிக் கப்பத்திரிகை சொல்லுகிறதாம். ஸெண்ட்பால்ஸ், வெஸ்ட்மின்ஸ்டர் ஆலயங்களை இடித்ததின் காரணம் இதுதானும். ஆனால் ஒரு சந்தேகம்; தேச சரித்திரத்தி லும், சிற்ப அமைப்பிலும் பேர்போன கட்டடங்களைப்பார்த்துப் பொறுக்கி எதிர்ப்பதற்குக் காரணமென்ன ?

---

# சென்னை யுத்த நன்கொடை கூட்டுறவு நிதி.

---

இதுவரை சென்னை ரெட் கிராஸ் சங்கத்திற்கு மற்ற சில பட்டணங்களைப் போல், நன்மை நிதியொன்று ஏற்படவில்லை. யுத்தம் ஆரம்பித்த வுடனேயே, ரெட் கிராஸ் சங்கமும், ஸெயின்ட் ஜான்ஸ் என்ற சங்கமும், ஒற்றிணங்கி பொருள் சகாயத்திற்காக வேண்டி நின்றனர். ஆனால் நாலு மாதத் தில், யுத்தகாலத்தில் ரெட் கிராஸ் சங்கத்தார், வியாதியஸ்தருக்கும், காயப்பட்டவர் களுக்கும் செய்யும் காரியத்தைத் தவிர, அநேகவித சகாயங்கள் அவசியமென்று, தெரியவந்ததால், சகல பரோபகார இயக்கங்களின் வேலைகளையும் ஒன்றாய் இணைத்து 1940-ம் வருஷ துவக்கத்திலேயே, பெருமை வாய்ந்த கவர்னரின் யுத்த நன்கொடை நிதி என்னும் ஒரே தலைப்பின் கீழாக்கினர்.

ஜார்ஜ் மன்னர் பேராலுள்ள கப்பலோட்டிகளின் நிதி, யுத்தத்தில் பார்வை யிழந்தவர்க்காக ஸென்ட் டன்ஸ்டன் இயற்றிய நிதி, என்றவை போன்ற, இயக் கங்களுக்கென்று பிரத்தியேகமாய் பணம் அனுப்பப்பட்டால், அவைகளுக்கே, கொடுத்தவர்கள் விருப்பப்படி அனுப்பிவிடுகிறார்கள். பொதுவாய் தரும் தொகை களை, அவசரத்தின்படி செலவழிக்கின்றனர். பொது தொகைகளில், மிகுந்த பணத்திலிருந்து, பெப்ரவரி மாதம், 1940-ம் வருஷம், ஜார்ஜ் மன்னர் பேராலுள்ள கப்பலோட்டிகளின் நிதிக்காக 30,000 ரூபாய் அனுப்பப்பட்டது. அதே நிதிக்கு, ஆகஸ்ட் மாதம் ஒரு லட்சம் ரூபாய் அனுப்பியிருக்கிறார்கள். இந்நிதி கப்பலில் உழைக்கும் சகலருக்கும், அவரைச் சார்ந்திருக்கும் குடும்பத்தினருக்கும், வியா பார்க் கப்பலில் வேலை செய்வோருக்கும், கடல் படையாளரின் உதவி பகுதியா ருக்கும், பாத்தியப்படுகிறது. பிளான்டர்ஸிலும், வட பிரான்ஸிலும், சேரிட்ட



நஷ்ட நிவர்த்திக்காக, ரூபாய் ஒரு லட்சமும்; புகலிடம் பெற்றவர்களின் ஆதர விற்காக, 60,000 ரூபாயும், பிரிடிஷ் ரெட் கிராஸ் சங்கத்திற்கு அனுப்பியிருக் கிறது. சென்னை ஆம்புலன்ஸ் நிதி வழியாய், சமீப கிழக்கு பிரதேசங்களுக்கு, யுத்த கால பிரயோகத்திற்காக, 34,450 ரூபாய் விலைபெற்ற, பத்து போர்களத்து வைத்தியச் சாலைகள் வாங்க அனுப்பியிருக்கிறது. இது தவிர ராஜாங்க இந்திய கப்பல் படையாளர்க்கு சிறு சிறு, இனம்களுக்காக 2000 ரூபாய், டாக் எச் என்னும் நிதிக்காக 2000 ரூபாய் அனுப்பியிருக்கிறது.

இதற்கு மேற்பட ரெட் கிராஸ் சங்கத்தினர் நடத்திவரும், யுத்த உப சாதன பண்டசாலைக்கு, ஆரம்பத்திலிருந்தே பொருள் உதவி செய்துவருகின்றனர்.

இந்நிலயத்தில், ஆஸ்பத்திரி வேலைகளுக்காக ரெட் கிராஸ் சங்கம் செய்யும் ஊழியத்தோடு, மேற்படி சங்கத்தார் கவர்னரின் நன்கொடை இயக்கத்தின் உருபினரே ஆனதால், மற்றும் பற்பல சேவைகளும் சேர்த்து நடத்திவருகிறார்கள். போர் புரியும் துருப்புகளுக்கு அனுப்பப்படும் சாதனங்கள் யாவும் இந்நிலயத்தின் வழியே தயாரிக்கப்படுகின்றன. பின்னல் உடுப்புகளுக்காகவும், மற்றும் சாதனங் கள் வாங்கவும் ஏறக்குறைய 36,000 ரூபாய் இப்பண்டசாலைக்குக் கொடுத்திருக் கின்றனர். சமீப கீழ் பிரதேசங்களிலிருக்கும் படையாளருக்காக அனுப்பும்படி, சகல சாதனங்களும் செய்யும்படி, சற்றேறக்குறைய 200 இடங்களில் தொழில் நிலயங்கள் ஸ்தாபித்திருக்கிறார்கள். இவ்வியக்கங்களில், மேஜோடுகள், கழுத்துப் பட்டைகள், பனியன்கள், கை உரைகள் தயாரிக்கப்படுகின்றன. அனுமதிபெற்ற மாதிரியில் செய்யப்பட்ட ஆஸ்பத்திரி உடுப்புகள், காயம் கட்டும்போது உதவும் பாண்டேஜூம் செய்கின்றனர். யாதாமொரு தலைவியின்கீழ், இப்படி கைவேலை செய்ய ஓர் கட்டடம் ஏற்படுத்த வெளியூரார் யாரும் விரும்பினால், பின் வரையும் விலாசத்திற்கெழுதி, சகல உதவியும் பெற்றுக்கொள்ளலாம். தங்களுக்கென்று ஏற்படுத்திய தலைவியே எழுதினால், சர்வமும் அறிந்துகொள்ளலாம்—

லேடி சூபரின்டென்டெண்டு,
யுத்த சப்ளை டெப்போ,
ரெட் கிராஸ் பில்டிங்,
எழும்பூர், மதராஸ்.

ஜூலை மாதத்தில், சென்னை யுத்த நன்கொடை கூட்டுறவு நிதி என்னும் இயக்கத்தார், பெருமை வாய்ந்த கவர்னர் யுத்த நிதி என்ற பெரிய இயக்கத்தில் இணைக்கப்பட்டார்கள். மிச்சப்பட்டிருந்த பணத்தொகை யுத்த நிதி பொக்கிஷ தாரிடம் ஒப்புவிக்கப்பட்டபோதிலும் மீண்டும், நன்கொடை கூட்டுறவு நிதியின ரிடமே கொடுத்துவிட்டார்கள். மிச்சம் 2,72,000 ரூபாய் இருந்ததாம். இப் பவும் யுத்த உப சாதனங்களுக்காகவும் வேறு எவ்விதமாயும் தர்மம் செய்ய என்று அனுப்பப்படும் பணத்தொகைகளும், முன்போல் செலவு செய்யப்பட்டு வருகிறது.

ஆகவே மேற்படி கமிட்டியார் யுத்தம் ஆரம்பமான 2-ம் வருஷத்தில் பராமரிப்புக்கான வேலைகளை திரும்பவும், துடங்கி நடத்திவருகிறார்கள். லண்டன் நகராதிபதி நிதிக்காக 50,000 ரூபாய் அனுப்பினார்கள். இதை விளம்பரம் செய்ததால் கிடைத்த தொகை சுமார் 13,300 ரூபாய் பெருமான ஆயிரம் பவுன்களும், அதற்காகவே அனுப்பிவிட்டனர்.

நாமகரணத்திலும், அமைப்பிலும், பல மாறுதல்கள் ஏற்பட்டபோதிலும், பராமரிப்பின் ஊழியத்தை ஒழுங்காய் நடத்திவருகின்றனர். இவ்வேலை இதற்குள் மகா முக்கிய திசையடைந்திருக்கிறது. இன்னமும், சென்னை மாகாணத்திலிருக்கும், பரோபகார சிந்தையுள்ளார், பரிபாலனம் செய்யும்வரை, தளராமல், வளர்ந்துவரும் என்பது நிச்சயம்.

---



## புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் XXIV.

---

| | | | | |
|---|---|---|---|---|
| 1940— | | | | மணி. |
| டிஸம்பர் 21, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலை | 6.30 |
| 22, ஞாயிற்றுக்கிழமை. | ஆலங்குடி | ... | ,, | 5.30 |
| | கீரனூர் | ... | ,, | 5.30 |
| | விராச்சிலை | ... | ,, | 5.30 |
| | ராமச்சந்திரபுரம் | ... | ,, | 5.30 |
| 23, திங்கட்கிழமை ... | புதுப்பட்டி (பொன்னமராவதி). | | ,, | 5.30 |
| | ராயவரம் | ... | ,, | 5.30 |
| | ஏம்பல் | ... | ,, | 5.30 |
| | வேங்கடக்குளம் | ... | ,, | 5.30 |

---

# இந்தியாவின் பாதுகாப்புக்கு உதவுங்கள்

## பாதுகாப்பு சேமிப்பு ஸ்டாம்புகளை தவருமல் வாங்குங்கள்.

---

*ஒரே சமயம் 10 ரூபாய் கொடுத்து பாதுகாப்பு சேமிப்பு சர்டிபிகேட்டை வாங்க முடியாதவர்களுக்கு இந்தியா கவர்ன்மென்டார் ரூ. 1, அ. 8, 4 விலை பெருமான பாதுகாப்பு சேமிப்பு ஸ்டாம்புகளையும், கார்டுகளையும் வெளியிட்டிருக்கின்றனர். கார்டுகளில் <u>இந்தவிதமான ஸ்டாம்புகளை ஒட்டுவதற்கு</u> இடம் விடப்பட்டிருக்கிறது. 10 ரூபாய் விலை பெருமான ஸ்டாம்புகளை சேர்ந்த பிறகு போஸ்டாபீசுக்கு கார்டை எடுத்துக்கொண்டு போய் பாதுகாப்பு சேமிப்பு சர்டிபிகேட்டுக்காக கொடுத்து மாற்றிக்கொள்ளலாம்.*

*இந்த விதமான ஸ்டாம்புகளும், கார்டுகளும் சேமிப்பு நிதியை வைத்திருக்கும் எந்த தபாலாபீசிலும் கிடைக்கும்.*

*பாதுகாப்பு சேமிப்பு கார்டுள்ள ஒவ்வொருவரும் தம் பெயரையும், விலாசத்தையும் கையொப்பம் அல்லது பெருவிரல் குறியையும் ஸ்டாம்புகள் ஒட்டுவதற்கு முன்பு கார்டின்மேல் எழுதவேண்டும். சர்டிபிகேட்டையுடையவர் பாதுகாப்புக்காக இந்த எச்சரிக்கை அவசியம்.*

**பாதுகாப்பு சேமிப்பு சர்டிபிகேட்டுகள் ரூ. 10, 50, 100, 500 வரையில் கிடைக்கும். 10 வருடங்களின் கடைசியில் 100க்கு 3½ ரூபாய் வீதம் வட்டிக்கு வட்டியாக வருமான வரி இல்லாமல் ஒவ்வொரு பத்து ரூபாய்க்கும் ரூ. 13-9-0 ஆக கிடைக்கும். எந்த வழியிலும் சேமிப்பு தொகை குறையாது. ஒவ்வொருவரும் 5000 ரூபாய் வரையில் போடலாம். அருகாமையிலிருக்கும் தபாலாபீசில் விசாரிக்கவும்.**

யுத்த சேமிப்பு இயக்கத்தாரால் வெளியிடப்பட்டது,
தபால் பெட்டி 11, சென்னை.

Sri Brihadamba State Press, Pudukkottai, 4,400—21-12-40.